

'வால்மீகியும் கம்பனும் கண்ட'

சமூகங்கள்

நா. வரதராஜூலு நாயுடு

கம்பன் கழகம்-சென்னை

'வால்மீகியும் கம்பனும் கண்ட' சமூகங்கள்

'வால்மீகியும் கம்பனும் கண்ட' சமூகங்கள்

[அமரர் ஏவி. எம். அறக்கட்டளை நினைவுச் சொற்பொழிவு 1987]

நா. வரதராஜுலு நாயுடு

வெளியீடு :

கம்பன் கழகம்

சென்னை - 85

முதற் பதிப்பு : ஆகஸ்டு, 1987

முதற்பதிப்பின் விற்பனை உரிமை :

வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு,
தி. நகர், சென்னை - 17

விலை : ரூ. 14-00

(இந்நூலின் முதற் பதிப்பு மட்டும்
ஏவி. எம். அறக்கட்டளை
நிறுவனத்தாரால் வெளியிடப்படுகிறது.)

மேலட்டை ஓவியம் : உகி

மாருதி பிரஸ், 173, பீட்டர்ஸ் ரோடு, சென்னை - 600 014.

பதிப்புரை

சென்னைக் கம்பன் கழகம் 1975 இல் நிறுவப்பெற்றது. திரு. ஏவி. மெய்யப்பன் அவர்கள் 12-8-1979 அன்று இயற்கை அடைந்தமை வரையில், கழகத்தின் துணைத் தலைவர்களுள் ஒருவராக இருந்து வந்தார்கள்.

சினிமாத்துறையில் பெரும் பெயர் பெற்றிருந்த அவர்கள், கம்பன் கழகத்தோடு தொடர்பு கொண்டதிலிருந்து, கழகத்தின் வளர்ச்சியிலும், கம்பனுடைய கவிநயத்தைப் பருகுவதிலும், முழுமையான ஈடுபாடு கொண்டிருந்தார்கள். ஒவ்வோர் ஆண்டும் தாம் தலைவராக இருந்த ஏவி.எம். அறக்கட்டளையினுடைய, ஏவி.எம். இராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் கம்பன் விழா நிரந்தரமாக நடைபெறுவதற்கு வழிவகுத்ததோடு, கழகத்திற்கு அவ்வப்போது தேவையான உதவிகள் அனைத்தையும் நிறைந்த உள்ளத்துடனும், மட்டற்ற மகிழ்ச்சியுடனும் செய்து வந்தார்கள்.

அன்னாருடைய மறைவுக்குப்பின், அமரர் ஏவி.எம் அவர்களின் குடும்பத்தினர், அதே ஈடுபாட்டையும், அக்கறையையும் காட்டி வருகிறார்கள். அமரர் ஏவி.எம். அவர்களுடைய நினைவில் ஆண்டுதோறும் கம்பனைப்பற்றி சென்னைக் கம்பன் கழகத்தின் ஆதரவில் ஒரு நினைவுச் சொற்பொழிவு நடக்க வேண்டுமென்று விரும்பி, அதற்காக ஆவன செய்வதற்கு முன் வந்தார்கள்.

அந்தத் திட்டத்தின்படி அமரர் ஏவி.எம். அவர்களின் இவ்வாண்டின் (நான்காம் ஆண்டைய) நினைவுச் சொற்பொழிவு 1987ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 28, 29 தேதிகளில் ஏவி.எம் இராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது.

சொற்பொழிவை திரு நா. வரதராஜுலு நாயுடு அவர்கள் 'வால்மீகியும் கம்பனும் கண்ட சமூகங்கள்' என்ற தலைப்பில் நிகழ்த்தினார்கள்.

முதல் நாளான 28.7.87 செவ்வாய்க்கிழமை அன்று 'கோகுலம்' ஆசிரியர், குழந்தைக் கவிஞர், திரு. அழ. வள்ளியப்பா அவர்கள் தலைமை ஏற்றுத் தொடங்கி வைத்தார்கள்.

இரண்டாம் நாளான 29.7.87 புதன்கிழமை அன்று கவிஞர், திருமதி சௌந்தரா கைலாசம் அம்மையார் அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

இந்த நினைவுச் சொற்பொழிவின் நூல் வடிவமே இது. இதனை நூல் வடிவாக்கி, அச்சிடும் பொறுப்பையும், அமரர் ஏவி.எம் குடும்பத்தினரே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தச் சொற்பொழிவினை ஏற்பாடு செய்து, அதனைக் கம்பன் கழகத்தின் மூலம் நிறைவேற்றிய, ஏவி.எம் குடும்பத்தார்க்கு எங்கள் மனம் கனிந்த நன்றி.

7-8-87

கம்பன் கழகத்தார்
சென்னை

முன்னுரை

இராமாயணம் இந்தியப் பண்பாட்டின் கருவூலம்.

ஆதிகவி வால்மீகி இராமாயணத்தைப் பாடிய காலத்துக்குப் பின், பாரத நாட்டின் பல்வேறு பகுதிகளிலும், பல காலங்களிலும் பல மொழிகளில், புலவர் பலர் வழிநூல்களை இயற்றியுள்ளனர். அவர்கள் இராமாயணப் பாத்திரங்களையும், காவிய நிகழ்ச்சிகளையும் பல கோணங்களில் நோக்கியும், ஆராய்ந்தும், தத்தம் சூழ்நிலை வளமும் கற்பனைச் செறிவும் பொலிய அவ் வழி நூல்களை இயற்றினர். அவற்றுள் தனிப் பெரும் சிறப்பு வாய்ந்தது தமிழ்மொழியில் கவிச் சக்கரவர்த்தி கம்பன் இயற்றிய 'இராமாவதாரம்'.

ஸம்ஸ்க்ருத மொழியிலோ, தமிழ் மொழியிலோ, முறையான கல்வி, கேள்வி, பயிற்சிகளைப் பெறாதவன் எனினும், இந்நூல்களைக் கற்குங்கால் அவ்வப்போது என் மனத்தைத் தூண்டிய கருத்துக்களைக் குறித்து வைத்திருந்தேன். அக் குறிப்புக்கள் இந்நூலை எழுதும் முயற்சிக்குத் துணை புரிந்தன.

கம்பனை உரைகல்லாகக் கொண்டு முதலில் வால்மீகியைப் படித்தேன்; பின்னர் வால்மீகியை உரைகல்லாகக் கொண்டு கம்பனைப் படித்தேன். மீண்டும் இரு மகா காவியங்களையும் ஒருங்கே படித்தேன். பல முறை பயின்றேன். இவற்றுக்கு முன்னோர் மொழிந்த உரைகள் சிலவற்றை ஓரளவு கண்டேன்.

இந்நூலுள் வரும் வால்மீகியின் பாடல்களின் தமிழாக்கம் என்னுடையது; கருத்துத் தழுவியது. நூலைப் படிப்போர்

நின்று, நினைந்து, கற்றனைத்தூறும் அறிவுடன் நுகர உதவக் கூடும் எனச் சில இடங்களில் ஸம்ஸ்க்ருத சுலோகங் களையும், சுலோகப் பகுதிகளையும், பதம் பிரித்துக் காட்டி யுள்ளேன். தமிழ் எழுத்துக்களில் ஸம்ஸ்க்ருத மூலத்தை அச்சிடுவதில் உள்ள இடர்ப்பாடுகளை எண்ணிப் பல சுலோகங்கள் காட்டப்படவில்லை.

கம்பராமாயணப் பாடல்களுக்கு விளக்கம் கூறப்பட வில்லை. இந்நூலைப் படிப்போரில் பெரும்பான்மையோர் கம்பனைப் பயின்றிருப்பர் எனக் கருதி மேற்கோள் பகுதி களைத் தொட்டுக் காட்டியுள்ளேன். வால்மீகி ராமாயணத் துக்கும் கம்பராமாயணத்துக்கும் எல்லா இடங்களிலும் மூலத்தைச் சுட்டியுள்ளேன்.

கம்பன் கையாண்ட முறையிலே இராமன், வதிட்டன், கோசலை, இராவணன், வீடணன், கிட்கிந்தை, சித்திர கூடம் போன்ற சிறப்புப் பெயர்களை அமைத்துள்ளேன். இவற்றின் ஸம்ஸ்க்ருத வடிவங்கள் வேறு.

அயோத்தி, கிட்கிந்தை, இலங்கை என்ற மூன்று களங் கள் காவியத்தில் வருகின்றன. அங்கு வாழ்ந்த மூன்று சமூகங்களில் மக்கள் ஒருவருடன் ஒருவர் கொண்டிருந்த தொடர்புகள், மக்களுக்கும் அவர்களுடைய தலைவருக்கும் இருந்த தொடர்புகள், தலைவர்கள் தமக்குள் கொண்டிருந்த தொடர்புகள், பொதுவாக சமூக நிலைமைகள், இவற்றைச் சில துறைகளில் இவ் இரு பெரும் காப்பியங்களிலும் காண்பதே என் நோக்கமும், இந்நூலின் எல்லையும் ஆகும்.

இந்நூலை எழுதும்போது எனக்கு உசாத்துணையாக இருந்து, என் கருத்து சொற் பிழைகளைத் திருத்தி உதவிய நண்பர் டாக்டர் க. மீனாக்ஷி சுந்தரனார்க்கு நான் பெரிதும் கடமைப் பட்டுள்ளேன்,

இந்நூலை எழுத நான் பயன்படுத்திய மூல நூல்கள்:

1. வால்மீகிராமாயணம் — கீதா பிரஸ், கோரக்பூர், பதிப்பு.

2. கம்பராமாயணம் — சென்னைக் கம்பன் கழகப் பதிப்பு.

பாடலுக்கு, அல்லது கருத்துக்குப் பிறகு அடைப்புக் குறியில் உள்ள எண்கள் வால்மீகிராமாயணத்தில் காண்ட, ஸர்க, சுலோக எண்ணையும், கம்பராமாயணத்தில் பாடலின் தொடர் எண்ணையும் குறிப்பன. ஒரே ஸர்கத்தில் பல சுலோகங்கள் எடுத்தாளப்படும்போது, சுலோக எண் மட்டுமே குறிக்கப்படும்.

வி. கே. எல். நகர்
துடியலூர்
கோயம்புத்தூர்-14

நா. வரதராஜுலு நாயுடு

பொருளடக்கம்

1. தோற்றுவாய்

கவிஞன் தான் வாழும் சமூகச் சூழ்நிலையிலிருந்து தோன்றுகிறான். அச் சூழ்நிலை அவனை உருவாக்குகிறது; அவனும் தன்னுடைய படைப்புக்களால் அச்சூழ்நிலையில் மாற்றங்களை ஏற்படுத்துகிறான். கவிஞனுக்கும் சமூகத்துக்கும் இடையே செயலும் எதிர்ச்செயலும் ஒன்றோடொன்று பின்னி இணைந்துள்ளன. கவிஞன் தான் வாழும் சமூகத்தையும் அதில் உள்ள பல குழுக்களையும் பல்வேறு நோக்குகளில் பிரித்தும் இணைத்தும், பகுத்தும் தொகுத்தும், ஆராய்கிறான். அப்போது உண்டாகும் உணர்ச்சிகளும், ஊடுருவிப் பார்ப்பதால் தோன்றும் எண்ணங்களும், 'செவ்விய, மதுரம் சேர்ந்தன, பொருளில் சீரிய, கூரிய, தீஞ்சொல் வவ்விய' சொற்களால், ஆன்றபொருள், அறிவுச்சால்பு, உறுதி, தெளிவு இவற்றோடு ஒளிபொருந்திய, ஒழுக்கம் தரும், கவிதைகளால் வெளிப்படுகின்றன. அவ்வெளிப்பாடு அவன்காலச் சமுதாயத்துக்கும் அவன்கால மக்களுக்கும் மட்டுமல்லாமல் எதிர்காலச் சமுதாயத்துக்கும் மனிதகுலம் முழுமைக்கும் உரியனவாகின்றன.

கவிஞன், தான் வாழ்ந்த காலத்தில் சிறப்புற்றிருந்த கலைகளில் தோய்ந்தவன். அவனுடைய சொல்லும், அது தரும் பொருளும் அவனுக்கும் முந்தைய அறிவின் பயன்; அவனுக்குப் பின்வரும் அறிவுக்கு வித்து. ஒரு நோக்கில் அவன் பழைமைப் பண்பின் செறிவு; மற்றொரு நோக்கில் அவன் புதுமைப் பெற்றியின் சிருஷ்டிகர்த்தா—படைப்பாளி.

கவிஞனுடைய கற்பனை அவன் வாழும் அகச் சூழ்நிலையிலிருந்தும் புறச் சூழ்நிலையிலிருந்தும் ஊற்று எடுக்கிறது. அவன் புதியதோர் உலகம் படைக்கக்கூடும்; எனினும், அந்தப் புதிய உலகும் அவன் வாழ்க்கையிலிருந்தே முகிழ்க்கும்.

வால்மீகியும் கம்பனும் நமக்குப் படைத்துள்ள காப்பியப் பாத்திரங்கள், அதில் வரும் நிகழ்ச்சிகள், எண்ணங்கள் யாவும் இரு மகாகவிகளின் கற்பனையில் உதித்தவை. அந்தக் கற்பனையோ, அவர்கள் வாழ்க்கையை வேராகக்கொண்டு எழுந்தது. ஒன்றிய நிலையில் (யோகம் ஆஸ்தித I. 3.6 :) எல்லாவற்றையும் உள்ளவாறு தம் அகக்கண்ணால் கண்ட வால்மீகி என்னும் அந்தப் பேரறிஞர் இராமகாதையை இயற்ற முற்பட்டார்.

தத் ஸர்வம் தத்த்வதோ த்ருஷ்ட்வா தர்மேண ஸ மஹாமதி
............தத் ஸர்வம் கர்தும் உத்யத : (7)

இமயம் முதல் இலங்கைவரை பலவகைப்பட்ட சமூகங்கள், மனிதர்கள், விலங்குகள், மலைகள், ஆறுகள், நாடு நகரங்கள், பல நாகரிக முதிர்வுகள் - இளமைகள், உணர்ச்சிவசப்பட்டு எழும் எண்ணங்கள், ஆழ்ந்த சிந்தனைகள், வாழ்க்கைமுறைகள், இயற்கை வளம்-பாழ் நிலை, உயர்வு-தாழ்வு, பெருமை-சிறுமை, நன்மை-தீமை—ஆகிய யாவற்றையும் இருவேறுகாலச் சூழ்நிலைகளில் வாழ்ந்த வால்மீகி, கம்பன் ஆகிய இருமகாகவிகளும் நமக்கு அளித்துள்ளனர். இன்றைய சமூகம் பல வகைகளில் மாறிவிட்டது. எனினும் அந்த இரு கவிஞர்களின் வாக்குகள் இன்றும் நம் உள்ளத்தைத் தொடுகின்றன; நம் உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் பிரதிபலிக்கின்றன.

இரண்டு கவிஞரும் இலக்கிய புருஷரைத் தலைவராகக் கொண்ட காப்பியம் இயற்றினர். எனினும் அவர்களுக் கிடையே வேறுபாடு உண்டு. வால்மீகி காலத்தில் அவருடன் வாழ்ந்த மனிதர்களில் சிறந்த மனிதனுடைய வரலாற்றைக் கூறுவதே அவர் இயற்றிய காப்பியத்தின் நோக்கம்.

அவர் நாரத முனிவரை வினவினார் :

இந்த இன்றைய உலகில் ('அஸ்மிந் ஸாம்ப்ரதம் லோகே':)

1. யார் நீங்காத நற்குணங்கள் பொருந்தியவர்? ('குணவாந்')
2. யார் நீங்காத வெற்றி உடையவர்? ('வீர்யவாந்')
3. யார் அறம் அறிந்தவர்? ('தர்மஜ்ஞ')
4. யார் செய்ந்நன்றி போற்றுபவர்? ('க்ருதஜ்ஞ')
5. யார் சொல் தவறாதவர்? ('ஸத்ய வாக்ய:')
6. யார் உறுதியான விரதம் பூண்டவர்? ('த்ருட வ்ரத:')
7. யார் ஒழுக்கம் காப்பவர்? ('சாரித்ரேண யுக்த:')
8. யார் எல்லா உயிர்களுக்கும் நன்மை புரிபவர்? ('ஸர்வ பூதேஷு ஹித:')
9. யார் பகுத்தறிவு உடையவர்? ('வித்வாந்')
10. யார் திறமை உடையவர்? ('ஸமர்த்த:')
11. யார் கண்ணுக்கு இனியவர்? ('ப்ரிய தர்சந:')
12. யார் புலன் அடக்கம் உடையவர்? ('ஆத்மவாந்')
13. யார் சினத்தை வென்றவர்? ('ஜிதக்ரோத:')
14. யார் நீங்காத ஒளி பொருந்தியவர்? ('த்யுதிமாந்')
15. யார் அழுக்காறு அற்றவர்? ('அநஸூய:')
16. யாருடைய சினத்தைப் போரில் தேவரும் அஞ்சுவர்? ('கஸ்ய பிப்யதி தேவா: ச ஜாத ரோஷஸ்ய ஸம்யுகே')

இப் பண்புகளைக் கொண்ட மனிதனை (நர:) நான் அறிய விரும்புகிறேன்". (I 2.5)

நாரதர் அக்காலத்தில் அயோத்தியை ஆண்டுவந்த இராமன் இப் பண்புகளை உடையவன் என இராமன் வரலாற்றைச் சுருக்கமாகச் சொன்னார். இந்த வரலாற்றை அடிப்படையாகக் கொண்டே வால்மீகி முனிவர் இராமாயணக் காப்பியத்தை இயற்றினார்.

இந்தக் காப்பியம் "சீதையின் பெருங்கதை' (ஸீதாயா: சரிதம் மஹத்) எனவும், "இராவண வதை" (பௌலஸ்த்ய வதம்) எனவும் பெயர் பெறும். (I. 4.7)

கம்பன் 'இராமாவதாரம்' பாடியதன் நோக்கம் தெளிவாகவும் குறிப்பாகவும் பாயிரத்தில் தோன்று கிறது.

'பொய்இல் கேள்விப் புலமையினோர் புகல்
தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே' (6)

என்ற ஈரடிகளில் தன் நோக்கத்தைத் தெளிவாகக் கம்பன் காட்டுகிறார். 'தேவபாடை' (19) என ஸம்ஸ்க்ருத மொழியைக் கம்பன் குறிப்பிடுவதால், 'தெய்வமாக்கவி' என்னும் தொடர் ஸம்ஸ்க்ருதக் கவிஞரான வால்மீகியைக் குறிக்கும். சமூகச் சூழ்நிலைக்கு ஏற்ப வால்மீகியிலிருந்து கம்பன் மாறுபட்டிருந்தாலும் வால்மீகியின் மாட்சியைப் போற்றுகிறார். வால்மீகிக்குப்பின் இராமாயணம் பாடிய எல்லாக் கவிஞரிடமும் இந்தப் போக்கைக் காணலாம். வால்மீகி காலத்தில் ஸம்ஸ்க்ருதம் மனிதனின் மொழியாகவே இருந்தது; தேவபாடையாக அன்று. கம்பன் காலத்தில் அம் மொழி மனித வழக்கு இழந்து விட்டதால் 'தேவபாடை' ஆயிற்று.

இனி, குறிப்பாகத் தன் நோக்கத்தைக் கம்பன் காட்டும் சொற்களைக் காண்போம்.

'நடையில் நின்று உயர் நாயகன் தோற்றத்தின்
இடை நிகழ்ந்த இராமாவதாரப் பேர்த்
தொடை நிரம்பிய தோம்அறு மாக்கதை' (11)

என ஒழுக்கத்தின் ஒவ்வொரு நிலையிலும் நின்று தன் உயர்வைக் காட்டிய நாயகன் இராமனாகப் பிறந்து ஆற்றிய செயல்களைப் பாடல்களில் கூறும் 'இராமாவதாரம்' என்ற பெயரை உடையதாய், குற்றம் அற்ற சீதையின் கதையைக் கூறுகிறது. இக் குறிப்பு முன்னர்க் கூறிய வால்மீகியின் கருத்தைத் தழுவியது. 'இராவணவதம்' என்ற கருத்தைக் கம்பன் நீக்கி விட்டார்.

வால்மீகியின் இராமாயணம் பலரால் வாயாலும், இசைக் கருவிகள் துணைகொண்டும், பாடப்பெற்றது. குசலவர்கள் பாட ஆசிரமவாஸிகள் கேட்டனர். அவர்கள் பாடிய முறையையும், அதைக் கேட்டோர் துய்த்து மகிழ்ந்ததையும், பரிசுகள் அளித்ததையும், வால்மீகி முனிவர் அற்புதமாகக் கூறுகிறார் (I.4).

முனிவர் காப்பியத்தில் கைக்கொண்ட யாப்பு முறை, அவருடைய வாழ்க்கையிலிருந்து உதித்ததே யாகும். 'ஒரே அளவுள்ள எழுத்துக்களையும் நான்கு அடிகளையும் கொண்ட பாட்டு மஹரிஷியின் வாக்கில் வெளிப்பட்டது. அவருடைய சோகம் சுலோகமாக அமைந்தது'. ('சோகம் ச்லோகத்வம் ஆகத' I. 2.40)

கம்பன் தான் காவியம் இயற்றிய வரலாற்றைக் கூறவில்லை. பிற புலவர்கள் கம்பராமாயணம் இயற்றப்

பட்ட காலத்தையும், ஊரையும், இயற்றுவித்த புரவலரையும், அதன் அரங்கேற்றத்தையும், தனியன் களில் கூறியுள்ளனர். புரவலர் சடையனின் பெயரைக் கம்பன் காவியத்தில் சில இடங்களில் பதித்துள்ளார்.

வால்மீகத்தில் காவியம் பிறந்த வரலாற்றைக் கூறும் முதல் நான்கு ஸர்கங்களை முனிவரே இயற்றி னார் என எல்லா உரையாசிரியர்களும் கொண் டுள்ளனர்.

வால்மீகி இராமனுக்குச் சமகாலத்தவர் என அவருடைய காவியம் கூறுகிறது. முன் கூறப்பட்ட "இந்த, இன்றைய உலகில் வாழும் மனிதன்" என்றதுடன், வனவாழ்க்கையில் சித்திரகூடத்து அருகில் இராமன் வால்மீகியைச் சேவித்தான் என்ற நிகழ்ச்சியும் கூறப் பட்டுள்ளது. (II 56-16)

தமிழில் உத்தரகாண்டத்தை இயற்றியது யார் என்பதுபற்றி ஐயம் உண்டு. ஆனால் வால்மீகி உத்தரகாண்டத்தை இயற்றினார் என்பதில் ஸம்ஸ்க்ருத உரையாசியர்க்கோ, வழிநூலாசிரியர்க்கோ ஐயம் இல்லை. நிறைந்த கர்ப்பிணியாகக் காட்டில் விடப் பட்ட சீதையை 'இராமனுடைய அன்புக்குரிய பட்டத் தரசி' (VII-49-11), பாவம் அற்றவள், கணவனால் துறக்கப்பட்டவள், எப்போதும் காப்பாற்றப்பட வேண்டியவள் (21), என ஆசிரமப் பெண்களுக்கு வால்மீகி அறிமுகம் செய்கிறார்.

'வால்மீகி: பகவான் ருஷி' (VII 93. 1) சிஷ்யர்களுடன் இராமனுடைய அசுவமேதயாகத்துக்கு எழுந்தருளி, தாம் இயற்றிக் கற்றுத்தந்த இராமாயணக் காவியத் தைக் குசலவர்களைப் பாடச் செய்கிறார் (VII 94. 32)

இராமகாதை ஸம்ஸ்க்ருதத்தில் வியாஸன், பாஸன், காளிதாஸன், பவபூதி, முராரி போன்ற பெருங்கவிஞர் களால், வால்மீகியின் காவியத்தைப் பின்பற்றிக் கையாளப்பட்டது.

தமிழ்மொழியிலும் சங்க காலம் தொடங்கி இராமாயண நிகழ்ச்சிகள் கவிஞரால் எடுத்தாளப் பட்டுள்ளன. இடைக்காலத்தில் தமிழ்நாட்டில் பக்தி வெள்ளம் பாயக் காரணமாக இருந்த ஆழ்வார்கள் வாக்கில் இராமனுடைய 'தெய்வத் தன்மை' தோன்றியது. வைணவ ஆசாரியர்கள் இந்தத் தெய்வப் பண்பைப் போற்றி மக்களிடையே பரப்பினர். அவற்றில் தோய்ந்த கம்பன் வால்மீகி கொண்ட இராமன் என்ற மனிதனைக் கடவுள் ஆக்கினார். 'உலகம் யாவையும்' தொடங்கி (1) 'அம்பரத்து அநந்தர் நீங்கி' அயோத்தி யில் வந்த வள்ளல் (10368) என்பது வரை கம்ப ராமன் கடவுளே.

தொகுப்புரை

1. வால்மீகி தம் காலத்தில் வாழ்ந்த சிறந்த மனிதனைத் தம் காவியத் தலைவனாகக் கொண் டார். கம்பன் ஒழுக்கத்தின் உயர்வை உலகுக்குக் காட்ட அவதரித்த இறைவனைத் தம் காவியத் தலைவனாகக் கொண்டார்.

2. வால்மீகியின் உணர்ச்சி சுலோக வடிவமாகப் பெருக்கெடுத்தது. தாம் இயற்றிய காவியத்தை இராமன் முன்னிலையில் வால்மீகி குசலவர்களைக் கொண்டு இசையுடன் பாடச் செய்தார்.

2. மக்கள்

அயோத்தியில்

கோசல நாட்டையும் அயோத்தி நகரையும் வால்மீகி ஆரியப் பண்பாட்டிற்கு எடுத்துக்காட்டாகவும், கம்பன் தமிழ்ப் பண்பாட்டிற்கு எடுத்துக்காட்டாகவும் சித்திரித்துள்ளனர்.

நாடு இயற்கை வளம் மிக்கது; செல்வம் கொழிப்பது (I, 5-5.)

நகரம் மனுமுதல் தொன்மை வாய்ந்தது (6); அகன்ற தெருக்களையும் செவ்வனே பிரிக்கப்பட்ட சதுக்கங்களையும் உடையது (8); பூச்சொரியும் மரங்களையும் நீர்ப்போக்குகளையும் உடையது; கடைவீதிகள் தோரணங்கள் நிறைந்தது; கலைவாணர் வாழ்வது (10); உயர்ந்த வீடுகள், ஒளிபொருந்திய கூடங்கள், நாடகசாலைகள், மாஞ்சோலைகள், பொய்கைகள், விளையாட்டு இடங்கள், விமானங்கள் நிறைந்தது (11 - 15); பகைவர் புகுதற்கரிய மதிலும் பலவகைக் கருவிகளால் பாதுகாவலும் கொண்டது (11, 13); துந்துபி, பணவ முழக்கங்களும், வீணை ஒலியும் நிரம்பியது (18); பல நாட்டு மன்னரும் வணிகரும் பழகுவது (14); ஸால மரக்காடுகளாலும், சிங்கம் புலி முதலிய விலங்குகள் வாழும் காடுகளாலும் சூழப்பெற்றது (21).

அயோத்தியில் ஆண்களும் பெண்களும் அறம் வழுவாதவர்; புலன் அடக்கம் உள்ளவர் (9); கல்வி கேள்விகளில் சிறந்தவர்; ஒழுக்கம் பூண்டவர் (8); நாஸ்திகர் அல்லர் (14); இன்பத்தையே வாழ்க்கையின் பயனாகக் கொண்டவரல்லர்; அங்கு கோழைகள்

இல்லை; கொடியவரும் இல்லை (8); உணவில் தூய்மையையும் நல்வாழ்வையும் பேணுபவர் (11).

அங்கு வறுமையில்லை; அறியாமையில்லை; களவோ கயமையோ இல்லை; குழப்பம் இல்லை. மரபு பிறழ்வு இல்லை; பொய்ம்மை இல்லை; அழகு குன்றியவர் இல்லை (16).

அரசன் அந்தணரையும் க்ஷத்ரியரையும் துன்புறுத்தாது இறை கொண்டான்; தன் கருவூலத்தை நிரப்பினான். தவறு இழைத்தவரின் வலிமை-மென்மை அறிந்து அவற்றுக்குத் தக்கவாறு ஒறுத்தான் (7 - 13).

அனைவரும் தத்தம் வருண தருமத்தைப் பின்பற்றினர் (17). க்ஷத்ரியர் பிராமணரைப் பின்பற்றினர்; வைசியர் க்ஷத்ரியரைப் பின்பற்றினர்; சூத்ரர் தம் பணியைச் செய்து அனைவரையும் பின்பற்றினர் (19).

வருணங்களைக் கம்பன் கூறவில்லை. கம்பன் கூறும் நெறிகள் சில வால்மீகத்தில் காணப்படாதவை.

'ஆசலம் புரி ஐம்பொறி வாளியும்,
காசு அலம்பு முலையவர் கண் எனும்
பூசல் அம்பும் நெறியில் புறம் செலா' (12)

'குடிக்கு எலாம் குலம்சுரக்கும் ஒழுக்கம்' (69).

'அறங்கள் மாதரார் கற்பின் நின்றன' (90)

'எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை' (166).

ஆகிய இந்தக் கருத்துக்கள் வால்மீகத்தில் இல்லை. ஆனால் கம்பன் கூறும்,

'வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்' (84)

'யாதும் கொள்வார் இலாமைக் கொடுப்பார்களும்
இல்லை'(165)

என்ற பாடல் வரிகள் உயர்வு நவிற்சிகள் என்றே கொள்ளவேண்டும். ஏனெனில், 'பழங்கணோடு இரந்தவர் (159),' "நிதி யாவையும் வறியவர் முகந்து கொள்க (289)" "வெறுக்கை வறியார் கொள வழங்கு" (1587), 'வறியன் கை' (2156), 'அருத்தி வேதியன்' (5094), முதலானவை அயோத்தியில் வறிஞர் இருந்தமையைக் காட்டுகின்றன.

கருத்தளவிலேனும் இலக்கிய சமூகமாகக் கம்பன் காட்டும் சமத்துவத்தை வால்மீகத்தில் காண்பதில்லை.

கோசல நாட்டையும் அயோத்தி நகரத்தையும் மக்களையும் தசரத மன்னன் நன்கு காத்துவந்தான். (I. 6. 4). மக்களை அரசன் மகிழ்வித்தான்; மக்களும் அவனை மகிழ்வித்தனர். (அநுரக்த ப்ரஜாபி: ச ப்ரஜா ச அநுரஜ்யதே—II. 1. 14),

தசரதன் 'வேதங்களை அறிந்தவன், செல்வங்கள் நிரம்பியவன், தீர்க தர்சனம் உடையவன், ஒளி பொருந்தியவன், நாடு நகர மக்களிடம் அன்பு உடையவன்' எனத் தொடங்கி, 'உலகைக் காப்பவன்' என முனிவர் முடிக்கிறார் (I 6. 1-4).

அரசன் குடிமக்களைத் தாங்குவோன்; உயர்ந்தவன்; யாவருக்கும் மேலானவன்: தலைவன் (II 24: 16).

'அரசன் வாய்மை தவறாதவன்; அறவழி நிற்பவன்; குடிப்பிறப்புக்குக் குடிப்பிறப்பு மக்களுக்குத் தாயும் தந்தையுமாகித் தாங்குகின்ற நல்லோன் (II 67: 34). அரசன் தன் அடக்கம் உடையவன். தன் விருப்பப்படி நடவாதவன்; தன் புலன்களை வென்றவன்; நீதிக்குக் கட்டுப்பட்டவன் ('ஆத்ம வாந் ந காம வ்ருத்த; ஜிதேந்த்ரிய நீதிமாந்').

இவை போன்ற கருத்துக்கள் பல இடங்களில் வருகின்றன. அரசன் தன் ஒழுக்கத்தைப் பேணினான்; தன்னைச் சார்ந்தவருடைய நடத்தையைக் கட்டுப் படுத்தினான்; குடிமக்களுடைய அறத்தையும் காத்தான் (I 1.13). பல நூறு ஆண்டுகளுக்குப் பின் வந்த மில்டன் "தன்னை ஆளத்தெரியாதவன் உலகை ஆளும் தகுதி அற்றவன்" என்றும், கதே "அரசின் அதிகாரம் அறிவின் ஆணைக்குக் கட்டுப்பட்டது என என்றுகொலோ நீ அறிவாய்?" என்றும், முழங்கியவை இங்கு ஒப்பிட்டு நோக்கத்தக்கன.

தவிர, ரூஸோ காட்டிய தலைவன் - மக்கள் இடையே சமூக ஒப்பந்தக் கொள்கையின் முன்னோட்ட நிலையையும் வால்மீகத்தில் காண்கிறோம். "அரசன் மக்களைக் காக்கிறான்; அதனால் மக்கள் அவனை மதிக் கின்றனர்; அவன் பல இன்பங்களைத் துய்க்கிறான்" (III. 1. 19 : என்று தண்டக முனிவர்கள் இராமனுக்குக் கூறுகின்றனர்.

அரசன் தன் மக்களைப் போலக் குடிமக்களையும் காக்கக் கடமைப்பட்டவன். அவன் அக் கடமையை ஆற்றவில்லை யெனில் அது மக்களுக்குச் செய்யும் துரோகமாகும் (II 75. 24). அரசன் குடிமக்களிடமிருந்து ஆறில் ஒரு பங்கு இறைபெற்று அவர்களைப் பேணிக் காக்கவில்லை எனில் நரகம் புகுவான் (25.)

பொதுவாக வால்மீகத்தில் அரசு காத்தல் கடமையைச் சிறப்பாகக் கொண்டது. ஆணையும் ஒறுத்தலும் காத்தலுக்குத் துணை செய்வன. இக் கருத்துக்கள் வால்மீகிக்கு முன்பே நிலவியவை. இவற்றை ரிஷிகள், அமைச்சர்கள், மக்கள், பிற அரசர் ஆகியோர் வற்புறுத்துவதிலிருந்து அறிகிறோம். வால்மீக முனிவர்

மன்னனுடைய பண்புகளை முதலில் கூறுகிறார். கம்பன் ஆறு, நாடு, நகரங்களைக் கூறி, அங்கு வாழும் மக்களைக் கூறி, 'அம்மாண் நகருக்கு அரசன், அரசர்க்கு அரசன், செம்மாண் தனிக்கோல் உலகு ஏழும் செல்ல நின்றான்' (168) என அரசுக்கு வருகிறார். 'நீதியும் அறன் முதலிய யாவும் இவற்கே பணி கேட்பன' - (169), 'வேந்தர் வேந்தன் செங்கோல் அடாநெறி செல்லாது; மறை சொல்லும் நீதியை விடாது' (1029), 'அவன் அறத்தின் மூர்த்தி' (168) என்கிறார்.

கம்பன் காட்டும் அரசில் கோலும் ஆணையும் முன் நிற்கின்றன. 'கோல்' என்ற சின்னம் தமிழ்நாட்டின் சிறப்பு; வால்மீகத்தில் காணப்படாதது. 'வையகம் முழுதும் வறிஞன் ஓம்பும் ஓர் செய் எனக் காத்து இனிது அரசு செய்கின்றான் (179)' என்ற உவமையில் உலகம் அரசனுடையது என்ற கருத்துத் தொனிக்கிறது.

வையம் உயிர்; அந்த உயிரைத் தாங்கும் உடல் மன்னவன் (1423); 'சென்று நின்று வாழ் உயிர் எலாம் உறைவதோர் உடம்பும் ஆயினான் (177)' என்ற சொற்களிலிருந்து, 'உடல் உயிரின் நிலைக்களன்; ஆதலின் உடல் உயிரைத் தாங்குகிறது. ஆனால் உயிரே உடலின் இயக்கத்துக்குக் காரணம்' என்ற கருத்து எழுகிறது.

இந்தக் கருத்து உறுதிபெறாத காலத்தில், அரசனும் குடிமகனும் உடலும் உயிரும் போல இணைந்திராத காலத்தில், "அரசன் தேவையா?" என்ற வினா எழுந்தது. வால்மீகி ஒரு ஸர்கத்தையே இதற்காகப் படைத்து விடை கூறுகிறார். தசரதன் இறந்தபின் அரசனில்லாத நிலையில் (அராஜகம்) ஏற்படக்கூடிய விளைவுகளை மார்க்கண்டேயன் முதலிய புரோஹிதரும், அமைச்சரும் வதிட்டனிடம் கூறுகின்றனர்,

'அரசன் இல்லாத நாட்டில் எவரும் ஒரு கைப்பிடி நெல்லும் விதையார்' (II 67. 10).

'கணவனுக்கு மனைவியும், தந்தைக்கு மகனும் கட்டுப்படார்; கணவன் மனைவி என்ற நெறி இராது; சொத்துரிமை இராது.' (11).

'கலைகள், விழாக்கள் குன்றும்' (15).

'வணிகம் நடைபெறாது; பாதைகளில் பாதுகாப்பு இராது' (22).

'முயற்சியும், முயற்சியின் பயனுக்கு உறுதியும் இரா. படைகளால் புறப்பகைவரை எதிர்க்க முடியாது' (24).

'நாட்டில் எந்தப் பொருளும் ஒருவனுடைய உடைமையாக இராது; பெரிய மீன், சிறிய மீனை உண்பதுபோல வலியார் மெலியாரை வாட்டுவர்' (31).

'சமூகவரம்புகள் இரா. நாத்திகம் பரவும். யாருடைய ஆணையும் செல்லாது. தண்டனைப் பயம் அகலும்' (32).

இவற்றை நோக்கினால், வால்மீகி காலத்தில் சமூகத்தில் அரசின் அமைப்புக்கள் மட்டுமன்றிக் குடும்ப வாழ்க்கையும், சொத்துரிமை, வணிகம் போன்ற தொடர்புகளும், முற்றிலும் நிலைகொள்ளவில்லை என்று தெரிகிறது. மனு அறநெறிகளையும் மரபுகளையும் வகுத்து இருப்பினும் அவற்றை நடத்தத் தலைவன் வேண்டியிருந்தது. அறிவாலும், ஒழுக்கத்தாலும், மக்கள் மனத்தைக் கவர்ந்த ஒருவனைத் தலைவனாகக் கொண்டனர்; கொண்டபின், அவனுடைய காவலுக்குக் கட்டுப்பட்டனர் என அறிகிறோம்.

இந்தக் காரணம் கருதியே, இராமன் வாலிக்குக் கூறிய சமாதானம் சமூக இயைபுடையது எனக்கொள்ள வேண்டும்.

"தருமம், நல்வாழ்வு, வாழ்வின் நன்மை, யாவும் அரசன் தருவன. அதில் ஐயம் இல்லை. ஆதலின் அரசனைத் துன்புறுத்தலாகாது; அவனை எதிர்க்க லாகாது; மறுக்கலாகாது. அவன் வெறுப்பதைச் சொல்லலாகாது. அரசர் மனித உருவில் இவ்வுலகில் நடமாடும் தேவர்" (VI, 18. 41-42)

சமூக அமைப்பும் அரசும் உறுதிபெற்றிருந்த கம்பன் காலத்தில் 'அரசன் தேவையா?' என்ற கேள்வியே எழ இடமில்லை. அரசனை மறுத்தல் அல்லது எதிர்த்தல் என்ற கருத்துக்கு அங்கு இடமில்லை.

'அழிவரும் அரசியல் எய்தி...சிறு தொழில்
இயற்றி
தருமத்லத மறந்து பழிவரு...பதகன் (2209)'
"புரக்கும் மாண்பிலன்" (3645).

என்று கம்பன் குறிப்பிடுவதால், அறம் வழுவிய மன்னரும் இருந்தனர் என்று தெரிகிறது. ஆனால், பழியும் பாவமும் எய்திய இந்தப் பதகரையும் புரவாதவரையும் மக்கள் எதிர்க்கவில்லை.

'அற்பின் அறங்கள் நின்றன' ஆதலின், அரசன் இராவிடினும் இல்லறம் குன்றாது விளங்கியது.

ஆணையைக் குறித்த கம்பனுடைய கருத்து குறிப் பிடத்தக்கது: 'மன்னவன் காவல் இல் ஆணை செய் கடவுள்' (1317). தசரதன் கடவுளுக்கு ஒப்பாக இருப்பது காவல் இல் ஆணையால். இன்னது செய் இன்னது செய்யாதே எனக் கடவுள் ஆணை இடுவதில்லை.

மக்கள் தம் தலைவனுடைய செயலைக் கண்டும், இயல்பான பண்பாட்டால் உண்டான கடமையுணர்ச்சியாலும், சமூகத்துக்கு ஏற்ற நல் ஒழுக்கத்தைத் தாமே காக்கின்றனர். காவலுக்கு ஆணை என்னும் புறக்கட்டுப்பாடு தேவையற்றது. இந்தக் கருத்தை ரகுவம்சத்திலும் நாம் காணலாம் (17 - 74.).

கம்பன் தன்னுடைய இலட்சிய சமூகத்தில் குடிகள் 'கோன் நிகர்வர்'(126) எனக் கூறுகிறார். இராமனுக்கு முடிசூடும் மகிழ்ச்சியில் 'சாதுகை மாந்தர் எல்லாம் தசரதன் தன்னை ஒத்தார்' (1560) என்று கம்பன் பாடுகிறார். இராமன் திருமுடி சூடியபோது 'ஒருவன் சென்னி மிலைச்சியது எனினும்......தம்தம் உச்சியின் மேல் வைத்தது ஒத்தது' (10329) என்று ஒவ்வொருவரும் தாமே அரசன் ஆனதாகக் கருதி இன்பத்தில் திளைத்து இருந்ததைக் கம்பன் குறிப்பிடுகிறார். ஆனால் இராமனுக்கு முடிசூட்டும் முடிவும், பின்பு அதை மாற்றிப் பரதன் பார் ஆளவும், இராமன் காடு செல்லவும் பணித்ததும் தசரதன் செய்தவை; குடிமக்கள் செய்தன அல்ல.

இராமன் முடிசூடப்போவதைக் கேள்வியுற்று நகர மாந்தர் 'உய்ந்தது இவ்வுலகம் என்பார்' (1581), 'பூவலயம் இன்று தனி அன்று, பொது' என்பார் (1592), ஆனால், அவனுக்கு ஏவல் செய்ய உரியவர் உயர்குலத்தோர், மன்னர்! 'ஏவல் செய்யும் மன்னர் தவம் யாவதுகொல் என்பார்' (1592).

தசரதன் கைகேயிக்கு முன்பு அளித்திருந்த வரங்களைத் தருமாறு அவள் கேட்க, இராமன் முடிசூடுதல் தவிர்ந்தது. 'அவையினருக்கு முன்செய்த முடிவு மாறிவிட்டது என அறிவிக்க வேண்டும், புதிய முடிவை வெளியிடவேண்டும்' என்ற எண்ணம் அரசனுக்கோ,

மந்திரக் கிழவருக்கோ, வேத்தவையினர்க்கோ, எழ வில்லை.

முடிசூட்டுவிழாவில் கலந்து கொள்ளவந்த 'அரைசர் இனிது வீற்றிருந்த நல் அவையில், வதிட்டமுனிவன் 'வேந்தன் பணியினால் கைகேசி மெய்ப்புதல்வன் பார் அளிப்பான் ஆயினான்...இராமன் காடு உறைவான் ஆயினான்' (1696) என அறிவித்தான். மந்திரக்கிழவர் இருந்த முதல் அவையை யாவரும் மறந்தனர்,

செய்திகேட்ட பின்பு அங்கு எழுந்த அவலத்தைக் கம்பன் உருக்கமாகச் சித்திரிக்கிறார். 'அரசர்களும் அந்தணரும் தசரதனைப் போல் வீழ்ந்தார்' (1697), 'கண் உற்ற வாரி கடல் உற்றது; விண் உற்றது; எம்மருங்கும் விட்டழுத பேரோசை' (1698), 'மாதர் பார் சோர்ந்தார்' (1699); 'மன்னர் சாய்ந்த மரா மரமே போல்கின்றார்' (1700).

இராமன், இப்படிக் கிடக்கும் அரசர் பெற்ற 'கையடைப் பொருள்' (1397), ஆயிற்றே! கையடைப் பொருளை மன்னர் காத்த அழகு இது! வேந்தர் செயல் இப்படி இருக்க, மக்கள் என்ன செய்தனர்?'

'நங்கைமார் ஏங்கினார்' (1702); 'விதி கொடிதே காண் என்பார்' '(1707); கையால் நிலம் தடவிக் கண்ணீர் மெழுகுவார்' (1709) என்ற தொடர்களால் மக்களின் மனநிலையைச் சுட்டும் கம்பன், மக்கள் நிலைமைக்குக் காரணத்தையும் குறிப்பிடுகிறார்.

'ஆதி அரசன் அருங்கேகயன் மகள் மேல்
காதல் முதிரக் கருத்து அழிந்தான் ஆம்' (1709)

என்பார்.

'என்னே நிருபன் இயற்கை இருந்தவா!
தன்நேர் இல்லாத் தலைமகற்குத் தாரணியை
முன்னே கொடுத்து முறைதிறம்பாத் தம்பிக்குப்
பின்னே கொடுத்தால் பிழையாதோ மெய்!

என்பார் (1713). இவற்றின் மூலம் மன்னன் செய்ததாக மக்கள் கருதிய பிழைகள் இரண்டு என்பதை உணர்கிறோம். முன்னே கொடுத்துப் பின்னே மறுத்தது ஒன்று; மூத்தோனுக்கு அரசு என்ற முறை திறம்பியது மற்றொன்று,

அரசாளும் உரிமையைத் தரும் அதிகாரம் மன்னனுடையது. வேறு எவருக்கும் அந்த அதிகாரத்தை வினாவும் உரிமை இல்லை.

வால்மீகியும் மன்னன் மனத்தில் எழுந்த முரண்பாட்டைக் காண்கிறார். ஒரு வாக்கை நிறைவேற்றினால் மற்றது பழியுறும். ஒன்று ஒருத்திக்கு நெடுங்காலத்துக்கு முன்பு தந்தது; மற்றது பலருக்கு, நாட்டுக்கு, நேற்றுத் தந்தது. இதை ஆழமாக மனத்தில் எண்ணித் தசரதன் இருமுறை கூறுகிறான்;

"ஒன்று உண்மை யானால். மற்றது பொய் ஆகும்;
இரண்டையும் ஒருங்கே காக்க முடியாது."

('யதி ஸத்யம் ப்ரவீமி ஏதத் தத் அஸத்யம் பவிஷ்யதி' II *12.67; 13. 7*)

இந்த முரண்பாட்டுக்குத் தீர்வுகாணத் தசரதன் முயல்கிறான். வனவாசத்துக்குப் போக விடைபெற வந்த இராமனை நோக்கி,

"என்னை நிராகரித்து விட்டு நீ இன்று
அயோத்திக்கு அரசன் ஆவாய்" (II 34 ,26) என்று

ஆணை இடுகின்றான். இந்த ஆணை அரசைத் துறந்து காடு செல்வதாக இராமன் கைகேயிக்கு அளித்த வாக்குக்கு முரண்படுகிறது. ஆதலால் தசரதன் தீர்வை இராமன் ஏற்கவில்லை.

சுமந்திரன் திரும்பிய பிறகு தசரதன் கழிவிரக்கத்தில்,

"நான் மந்திரக்கிழவருடனும் முதியோருடனும் அமர்ந்து ஆலோசிக்கவில்லை. நண்பருடனும் அமைச்சருடனும் நீதி வல்லுநருட னும் கலந்து அவர் அறிவுரை கேட்கவில்லை. ஒரு பெண்ணின்பால் வைத்த நேயத்தால் மயங்கி உடனே இசைந்து விட்டேன்" என்கிறான் (II 59-18, 19).

இராமன் நகரைவிட்டு நீங்கும்போது மக்கள் செயல் அவர்களின் துயரத்தையும், இராமன்பால் அவர்கள் கொண்டுள்ள இரக்கத்தையும் காட்டுகிறதே அன்றித் தசரதன் மீதோ கைகேயிமீதோ அவர்கள் கொள்ள வேண்டிய சினத்தைக் காட்டவில்லை. இந்த இடத்தில் கூறப்படும் மக்கள் கருத்து இரு காவியங்களிலும் காணப்படுகிறது.

"பெண்-கொடுவினைசெயப் பெற்ற நாட்டினில்
கண்கொடு பிறத்தலும் கடை" (1790)

என்று கம்பன் பாடுவது

"க: தாம் ப்ராப்ய ஸுகம் ஜீவேத்
அதர்ம்யாம் துஷ்ட சாரிணீம்" (II 48. 24)

என்று வால்மீகத்திலும் உள்ளது. "நாம் கைகேயி ஆளும் நாட்டில் வாழோம். அறம் தவறிய, தீய ஒழுக்கம்

உடையவள் ஆளும் நாட்டில் எவர்தாம் இன்பமாக இருக்க முடியும்?"

தசரதன் கைகேயியைக் கடிந்துரைக்கும் போது "யாரொடு நீ இவ் அரசு ஆள்வாய்? (1521)" என்று வினாவும் பழிச்சொல் வால்மீகத்தில் பலர் வாக்குகளில் பயில்கிறது,

இலக்குவன்: "மக்கள் அனைவருடைய பகையைக் கொண்டு ஒருவன் எப்படி அரசனாக முடியும்?"

"ஸர்வலோக விரோதேந கதம் ராஜா பவிஷ்யதி"(II 58-33)

வதிட்டன்: 'தீய ஒழுக்கம் உடையவளே, நீ மக்களுக்குத் தீமை புரிந்து தனியே அரசாள்க "(II 37. 28)

இராமன்: "அவன் (பரதன்) ஆனந்தமாகக் கோசல நாட்டைத் தனியே அனுபவிக்கட்டும்"

("முதிதாங் கோஸலாங் ஏகோ யோ போக்ஷ்யதி" (II 53.1)

இவ்வாறாக வால்மீகி, குடிமக்கள் துணை பரதனுக்குக் கிடைக்காது என்பதைப் பாத்திரங்கள் வாயிலாகச் சுட்டுகிறார். இராமன் வாக்கில் தோன்றும் ஏளனம் நமக்கு வியப்பு அளிக்கிறது.

பரதன் அரசாட்சியை ஏற்றுக் கொள்வதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவிப்பார்கள் என—

தசரதன்: "அன்னான் (பரதன்) அரசைக் கொண்டாலும் நள்ளாது இந்த நானிலம்" (1520)

வதிட்டன்: "கொள்ளாது உலகம்" (1648)

பரதன்: "பாரோர் கொள்ளார்" (21844)

பிறர் வாக்குக்களால் கூறப்பட்டாலும், மக்கள் 'நள்ளோம்,' 'கொள்ளோம்' என்று கூறியதாக எங்கும் காணப்படவில்லை.

"கொள்ளாது உலகம்" என்று முதலில் கூறிய வதிட்ட மாமுனிவனே பின்னர்ப் பரதனிடம்,

"மைந்த, நீ அந்தம் இல் பேர் அரசு அளித்தி" (2254) என்று 'தெரிந்து' கூறுகிறான்.

பரதன் வதிட்டனை மறுத்து,

"இராமனைக் கொணர்ந்து...மாமுடி தொல்நெறி
முறைமையின் சூட்டக் காண்டிர்" (2260)

எனக்கூறக்கேட்டு மக்கள் 'வாழிய, நின்புகழ்' (2263) என வாழ்த்துகின்றனர். வால்மீகி இவ்விடத்தில் மக்கள் பரதனை நோக்கித் 'தாமரையில் உள்ள திரு உன்னிடம் வீற்றிருப்பதாக' (II 79—15) என வாழ்த்தியதாகப் பாடுகிறார்.

பரதன் "இந்நகர் முறைமை வேந்தனைத் தருதும் ஈண்டு" (2264) என முரசறைவித்தான். மாநகர் 'இரைத்தது; உயிர் இல் யாக்கை அச்சொல் எனும் அமிழ்தினால் துளிர்த்தது' (2265).

வால்மீகி இங்கு 23 வகைத் தொழிலாளர் ('சில்பிவர்க:' 79. 17) ஒன்றுகூடி கூலி பெறாமல் ('விஷ்டிகர்ம:' 82, 20) கங்கைக்கரை வரையில் பாதை அமைத்து வழிச்செலவுக்கு வேண்டுவன அனைத்தும் செய்து தந்ததை விரிவாகச் சொல்கிறார். (II 83)

தச்சர், நாவிதர், வண்ணார், தையற்காரர், கம்பளி நெய்வோர், பாதை அமைப்போர், கட்டிடம் கட்டுவோர், நாவாய் செலுத்துவோர், யானை குதிரைகளின்

பாகர், மருத்துவர், வேதம் கற்றவர் ஆகியோர் அரச னுடன் செல்வது இயல்பாக எதிர்பார்க்கக் கூடியதே, மணிகொண்டு இழைப்போர், பொற்கொல்லர், சந்தனம் அரைப்போர், வெந்நீர் காய்ச்சுவோர், சுண்ணம் இடிப் போர், தூபம் ஏற்றுவோர் இவரையும் உடனழைத்துச் சென்றது வியப்பாக உள்ளது. மேலும், சாமரை வீசு வோர், மயிற்பீலியால் விசிறிகட்டுவோர், நடனமாதர், மது அருத்துவோர் ஆகியோரும் சென்ற தாகக் கூறுவது இராமன்பால் இருந்த அன்பால் அயோத்தியே சென்றது எனக் கூறுவதாகவே கொள்ள வேண்டும்.

கம்பன் இத்தகைய தொழிலாளரை எந்தச் சமூகத்திலும் கூறவில்லை.

கோயில்—வழிபாடு

இராமன் முடிசூட இருந்த முன்னாள் இரவில் அரசன் வேண்டுதல்படி சீதையுடன் உபவாஸம் இருந்து நாராயணனைத் தியானம் செய்து (II 6.1), ஒன்றிய மனத்தினனாக விஷ்ணுகோயிலில் தருப்பைப் பாயில் படுத்து உறங்கினான் (6.4,5)

வதிட்டன் 'ஆயிரம் மௌலியான் தானம் நண்ணி, (நாகணை வள்ளலை) இராமனைப் புண்ணியப் புனலாட்டி, நல்வினை முற்றுவித்து, தருப்பை விரித்து ஏற்றினான்' (1428-29).

உருவ வழிபாட்டை வால்மீகி எங்கும் கூறவில்லை. ஆழ்வார்கள் பெருமளவில் அனுபவித்துப் போற்றிப் பரப்பிய 'அர்ச்சை' என்ற உருவ வழிபாட்டு நெறியையும் கம்பன் அயோத்தியில் வைக்கவில்லை. தலங்களில் அரங்கத்தைக் குலமுறை கிளத்தலிலும் (638)

வேங்கடத்தை வானரர் வழிச்செலவிலும் (4472, 4626) வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. திருமாலை வழி பட்டதாக் கூறவில்லை. அங்கும் 'தூய நல்தவர் பாதங் கள் சூடினார்' (4630), வேறு தலங்கள் குறிப்பிடப்பட வில்லை.

சீதையின் வேண்டுதல்

கங்கையைக் கடக்கும் போதும், யமுனையைக் கடக் கும்போதும் சீதை அந்த ஆறுகளைத் தொழுது, தாம் காடுறை வாழக்கையை முடித்து நலமுடன் திரும்பினால், அவற்றுக்குப் பல காணிக்கைகள் தருவதாகவும், வழிபாடு கள் செய்வதாகவும், வேண்டிக்கொள்கிறாள்.

"நான் உன்னை வணங்குகிறேன்; துதிக்கிறேன்' ஆடவரில் சிறந்த இராமன் திரும்பி வந்து அரசு பெற்றால் உனக்கு இனியது செய்ய நூறாயிரம் பசுக்களை, அன்ன வஸ்த்ரங்களுடன் அந்தணருக்குத் தருவேன். ஆயிரம் குடம் கள்ளும், புலால் கலந்த உணவும் கொண்டு உனக்கு வழிபாடு செய்வேன், உன் கரையில் உள்ள கோவில்கள், தெய்வங்கள். தீர்த்தங்களுக்கெல்லாம் விழா எடுப்பேன்" (II 52. 87-90; 55. 19-20).

யமுனையின் தென்கரையில் 'ச்யாமா' என்ற ஆலமரத்தைத் தொழுது "திரும்பிவந்து தாயர் கோசலையையும் சுமித்திரையையும் காண அருள் வாயாக" என்று வழிபடுகிறாள் (II 55.24).

இராமன் பிண்டம் இடல்

இராமன் சித்திர கூடத்தில் மந்தாகினி நதிக் கரையில் தசரதனுக்கு, "பேரரசனே! ஒருவன் எதை உண்கிறானோ அதுவே அவனுடைய தெய்வங்களுக்கும் உணவாகும்" (II 103.30) எனக்கூறி இலுப்பைப்

பிண்ணாக்கு, இலந்தை, வெல்லம் கலந்த பிண்டத்தைத் தருப்பையில் படைக்கிறான்.

இதன் தொடர்பாக, பெரிய மான் (அல்லது மீன்) ஒன்றைப் பற்றிக் கொன்று, அதன் ஊனை எடுத்துப் பிசைந்து அழகிய பசும்புல்லில் ஜடாயுக்குப் படைத் தான் (III 68. 33)

இத்தகைய நம்பிக்கைகளும் செயல்களும் கம்பராமாயணத்தில் கூறப்படவில்லை. இராமன் சடாயுவுக்கு நீர் ஊட்டியதும், 'வேதப் பலிக்கடன் முற்றிய' துமே கூறப்படுகின்றன. (3539.40).

அரசன்—புரோஹிதன்

தசரதனுடைய ஆட்சி முறையைக் கூறும் வால்மீகி, வதிட்டன் முதல் காத்யாயநன் ஈறாகப் புரோஹிதர் எண்மர் அவன் அவையில் இருந்ததாகக் குறிக்கிறார் (I. 5. 35). கம்பன் ஒரு புரோஹிதனையே கூறுகிறார்; வதிட்ட முனிவர். வால்மீகியைக் காட்டிலும் கம்பன் வதிட்டனுக்கு ஏற்றம் தருகிறார். ஆட்சியிலும், அரண்மனை நிகழ்ச்சிகளிலும் வதிட்டன் பெற்றிருந்த சிறப்பைக் கீழ்வரும் குறிப்புக்கள் காட்டுகின்றன.

1. தசரதன் தனக்கு மகப்பேறு இல்லாத குறையை, வதிட்டனைத் தொழுது போற்றி, நேர்ந் தான் (180).

தசரதன் செய்யவேண்டியதைத் தானே முடிவு செய்து, பின்னர் அமைச்சர், புரோஹிதர் உள்ள சபையைக் கூட்டினான் (I 8.2).

2. கோசிகன் தன் வேள்வியைக் காக்க இராமனை அனுப்புமாறு கேட்டபோது, மனம்நொந்த தசரதனுக்கு வதிட்டன் உறுதி தந்தான் (328), (I 21. 21)

3. இராமனுடைய திருமணநாள் குறித்தது கோசிகன் (1156). சனகனிடம் குலமுறை கூறி மகட்கொடை வேட்டது வதிட்டன் (I. 71-24).

4. இராமனுக்கு முடிசூடும் எண்ணத்தைத் தசரதன் அவையில் கூற, அதைக்கேட்டு இசைந்த மந்திரக் கிழவரின் கருத்தை வதிட்டனே உரைத்தான் (1346); வால்மீகியில் பொதுவாக அனைவரும் உரைத்தனர் (II:2. 26).

5. 'இராமனுக்கு முடிசூட்டு நாள் நாளை என்றது கம்பனில் வதிட்டன் (1411); வால்மீகத்தில் தசரதனே (II 2.12, 4.2).

6. தசரதன் வேண்ட, அரசுபுரிவதற்கு, இராமனுக்கு உறுதிப்பொருள் கூறியது வதிட்டன் (1409); வால்மீகியில் தசரதனே கூறினான் (II. 3. 39).

7. இராமனை வனம்போகாமல் தடுத்து மகுடம் புனைவிக்க வேண்டும் என்று தசரதன் வேண்டுவது வதிட்டனிடம் (1645). அந்த முயற்சியை வதிட்டனும் செய்தான் (1766).

வால்மீகத்தில் தன் ஆணையை மீறி அயோத்திக்கு அரசனாகுமாறு தசரதன் இராமனை வேண்டுகிறான் (II 34. 26).

8. 'பரதன் பார் அளிப்பான், இராமன் காடுறைவான்' என அவையோருக்கு அறிவித்தது வதிட்டன் (1696).

இத்தகைய அறிவிப்பு வால்மீகத்தில் இல்லை. இராமன் கோசலை அரண்மனைக்கும், தன் அரண் மனைக்கும் போனபின்பே அனைவரும் அறிந்தனர்.

9. தசரதன், தன் மனைவியல்லள் என்று கைகே யியைத் துறந்ததும், பரதனை மகன் என்று நினைக்க வேண்டாம் என்று உரைத்ததும் வதிட்ட முனிவனிடம் (1654); வால்மீகத்தில் அனைவரிடமும் தசரதன் இதைச் சொல்கிறான் (II 12. 92., 14: 14).

10. தசரதன் இறந்தபின் அவன் உடலைத் தயிலக் கடலில் உய்த்தது (1914), மன்னவன் ஆணை முடங்கல் தந்து பரதனைக் கொணரக் கேகயத்துக்குத் தூதரை அனுப்பியது (1915), சுமந்திரனைச் 'செயற்பாற்கு உரிய செய்க' என ஆணையிட்டது (1916) யாவும் வதிட்டனே.

வால்மீகத்தில் 'மம சாஸனாத்' (II 68 .6) 'என் ஆணை யால் இவற்றைச் செய்க' என ஏவியதும் வதிட்டனே.

11. வதிட்டன் பரதனை நோக்கி, 'காக்குதி உலகம், நின் கடன் இது ஆம்' (2247), 'அரசு அளித்தி' (2254) என்று கூறினான். வால்மீகத்தில் 'அரச ஊழியர்' (ராஜ கர்தார; II 89 :1) கூற, வதிட்டன் அவர்களைத் தொடர்ந்து கூறியதாக வருகிறது (7); ஆனால் அவ் வுரையைப் பரதன் ஏற்றுக் கொள்ளவில்லை.

சித்திரகூடத்தில் இராமனிடம் 'அளி உனக்கு உரிய நாடு' (2498) என வதிட்டன் கூறும்போது முன்னர் பரதனிடம் கூறியதற்கு இது முரண்பட்டது என வதிட்டன் அறியவில்லை. வால்மீகத்தில் வதிட்டன் அரசு மூத்தமகனுக்கே உரியது என நீண்ட குலமுறை கிளத்தி முடிவு செய்கிறான் (II 110. 36). இதற்கு இராமன் கூறும்

பதில் வதிட்டனை இழிவுபடுத்துவதாகத் தோன்று கிறது: 'தேன்தரு மலருளான் சிறுவ' (2500) என்பது இராமன் கூற்று. வால்மீகத்தில் வதிட்டன், "தந்தை பிறப்புக்குக் காரணமானவன்; ஆசானோ அறிவுக்குக் காரணமானவன்; ஆதலால் ஆசான் சொல் உயர்ந்தது' (II III.3). எனத் தன்னை உயர்த்திக் கூறும் போக்கை யும் இராமன் மறுக்கிறான். "ஸத்யம் அனைத்தினும் உயர்ந்தது "என்பது அவன் சொற்கள்.

12. இறுதியில் இராமன் திருமுடிசூடலில் இரு கவிஞரும் வதிட்டனுக்குப் பெருமை தருகின்றனர். இரண்டு காவியங்களிலும் நீராட்டலும் முடிபுனை தலும் உள்ளன. எனினும் வால்மீகி காலத்தில் நீராட்ட லுக்கும் (VI ,*28. 61 - 7*). கம்பன் காலத்தில் மௌலிக்கும் (*10327*) முதலிடம் தரப்பட்டதைக் காண்கிறோம்.

கிட்கிந்தையிலும் இலங்கையிலும் முடிசூட்டுச் சடங்குகளில் புரோஹிதன் கூறப்படவில்லை.

தொகுப்புரை:

1. வால்மீகியின் அயோத்தி ஆரிய நாகரிகத்தின் உயர்ந்த நிலையில் இருந்த சமூகத்தைக் காட்டுகிறது. பொருளும் இன்பமும் அறத்தின் வரன்முறைகளுக்கு உட்பட்டவை. அறம் நால்வருண நெறிகளை உடையது.

கம்பனுடைய அயோத்தி தமிழ்நாகரிகத்தின் உயர் நிலையைக் காட்டுவது. நால்வருண வேறுபாடுகள் குறைவு. எனினும் புரோஹிதன் அமைச்சனைவிட உயர்நிலையில் வைக்கப்பட்டான்,

2. வால்மீகி காட்டும் அரசன் தன் செயல்களால் மக்களை மகிழ்விப்பவன்; மக்களைக் காக்கும் கடமை பூண்டவன்; புலன்களை வென்றவன்.

கம்பன் கூறும் அரசன் நீதிவழுவாது ஆணை செலுத்துபவன்; நிலைகொண்ட சமுகத்தில் மரபைக் காப்பவன்; கடவுளுக்கு ஒப்பானவன்.

3. பொதுவாழ்வில் மக்களுக்கெனத் தனி உணர்ச்சிகள் இல்லை. நெருக்கடி நிலையில் அரசனுடைய முடிவுக்கு மக்கள் இணங்கினர். இணங்க முடியாதபோது அவலம் உற்று அழுதனர். கோல்நோக்கி வாழ்ந்ததால் அரசனை எதிர்க்கவில்லை; அவன் முடிவை ஏற்றனர்.

4. உருவ வழிபாடு அயோத்தியில் காணப்பட வில்லை.

5. மக்கள் இறந்தார்க்கு நீத்தார் கடன் ஆற்றினர். வால்மீகத்தில் ஆற்றையும் மரத்தையும் மக்கள் வழிபட்டனர் என்று கூறப்படுகிறது.

3. தாங்கரும் தவம் மேற்கொண்டு

கைகேயி மாளிகைக்குச் சென்ற இராமன் சிற்றன்னையை நோக்கி, "தேவீ! அரசனுடைய ஆணை நல்லதோ, தீயதோ, எதுவாயினும் அதை நிறைவேற்று வேன்; இது என் சபதம்" (II. 18.25) என்று, அந்த ஆணை இன்னது என அறியா முன்னமே சூளுறவு பூண்கிறான். மேலும் அவளுடைய ஐயத்தை அகற்றத் தன்னைப் படர்க்கையில் வைத்து, "இராமன் இரு பேச்சாளன் அல்லன்" ராமோ த்வி:ந அபிபாஷதே (30) என்ற புகழ்பெற்ற வாக்கியத்துடன் தன் பேச்சை முடிக்கிறான்.

கைகேயி அரசன் சொன்னவற்றைக் கூறி, "உன் அபிஷேகத்தைத் துறந்து, சடையும் மரவுரியும் தரித்து ஏழிரண்டாண்டுகள் தண்டகாரண்யத்தில் வாழ்ந்து வருக" (18-37) என்கிறாள்.

இராமன் அவ் ஆணையை ஏற்று,

"நான் அரசன் தந்த வாக்கைக் காக்க மரவுரியும் சடையும் தரித்து வனத்துக்குச் செல்கிறேன். நீர் மகிழ்ச்சியோடு இரும்" என்றும் (19.2,4);

"நான் முனிவரைப் போல் தூய அறவாழ்க்கையைக் கடைப்பிடிப்பேன் என்பதை அறிக" (19. 20) என்றும் கூறுகிறான்.

இதை இராமன் ஜாபாலியிடம் கூறும்போது, "நான் என் தந்தை ஸந்நிதியில் உறுதியான மனத்துடன் மகிழ்வோடு ஏற்றுக்கொண்ட விரதம் தூய்மை, முறை

யான உணவு (நியத போஜந:); வேர், பூ, கனி இவற்றால் தேவர்களையும் பித்ருக்களையும் திருப்தி செய்தல்" (II 109. 26) என்று தன் தவ வாழ்க்கையைச் சுட்டுகிறான்.

கம்பராமாயணத்தில் இந்த நிகழ்ச்சி இடம் பெறும் விதத்தைக் காண்போம்:

கைகேயி இராமனை நோக்கி, "நீ போய்த் தாழ் இரும் சடைகள் தாங்கி தாங்கஅரும் தவம்மேற்கொண்டு, பூழி வெம் கானம் நண்ணி, புண்ணியத் துறைகள் ஆடி, ஏழ் இரண்டு" ஆண்டில் வா என்று இயம்பினன் அரசன் என்றாள்" (1611)

இப்பாட்டில் தவக்கோலமாக சீரம் (மரவுரி) கூறப்படவில்லை. எனினும், இராமன் சீரம் புனைந் தான் (1753). இராமன் சடை புனைவதைத் தசரதன் கற்பனையில் காண்கிறான் (1661). வால்மீகத்தில் இராமன் கங்கைக் கரையில் சடை புனைந்ததாக வருகிறது (II 52. 68). கம்பனில் எங்கு புனைந்தான் என்று குறிப்பிடப்படவில்லை,

சீதை தன் மாளிகையில் 'சீரம் துணிந்து புனைந்தாள்' (1829), நகரைவிட்டு நீங்கிய போது 'சீரைசுற்றி' இராமன் பின்பு சென்றதாகக் கம்பன் பாடுகிறார். (1835) வால்மீகத்தில் சீதை மரவுரி அணியலாகாது என்று தசரதனும் வதிட்டனும் தடுக்கின்றனர் (ii 38. 3-6). தசரதன் அவளுடன் பல ஆடை அணிகலன் களைத் தேரில் அனுப்புகிறான் (II) 39. 16-8). இராவணன் சீதையைத் தூக்கிச் சென்றதைக் கூறும் ஸம்பாதி, பிராட்டியை 'ஸர்வாபரண பூஷிதா (IV 58-15,) என்றே குறிப்பிடுகிறான். கம்பனும், சுக்கிரீவன் வாக்கில், 'இழை

பொதிந்து இட்டனள்' (3903) 'உத்தரியம்......பூந்துகில்' (3908), அனுமன் வாக்கில் 'அணிகள் உன் மங்கலம் காத்த' (5262, எனவும் பாடுவதிலிருந்து சீதை வனவாஸத்திலும் ஆடை அணிகளை அணிந்திருந்தாள் என்பது தெளிவாகிறது.

இவை தவத்தின் புறக்கோலம். இனி அக நிலையில் காண்போம்.

'தவத்திற்கு, உரு' இரண்டு, 'உற்ற நோய் நோன்றல்; உயிர்க்கு உறுகண் செய்யாமை' என்று திருக்குறள் கூறுகிறது (261). தமக்கு உண்டாகும் துன்பத்தைத் தாங்கலும், பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாமையும் தவத்தின் இலக்கணங்கள். புலன் நுகர்ச்சியில் ஈடுபட்டு இன்பம் விழைதலும், அப்படி இன்பம் துய்க்க முடியாத போது துன்பத்தில் உழல்வதும் தவத்தினருக்கு அடுக்காதன.

வால்மீகத்தில், சுமந்திரன் தவத்தின் இயல்புகளாக புலன் அடக்கம், கற்றல் - சிந்தித்தல், அருள் உடைமை ஒப்புரவு (ப்ரஹ்மசர்ய, ஸ்வதீத, மார்தவ, ஆர்ஜவ (II 52.17) ஆகியவற்றைக் கூறி இருக்கிறான்.

இராமனும் சீதையும் காட்டில் வாழ்ந்தபோது அவர்களுடைய புலன் அடக்கம், உணவு முறை ஆகியன பற்றிக் காவிய ஆசிரியர் சொல்வதைக் காண்போம்.

புலன் அடக்கம்

"காட்டில் வாழ்வது துன்பம் தருவது" என இராமன் சீதையிடம் கூறி, அவளை உடன் அழைத்துச் செல்ல மறுக்கிறான். "அவன் மேற்கொண்டுள்ள தவ நிலைக்குத் தான் உடன் செல்வது ஊறு உண்டாக்கும்

என்று கருதுகிறாரோ?" என்ற ஐயம் சீதையின் மனத்தில் எழுகிறது. அவள் வெளிப்படையாக,

"வீரனே! இனிய மணம் கமழும் வனத்தில் உமக்குப் பணி புரிந்து உம் ஆணையின்படி புலன்களை வென்ற வளாக உம்மோடு இன்புறுவேன்."

('நியதா, ப்ரஹ்மசாரிணீ, ஸஹ ரம்ஸ்யே த்வயா, வீர III27. 13)

என்று சொல்கிறாள்.

ஆனால் இங்கு கூறப்படும் "ப்ரஹ்மசர்யம்" மெய்யுறு புணர்ச்சியைத் தவிர்த்தல் அன்று. பல இடங்களில் இதற்குச் சான்றுகளைக் காணலாம்.

இராமனும் சீதையும் இன்புற்று இருந்ததை இராமன் கூறியதாக வால்மீகியின் பாடல் வருமாறு: "இந்தப் பாறையின் மீது, ஏகாந்த இடம் ஆகையாலே, சீதை முற்றூட்டாக ஒளிவு மறைவின்றித் தன்னை எனக்கு அர்ப்பணித்தாள். முறுவலோடு தொடங்கிய இவ் விளையாட்டில் அவள் பெற்ற வெற்றியாலே அவளுக்கு நகை பிறந்தது". (III 63.12).

சுலோகத்திற்குப் பெரியவாச்சான்பிள்ளை வரைந்த உரை இது. "இராமனும் சீதையும் ஒருவர் மடியில் மற்றவர் மாறி மாறிப் படுத்ததை அனுமனுக்குச் சீதை வாக்கில் (V 38 . 21) காண்கிறோம். அனுமனும் இதை இலங்கையிலிருந்து திரும்பியபின் இராமனுக்குச் சீதை சொன்ன அடையாளமாகக் கூறுகிறான் (V 67. 4)

இந்தத் துய்ப்புக்கள் அவர்கள் அயோத்தியில் வாழ்ந்தபோது நிகழ்ந்தனவற்றைப்திபன் மூன்று ஆண்டுகளுக்குப்பின் நினைவு கூர்ந்து இராமனோ

சீதையோ கூறுவன அல்ல. இவை காடுறை வாழ்க்கையின் போது நிகழ்ந்தவை. இன்பநுகர்வின் நினைவுகள் இராமன் மனதை வாட்டுவதைப் பல பாடல்கள் புலப் படுத்துகின்றன.

'காமத்தாலும் சோகத்தாலும் (பிரிவுத் துயராலும்) தளர்ந்தவன்' (V 30. 1).

'இளநங்கை போலக் காட்சி அளித்த பம்பையைக் கண்டு காமத்தால் பீடிக்கப்பட்டு வேறு நினைவு அற்றவன் ஆனான்' (III 75 - 29) என்று வால்மீகத்தில் கூறப்படும் கருத்துக்கள் நோக்குதற்கு உரியன.

கம்பன் அவர்கள் பஞ்சவடி வாழ்க்கையை கூறுவது,

'நாளம் கொள் நளினப்பள்ளி
நயனங்கள் அமைய நேமி
வாளங்கள் உறைவ கண்டு,
மங்கைதன் கொங்கை நோக்கும்
நீளம் கொள் சிலையோன்;
மற்றை நேரிழை நெடிய நம்பி
தோளின் கண் நயனம் வைத்தாள்' (2735)

''வில் இயல் தடக்கை வீரன்
வீங்குநீர் ஆற்றின் பாங்கர்
வல்லிகள் நுடங்கக் கண்டாள்,
மங்கைதன் மருங்குல்நோக்க
எல்லிஅம் குவளைக் கானத்து,
இடை இடை மலர்ந்து நின்ற
அல்லிஅம் கமலம் கண்டாள்
அண்ணல் தன் வடிவம் கண்டாள்'' (2737)

இந்த இரண்டு பாடல்களிலும் கூறப்பட்டவை கட்புலனை ஈர்ப்பன.

(சீதை) ''புனைகோலம் உள்ளும் சிலம்பும் சிலம்பாவேல்
உயிர் உண்டாகும் வகை உண்டோ?'' (3568)

''குயிலும் கரும்பும் செழுந்தேனும்
குழலும் யாழும் கொழும்பாகும்
அயிலும் அமுதும் சுவை தீர்த்த
மொழியைப் பிரிந்தான் அழியானோ?'' (3569)

என வரும் பாடல்வரிகள் செவிப்புலனை ஈர்ப்பன.

''ஆயிழை துப்பு உறழ்க் குமுதவாய்
அமுதம் துய்த்த யான்'' (4238)

என்று இராமன் சீதைபால் பெற்ற இன்பத்தைக் குறிப்பதும், சூர்ப்பணகைக்கு அஞ்சிய சீதை, 'குஞ்சரம் அனைய வீரன் குவவுத்தோள் தழுவிக் கொண்டாள்' (2797) என்று கவிஞர் கூறுவதும் அவர்கள் பெற்ற ஊற்றின்பத்தைக் காட்டுவன.

இங்கு வால்மீகத்தில் வரும் ஒரு காட்சி நினைவு கூரத்தக்கது:

கரதூஷணரையும் அவரோடு வந்த பதினாலாயிரம் அரக்கரையும் போரில் அழித்து வீர ஒளியுடன் இராமன் திரும்பிவருகிறான். அவனைக் கண்ட சீதை அவனுடைய வெற்றி அழகுக்குத் தோற்று, இயல்பான நாணத்தைத் துறந்து, இலக்குவன் அருகில் இருப்பதையும் மறந்து தானே வலியச் சென்று இராமனை இறுகக் கட்டித் தழுவிக் கொண்டாள் (III 30. 39).

இவ்விடத்தில் கம்பன்,

''தம்பியும் அன்னமும் கண்ணின் நீரில்
பாதம் கழுவினார்'' (3062)

என முடித்துவிடுகிறார்.

சூர்ப்பணகை வாக்கில் கம்பன் ஓர் அரிய செய்தியை வெளிப்படுத்துகிறார்.

இராமனும் சீதையும் இல்லற இன்பத்தில் தோய்ந்து ஒருசேர இருந்த அழகைச் சற்றேனும் கண்டு அநுபவித்த ஒரே பாத்திரம் சூர்ப்பணகை ஆவாள்.

இராமனைத் தனியாக முதற்கண் கண்டு, அவன் மீது ஆசை கொண்டு சூர்ப்பணகை உரையாடிக் கொண்டிருந்த போது, 'கடிகமழ்ச் சாலை நின்றும் மெண்ணிடை அரசி வந்தாள்' (2788); சூர்ப்பணகை 'கற்பின் கனலியைக் கண்ணின் கண்டாள்' (2789); அகம் திகைத்துநின்றாள் (2790); சீதையைப் 'பண்புற நெடிது நெடிது நோக்கி.........அழகிற்கு எல்லை இல்லை ஆம்' என்று நின்றாள். 'கண் பிற பொருளில் செல்லா கருத்து எனின் அஃதே கண்ட பெண் பிறந் தேனுக்கு என்றால் என்படும் பிறருக்கு?'' (2791) என்பது அவள் கொண்ட வியப்பு.

மீண்டும் அவள் பார்வை இராமன் மீது சென்றது. அவன் அழகை அநுபவிக்கிறாள். திரும்பிச் சீதையை நோக்குகிறாள். இருவரையும் ஒருசேரச் சேவிக்கின்றாள்.

''ஒரு திறத்து உணர நோக்கி, உருவினுக்கு உலகம் மூன்றின்
இருதிறத் தார்க்கும் செய்த வரம்பு இவர் இருவர் என்றாள். (2792)

அந்தக் கணத்தில் அவள் மனத்தில் ஓர் ஐயம் எழுந்து தெளிகிறது.

''பொன்னைப் போல் பொருஇல் மேனிப்
பூவைப்பூ வண்ணத்தான், இம்
'மின்னைப்போல் இடையாளோடும்
மேவும் மெய் உடையன் அல்லன்'' (2793)

இதன் பொருள்: "இவள் பொன்னை ஒத்த அழகிய ஒப்பற்ற மேனியாள். இவன் காயாம்பூ வண்ணத்தான். மின்னலைப் போன்ற இடையை உடைய இவளுடன் 'மேவும் மெய் உடையவன் அல்லன்' என இவர்களுடைய உடற்கூறு சான்று பகர்கிறது." ஆனால், இத்துணை அழகியவர் ஒருவரோடு ஒருவர் மேவாத மெய் உடையவராக இக் காட்டில் வாழமுடியாது ஆதலால், இவள் 'என்னைப் போல் இடையே வந்தாள்' என்ற தவறான முடிவுக்குச் சூர்ப்பணகை வருகிறாள்.

'உடையன் அல்லன்' என்ற உடன்பாட்டு எதிர்மறைச் சொல்லாட்சியால், 'உண்டு எனினும் உரிய பயன் இலது' என்னும் பொருளாட்சியைக் கம்பன் வேறு சில இடங்களிலும் காட்டுகிறார். 'யானோ கண்ணிற் கண்டேன் அல்லேன்' (*1687*), 'இந் நிலையானுடன் துயில்வார் உளர் அல்லர்' (*5058*), என்பன பிற எடுத்துக் காட்டுக்கள்.

சூர்ப்பணகைக்கு, இராமனும் சீதையும் 'மேவும் மெய் உடையர் அல்லராகத் தோன்றியது, 'நியதா ப்ரஹ்மசாரிணீ' என்பதன் எதிரொலியாகும்.

மேலும், அவர்கள் இருவருடைய தவநிலைக்குச் சான்று பகர்வோளாக வால்மீகத்தில் சூர்ப்பணகை இராவணனிடம், "அவர் பழங்களையும் கிழங்குகளையும் உண்பவர்; புலன்களை அடக்கியவர்; தவத்தினர்; ப்ரஹ்மசர்ய விரதம் காப்பவர்" எனப் புனைந்து உரைக்கிறாள் (III *19. 15*). 'மன்மதனை ஒப்பர்' எனத் தொடங்கும் அவளுடைய இராவண அவைப் பேச்சில் (*3118-23*) இந்த 'ப்ரஹ்மசர்யம்', 'மேவும் மெய், போன்றவை இல்லை; 'அந்தம்இல் தவத் தொழிலர்'

(3119) என்பது உளது. இராமனைக் கண்ட அனுமன், சுக்கிரீவன், வீடணன் போன்றவர் இந்த இயல்பைக் கண்டதாகக் கவிஞர் கூறவில்லை.

உணவு: இனி, இராமன், சீதை, இலக்குவர் காடுறை வாழ்க்கையின்போது கொண்ட உணவு பற்றிய குறிப்புக்களைக் காண்போம்.

குகன் இராமனைக் காண வந்தபோது,

தேனும் மீனும் அமுதினுக்கு அமைவதாகத் திருத்திக் கொணர்ந்ததை (1966) இராமன் ஏற்க வில்லை. குகன் இராமனைச் சிருங்கிபேர புரத்திலேயே தங்குமாறு வேண்டியபோது, 'தேன் உள தினை உண்டால்' (1981) எனக் கூறி மீனை விட்டு விட்டான். 'அயின்றனை கிழங்கும் காயும் அமுது என'(2342) என்று பரதன் இராமனைக் குறித்துக் கூறும் வாக்கால் இராமன் உணவை அறிகிறோம். சுக்கிரீவன் இராமனைக் கிட்கிந்தைக்கு வருமாறு அழைத்தபோது, "வேந்து அமை இருக்கை எம் போல் விரதியர் விழைதற்கு ஒவ்வா" (4134) என்று கூறி மறுத்துவிடுகிறான். வேறு குறிப்புக்கள் இல்லை.

கொல்லாமையும், புலால் மறுத்தலும் இராமன் கொண்ட விரதத்தில் அடங்கியன என்பது, அவன் கோசலையிடம், "முனிவரைப் போல் புலால் மறுத்துக் கிழங்கு, வேர், பழங்களையே உண்பேன்' (II 20:19) என்று கூறுவதிலிருந்து தெரிகிறது. சீதை, இராமனிடம், "பழங்களையும் கிழங்குகளையும் உண்டு வாழ்வேன்; ஐயம் உறாதீர்; உமக்குத் துன்பம் தரேன்" (II 27: 6) என்று உறுதிகூறுவதும் இதை வலியுறுத்துகிறது.

ஆனால், அக்கால முனிவர் புலால் உண்டனர் என்பதற்கு வால்மீகத்திலேயே பல சான்றுகள் உள்ளன.

அகத்தியன் சிராத்தத்தில் ஆட்டு இறைச்சியை உண்டான் (III 61. 4). பரத்துவாசன் பரதனுக்கும் அவன் படைகளுக்கும் படைத்த விருந்தில் மாம்ஸம்—சிறப்பாக மான், மயில், கோழி இவற்றின் வெள்ளை இறைச்சி - இடம் பெற்றது. மதுவகைகள் யாவும் அவர்களுக்கு வழங்கப்பட்டதாகவும் வருகிறது (II 91. 15, 21, 52, 70).

ஆனால், பரத்துவாசனிடம் இராமன், "கிழங்குகளையும் பழங்களையும் உண்டு தர்மத்தை அனுஷ்டிப்போம்" (II 54-16) என்று கூறிவிட்டு, மறுநாளே வனத்துள் நுழைந்ததும், பர்ணசாலைக்கு வாஸ்து சாந்தி செய்ய இலக்குவனை அழைத்து அவன் கூறுவது முரணாக இருக்கிறது. "கருப்பு மானின் ஊன்" கொணர்ந்து பர்ணசாலைக் கடவுளுக்குப் படைப்போம்- (II 56. 25) என்பது அவன் கூற்று. அவ்வாறே இலக்குவன் கருப்பு மானைக் கொன்று, கொழுப்பு நிறைந்த அதன் ஊனை இரும்புச் சலாகையில் கோர்த்துத் தந்தான், பக்குவமாக, குருதியுடன் தீயில் வாட்டினான். (II 56. 26, 27).

சித்திரகூடத்தில் இராமன் சீதையோடு அளவளாவும் போது, "முப்பொழுதும் நீராடி உன்னோடு இனிய பழங்களையும் கிழங்குகளையும் உண்டு வாழ்வதால் அயோத்தியைப் பற்றியும் அரசைப் பற்றியும் என் மனத்தில் எண்ணம் எழுவதில்லை" என்கிறான் (II 95.17). ஆனால், 'தர்மாத்மா ராகவன்' சீதையிடம், "இப்பகுதி கொழுப்புச் சத்து உடையது, இது தீயில்

நன்றாகச் சுடப்பட்டது. சுவைத்து உண்" என மலைப் புறத்தில் கொஞ்சி சீதையை மகிழ்வித்ததாக வால்மீகி பாடுகிறார் (II 96. 1. 2).

இவற்றை, சீதை இராவண ஸந்யாஸியிடம் சொல்லத் தயங்கவில்லை. "என் கணவர் மான்கள், பெரிய மீன்கள், பன்றிகள் இவற்றைக் கொன்று நிறைய மாம்ஸம் கொண்டு வருவார்" (II 47.23) என்பது அவள் கூற்று.

பம்பையைப் பற்றி இராம இலக்குவரிடம் கவந்தன் கூறுவனவும் இங்கு கவனிக்கத் தக்கன. 'அங்குள்ள பருமீன்களைப் பிடித்துக் குச்சிகளில் செருகி, சருகுகளால் தீ எழுப்பி அதில் அவற்றை வாட்டினால் நெய்ச்சோறு போலக் கொழுப்பு சொட்டும். அவற்றைத் தாமரை இலைகளில் உண்டால் அவற்றின் மணம், அழகு, தண்மை, சுவைகளை நுகரலாம்; பிணிகள் அகலும்; மனத்துயர் நீங்கும்', என விரிவாகச் சொல்கிறான் (III 73.13-18).

அனுமன் சீதையிடம் இராமனுடைய பிரிவுத் துயரைக் கூறும்போது உரைத்தவற்றையும் காண வேண்டும்.

> "உன் பிரிவால் வருந்தும் இராகவன் புலால் உண்பதில்லை. மதுவையும் பாராட்டுவதில்லை. புலன்களை அடக்கி, வனத்தில் கிடைக்கும் வேர், கிழங்கு, இலை, காய், பழம் ஆகிய ஐந்தினை மட்டுமே உண்கிறான்" (V. 39. 41).

இந்தச் சொற்கள் அவர்கள் வனவாஸத்தில் பதின் மூன்று ஆண்டுகள் உடனுறை வாழ்க்கையில் உண்டது என்ன என்பதை உறுதிசெய்கின்றன.

தொகுப்புரை:

1. புலன் இன்பங்களை நுகர்வதும், அந்நுகர்வுக்குத் தடைநேரத் துன்பம் உழல்தலும், இராமன் மேற்கொண்ட தவ ஒழுக்கத்துக்கு முரண் அன்று. இது வால்மீகம், கம்பராமாயணம் இரண்டிலும் காணப்படுவது.

2. கொல்லாமையையும், புலால் மறுத்தலையும் அத்தவத்தின் உறுப்புக்களாக வால்மீகி கொள்ளவில்லை; கம்பன் கொள்கிறார்.

4. மக்கள் - கிட்கிந்தையில்

கிட்கிந்தைச் சமூகம் அரசன், அமைச்சன், குடிமகன் சாதிகள் என்ற வர்க்கப் பாகுபாடுகளும், அவற்றை ஒட்டிய உயர்வுதாழ்வுகளும் குறைந்த அளவில் உள்ள சமூகம். 'உணர்வு சென்றுழிச் செல்லும் ஒழுக்கம்' (4047) என்று குறை கூறப்படினும், இராமனே போற்றும் 'நிறை அரசு' (4143) உடையது. 'பேர் அரசுக்கு ஏற்ற யாவையும் புரிந்து போரில் மாண்ட' (4121), வாலி விட்டுச் சென்றது. கிட்கிந்தைச் சமூகத்தில் புலன் நுகர்ச்சி வெறிக்கு இடையே கடமை உணர்ச்சி உடையவரையும் சிந்தனையாளரையும் காண்கிறோம்.

வாலிக்கும் சுக்கிரீவனுக்கும் பகைமை நேர்ந்தது 'பெண் காரணமாக' (V 35. 34) என அனுமன் சீதையிடம் கூறுகிறான். எந்தப் 'பெண்' என்பது சுக்கிரீவன் இராமனுக்குக் கூறும் வாக்கில் வருகிறது. மாயாவியைத் தொடர்ந்து வாலி பிலம் புக்கு ஓராண்டு கழிந்தபின், இனித் திரும்பான் எனச் சுக்கிரீவன் குகை வாயிலை அடைத்துவிட்டுக் கிட்கிந்தைக்குத் திரும்பினான்.

> "அகன்ற நாட்டையும் தாரையையும் உருமையையும் பெற்று நண்பருடன் குளிர்நீங்கியவனாக அங்கு வாழத் தொடங்கினேன்" (IV 46. 9.)

என்ற அவன் சொற்களால் தெளிவாகிறது.

வாலிக்கும் மாயாவிக்கும் பகை நேர்ந்ததும் 'பெண்ணால்' என அனுமன் இராமனிடம் சொல்கிறான். வாலி அந்தத் தானவனைக் கொன்றுவிட்டுத் திரும்பி

வந்து சுக்கிரீவனை விரட்டினான். இந்நிகழ்ச்சி கம்பராமாயணத்தில் அனுமனால் கூறப்படுகிறது.

"கோமகன் (சுக்கிரீவன்) தனைக் கொண்டுவந்து யாம் மேவுகுன்றின் மேல் வைகும் வேலைவாய், வாலி கடிதின் எய்தினான்; சீறினான்; உடல் கடைந்தனன்; இவன் அகன்றனன்" (3843-50). மேலும், "உருமை என்று இவற்குரிய தாரம் ஆம் அருமருந்தையும் அவன் விரும்பினான்" (3852).

இதைக் கேட்டு இராமன் சினம் கொண்டான். 'கண் சிவந்து', சுக்கிரீவனை நோக்கித் "தலைமையோடு நின் தாரமும் உனக்கு இன்று தருவென்" (3855) என உறுதி கூறினான். இராமன் இப்படிச் சொல்வதற்கு, அவனால் பொறுக்க முடியாத இரு காரணங்கள் உள்ளன. ஒன்று வாலி தம்பிபிடம் 'பரிவிலன்' என்பது. மற்றது தம்பியின் 'தாரம் வெளவினன்' என்பது. இவற்றைக் குற்றச்சாட்டுக்களாகவே', தன் அம்பால் வீழ்ந்து கிடக்கும் வாலிமீது சுமத்துகிறான் கம்பராமன். (4038, 4041). வானர நீதி வேறு, 'எய்தின் எய்தியது ஆக' இயங்குவது வானர நெறி' என்பது வாலியின் வாதம்.

ஆனால் வால்மீகத்தில் சுக்கிரீவன் என்ன செய் தான்? காமவசப்பட்டவனாய்த் தாரையுடன் சேர்ந்து இருந்தான் (V 31. 22). சுக்கிரீவனுடைய செயல்கள் இளைய அங்கதன் மனதைச் சுட்டன. பின்னாளில் சீதையைத் தேடி அலைந்து காணாது, சிந்தை அயர்ந்து, கிட்கிந்தைக்குத் திரும்பவும் விரும்பாது உயிரைவிடத் துணிந்தபோது, அங்கதன் சுக்கிரீவனுடைய இழி செயலைப் பற்றி வெறுப்புடன் கூறுகிறான்.

"அண்ணனுடைய காதல் மனைவியை, தாய்க்கு ஒப்பானவளைத் தாரமாகக் கொண்ட அருவருக்கத் தக்கசெயலைப்புரிந்த சுக்கிரீவன் துராத்மா; நன்றி கொன்றவன்: என்னை வாழவிடான் (IV 55. 39).

வாலியினுடைய 'நிறை அரசு' மாறியது. அங்கதன் அரசை ஏற்பான் (IV 21. 9, 11) என அனுமன் தாரைக்குக் கூறியிருந்தான். ஆயினும், வாலி சாகும் முன் சுக்கிரீவனை 'ராஜந்' (22. 7) என்றும், 'ப்லவக ஈச்வர' (22. 10) என்றும், விளித்து அங்கதனை அவனுக்குக் கையடைப் படுத்துகிறான். கம்பராமாயணத்தில் வாலி அங்கதனை இராமனுக்குக் கையடைப்படுத்தினான். (4092).

இராமன் சுக்கிரீவனை அரசனாகவும், அங்கதனை இளவரசனாகவும் நியமித்தான் (IV 26. 12). 'சுக்கிரீவன் என்னைப் பகைவனாகக் கருதினான். இராமன் ஆணையால் நான் இளவரசுப் பட்டம் பெற்றேன்' என அங்கதன் வானரருக்குக் கூறுகிறான் (53. 18).

இம் மாறுதலைக் கிட்கிந்தை மக்கள் ஏற்றுக் கொள்வாரா என்ற ஐயம் இராமனுடைய மனத்தில் எழுந்திருக்கவேண்டும். முறையாக அரசு அங்கதனுடையது. சுக்கிரீவன் 'வலிதில் கொண்டான்' (4143); அதனால் தீங்கு அரும்பலாம் என இராமன் கருதியிருக்கக் கூடும். அதனால் அவ்வாட்சி நிலைபெறுவதற்குத் துணையாக இராமன் அனுமனைச் சுக்கிரீவனுடன் கிட்கிந்தைக்கு அனுப்புகிறான்.

வாக்குறுதியைக் காப்பாற்றாத சுக்கிரீவனைத் தேடிக் குன்றிலிருந்து குதிக்கும் சிங்கம்போல, இலக்குவன் சீற்றத்துடன் மாலியவான் மலையிலிருந்து கிட்கிந்தையை அடைகிறான் (4283). குரங்குகளுக்கு

இவன் காட்சி புதிது. அவை வெகுண்டு ஓடின. எவருடைய ஆணையையும் எதிர்பாராது நெடு வாயிலைத் தாள் இட்டுக் கற்களையும் மரங்களையும் வைத்து அடைத்தன (4301-2). இளையோன் உதைக்க, வாயில் இற்றது. குரங்குகள் அஞ்சிக் காடுகளுக்கு ஓடின (4305).

இலக்குவன் தன் வரவை அறிவிக்க அங்கதனைச் சுக்கிரீவனுடைய அந்தப்புரத்துக்கு அனுப்புகிறான். அங்கிருந்த அலங்கோலத்தில் அங்கதன் சுக்கிரீவனையும் உருமையையும் வணங்குகிறான்; தாரையை வணங்க வில்லை. (VI 31. 36). உருமையின் பாதங்களை மீண்டும் வணங்குகிறான் (37).

சீதையைத் தேடித் தென்திசையில் செல்லும் வானரருக்குத் தலைவன் அங்கதன். காலம் தாழ்த்தமையாலும் சீதையைக் காண இயலாததாலும், ப்ராயோபவேசநம் செய்யக் கருதும் அங்கதன் எஞ்சியோரைத் திரும்பிச் செல்லுமாறும் தன் நிலைமையைக் கூறுமாறும் பணிக்கிறான். அப்போது முதலில் சுக்கிரீவனிடமும் உருமையிடமும் கூறிப் பின்னரே தாரையிடம் நிலைமையைக் கூறச் சொல்கிறான் (55. 14).

வானரர் வாழ்க்கை இயற்கையோடு இணைந்தது ஆதலின் அவர்களுக்கு ஒளிவு, மறைவு எண்ணங்கள் சற்றும் இல்லை.

இலக்குவன் வருகையை முன்னரே அங்கதன் சிறிய தந்தைக்கு அறிவித்திருந்தான். தாரையுடன் இலக்குவன் சுக்கிரீவனுடைய அந்தப்புரத்துக்குள் சென்றதை முனிவர் கூறுகிறார். அந்தப்புரம், ஆஸ்தாந மண்டபம் யாவும் ஒன்றே; அரசுக்கட்டிலும் படுக்கும் கட்டிலும் ஒன்றே, உருமையைத் தழுவிக் கொண்டு, கண்கள் சிவந்து சிறந்த

ஆசனத்தில் சுக்கிரீவன் இருந்ததைக்கண்ட இலக்குவனு டைய கண்கள் வியப்பால் அகன்றன; இந்நிலையில் தன்னை இலக்குவன் பார்த்ததால் தன் செயலுக்கு இடையூறு நிகழ்ந்ததென சுக்கிரீவனுடைய கண்களும் விரிந்தன (IV *33-36*). யாருடைய திகைப்பு, குழப்பம், நிலைதடுமாற்றம் மிகுதியோ அறியோம். சற்று நேரத்தில் இலக்குவனிடம் உண்டான பயத்தால் சுக்கிரீவன் நனைந்த ஆடையைக் களைந்தான் என்று முனிவர் வாக்கால் நாம் அறிகிறோம் (*36.2*).

கிட்கிந்தைக்கு இராமனின் அருள் பெற்று நடந்து போன சுக்கிரீவன் இலக்குவனுடன் இராமனிடம் திரும்பி வரும் காட்சியை முனிவர் கூறுகிறார்.

இலக்குவனோடு பொற்சிவிகையில், வெண்குடை நிழற்ற, சாமரை பரிமாற, சங்கு பேரிகைகள் முழங்க,

> வந்தியர் பாட,........வானரர் ஆயுதங்கள் ஏந்திப் புறம் காப்ப, ராஜ்ய ஸ்ரீ விளங்கல் போந்தான் (IV *38. 11, 13*).

இந்தக் காட்சியைக் கம்பன் 'சிவிகை பின்செல' 'காதல் முன்செல' 'அங்கதன் அயல் செல' 'பரதன் போன்றனன்' நடந்து சென்றான் என்று கூறுகிறான் (*4391-93*).

குரங்குப் படையைப் பற்றிய சில கருத்துக்களை இங்குக் காணவேண்டும்.

குரங்குகளுக்கு ஆயுதப்பயிற்சி இல்லை. (ஒருவிலக்கு வால்மீகத்தில் உண்டு. பின்னால் காண்போம்.) அவர் கள் 'கல்லொடு மரனும் வேரும் கட்டையும் காலில் தீண்டும் புல்லொடு பிறவும்' (*7453*) கொண்டு பொரு தனர். அவை பயன்படாமல் போகும்போது, 'ஒன்றும்

ஆகின்றது இல்லை' என்று இரிந்து ஓடிப்போயினர். (7454). வால்மீகி வானரர்களுக்குப் படைக்கலன்கள் நகமும் பல்லுமே எனப் பல இடங்களில் கூறியுள்ளார்.

வானரப் படைகள் போரின் நோக்கத்தைப் பற்றித் தெளிவாக அறிந்திருந்தனரா என்று ஐயப்படவேண்டி உள்ளது. யார் தோற்றால் என்ன, யார் வென்றால் என்ன என்ற மனநிலை அவர்களுக்கு இருந்தது. மூலபலப் படையை எதிர்க்க இயலாத வானரர்

'மனிதர் ஆளின் என், இராக்கதர் ஆளின் என் வையம்?' (9341)

'சாமின் நீர் என்றல் தருமம் அன்று என்றனர்! (9342)

சாம்பன் இதை ஏற்று,

'காணத்தான் நிற்கத்தான் அக்கறை மிடற்றவர்க்கும் ஆமே?
கோணல் பூ உண்ணும் குரங்கின் மேல் குற்றம்
உண்டோ?' (9348)

என தெளிவாக்குகிறான்.

வால்மீகி காட்டும் கிட்கிந்தையும், அங்கு வாழ்ந்த மக்களும், அவர்களுடைய பழக்க வழக்கங்களும் அயோத்தியையும் கோசல நாட்டையும் அங்கிருந்த மக்களையும் ஒத்தன.

1. கிட்கிந்தை செல்வம் நிறைந்த ஒரு பெரிய குகை போன்றது (IV *33.4*). கொடிகள், மாளிகைகள், மணிகொண்டு இழைத்த மண்டபங்கள், வெண்மை தீற்றிய உயர்ந்த கோபுரங்கள், உத்யாந வனங்கள் ஆகியவற்றைக் கொண்டது (*5-13*). பொன் தோரணங்கள், ஏழு சுற்றுக்கள், பொன்னாலும் வெள்ளியாலும் செய்த ஆசனங்கள், விரிப்புக்கள் இவற்றை உடையது (20). தந்தி இசைக்கருவிகள் தாளவாத்தியங்

களுடன் எங்கும் இசை ஒலி கேட்டது (21). அழகிய மங்கையர் நூபுரமும் மேகலையும் பூசலிடும் ஓசையுடன் நடந்து கொண்டிருந்தனர் (22).

வானரர் ஒவ்வொருவருக்கும் தனித்தனி வீடுகள் இருந்தன (9-12). அவை பலவகைப் பூக்கள் கனிகள் நிறைந்த மரங்களால் சூழப்பெற்றன (15). வீதிகளில் மதுவும் மயக்கம் தரும் மைரேயமும் கமழ்ந்தன (7).

கம்பன் இப்படிக் கூறவில்லை. 'நளன் இயற்றிய நாயகக் கோயில்', 'தளமலர்த் தகைப்பள்ளி' (4286), ,காவல் மாமதில்', 'கதவு', 'நீள் எழுத், தொடரும் நெடு வாயில்' (4301, 4304), வீதி (4309) ஆகியவற்றை மட்டுமே கூறுகிறார்.

2. இராமனும் சுக்கிரீவனும் சந்தித்தபோது ஒருவர் கையை மற்றவர் பற்றினார் (IV 5: 12, 13). கம்பனில் சுக்கிரீவன் இராமனைக் குறுக, அவன் "தடக்கை நீட்டி இனிது இருத்தி" என்றான் (3805). சுக்கிரீவன் இலைகள் அடர்ந்த, அழகிய ஒரு மரக் கிளையை ஒடித்து, தரையில் போட்டு, அதில் இராமனுடன் அமர்ந்தான் (8.13).

3. தீவளர்த்து அதை வலம் வந்து சுக்கிரீவனும் இராமனும் நட்பு பூண்டனர் (5. 15) என்று வான்மீகி கூறுகிறார். வாலியும் இராவணனும் நட்புப்பூண்டதும் இவ்வாறே (VII 34. 42).

கம்பனில் இராமன் சுக்கிரீவனை நோக்கி,

"........நின்னைச்
செற்றவர் என்னைச் செற்றார் தீயரே எனினும் உன்னோடு

உற்றவர் எனக்கும் உற்றார் உன்கிளை எனது என் காதல்
சுற்றம் உன் சுற்றம் நீ என் இன் உயிர்த் துணைவன்''
(3812)

என்று கூறும் பேச்சுடன் இந்த நட்பு மலர்ந்தது; சடங்குகள் ஏதும் இல்லை.

4. வானரர் தமக்குள் எந்த மொழியில் பேசிக் கொண்டனர் என அறிய முடியவில்லை. அனுமன் பேசியதைக் கேட்ட இராமன், 'மொழிப்பண்பாடு அறிந்தவன்' என அவனைப் பலவாறு புகழ்கிறான் (IV 4: 26-33). அனுமன் சீதையிடம் பேசும்பொழுது அவள் மனம் அமைதிபெற, பண்பட்ட மனிதர் பேசும் மொழியில், இருபிறப்பாளர் பேசும் சம்ஸ்க்ருதத்தில், - பேசியதாக வால்மீகி குறிக்கிறார் (V 30. 17, 18). அனுமன் அப்போது வெண்ணிற ஆடை அணிந்திருந்தான் (32.1).

5. சீதை அயோத்தியில் இராமனுக்கு 'மங்களச் செயல்' ஆற்றி ('க்ருத கௌதுக மங்கள:' II 16. 25) வழியனுப்பியது போல, தாரையும் போருக்குப் புறப்படும் வாலிக்கு 'நன்மை விழைந்து' ('ஸ்வஸ்த் யயநம்' IV. 16 10). வழியனுப்புகிறாள். இம் மரபு பல இடங்களில் கூறப்பட்டுள்ளது.

கம்பனில் இந்தச் சடங்கு எங்கும் கூறப்படவில்லை.

6. தாரையை 'ஆர்யா' (VI 24. 29) என்று முனிவர் குறிக்கிறார். அவள் வாலியை 'ஆர்யபுத்ர' என அழைக்கிறாள் (19.27). அங்கதனை வாலிக்கு 'அபிவாதநம்' (தன்னை அறிமுகப்படுத்தி வணங்கி வாழ்த்துப் பெறல்) செய்யச் சொல்கிறாள். 'தீர்காயுர் பவ' (நெடிது வாழ்க) என்ற வாழ்த்தைஅவன் பெறவில்லையே என்று ஏங்குகிறாள் (23. 24-6). வாலி 'அவப்ருத ஸ்நாநம்' செய்யவில்லையே என்று இரங்குகிறாள் (27). இந்தப்

பழக்கங்கள் ஆரிய சமூகத்தவை. கம்பனில் நாம் இவற்றைக் காண்பதில்லை.

7. வாலியின் ப்ரேத ஸம்ஸ்காரம் (IV 24) பெரும் பாலும் தசரதனுடையதை ஒத்தது (II 71). கம்பனில் 'கடன் யாவும் கடைகண்டு' (4112) என ஒரு வரியில் முடிந்துவிடுகிறது.

8. வானரர் ப்ராயோபவேசநம் செய்யத் தருப்பை யைத் தெற்கு நோக்கி வைத்து அதன் மேல் கிழக்கு முகமாக அமர்ந்தனர் (IV 50. 19-20).

9. அரச சின்னங்களாகச் சாமரை, குடை கூறப் படுகின்றன (IV 10. 3). சுக்கிரீவ பட்டாபிஷேகத்தில் பொற்குடம், நாற்கடல் நீர், அவி, ரத்னங்கள், வஸ்த்ரங் கள், கிழக்கிருத்தல், அக்நி - ஸூர்ய - சந்த்ர - மருத் கடவுளர் வழிபாடு போன்ற யாவும் ராமபட்டபிஷேகத் தில் நடந்தனபோன்றே விரிவாகக் கூறப்படுகின்றன.

இதைச் சுருக்கமாக, 'மண்ணும் நீர் முதல் மங்கலங் 'களும் பொன்முடி யாவையும் செய்வன. செய்து, மறை யோர் ஆசிவழங்க, வானுளோர் மலர்தூவ இளையோன் மவுலி சூட்டினான்' (4118, 19) எனக் கம்பன் பாடுகிறார்.

10. கிட்கிந்தையில் இலக்குவனுக்கு அருக்கியம் முதலான தருவதைக் கம்பனும் கூறுகிறார் (4371).

11. அரக்கரும் வானரரும் போருக்கு எழும்போது, பேரி, ம்ருதங்கம் சங்கம் ஆகிய வாத்தியங்களை முழங்கியதாக வால்மீகி கூறுகிறார் (V 35. 1, 50.22).

கம்பனில், போர் இசைக் கருவிகள் அரக்கர்க்கே உள: சம்புமாலி (5557), இராவணன் (9115); வானரர்க்கு இல.

12. வால்மீகத்திலும் கம்பனிலும் 'வாள்' சிறப்புப் பெறுகிறது; எனினும், அதைப் பயன்படுத்தல் வேறுபடு கிறது. வாலி இறக்கும் தறுவாயில், இராமன் அங்கத னுக்கு பொன் உடை வாளைத் தந்தான் என்பது கம்பராமாயணம் (4093). அயோத்தியில் இராமன் திருமுடிசூடிய போது 'அங்கதன் உடைவாள் ஏந்தி னான் (10327).

இராமன் அங்கதனுக்கு வாள் தந்ததை வால்மீகி முனிவர் கூறவில்லை. சுக்கிரீவனுக்கு வாலி பொன் மாலை தந்ததையே பாடியுள்ளார் (IV 22. 16). ஆனால், போரில் அங்கதன் பகைவரை வாளால் கொன்றான் என இருமுறை முனிவர் கூறுகிறார்.

'வஜ்ரதம்ஷ்ட்ரன் உடலை வாளால் இரு துண்டாக்கி னான் (VI 54.35).

'சோணிதாக்ஷனை இடமிருந்து வலமாக நூல் பூண் முறையில் உடலை அறுத்தான் (76. 10).

அவ்வாறே, சுக்கிரீவன் மீது மஹோதரன் வாள் ஓச்ச அதைத் தடுத்து, சுக்கிரீவன் மாஹோதரன் தலையை வாளால் தடிந்தான் (97. 33).

நகங்களையும் பற்களையுமே ஆயுதங்களாக உடையவர் என இழிக்கப்பட்ட வானரர்களில் இருவர் போரில் எதிரியைக் கொல்ல வாளைப் பயன் படுத்தியிருக்கின்றனர். கம்பனில், வாள் 'அங்கதன் உடைவாள் ஏந்த' (10327) என இராமன் முடிசூடு வைபவத்தில் அலங்காரப் பொருளாகவே பயன்படு கிறது.

13. தோற்றத்தில் வானரர்க்கும் நரர்க்கும் உள்ள வேறுபாடு வால் ஒன்றே. வானரர் இரு காலர்; நாற்காலர் அல்லர் என்பதை பல போர்களில் அவர்கள்

தோளாற்றலாலும் கைகளைப் பயன்படுத்துவதாலும் அறிகிறோம்.

"நம் ஊர்ப் புறச் சோலைகளுக்கும் கோபுரங் களுக்கும் அழகு தருவன வானரங்கள்" அன்று கும்ப கருணன் சேனையிடம் கூறுகிறான். (VI 65. 64).

"வானரர் தம் வாலைப் பெருமையாக நினைத்துப் பாராட்டுவர். வால் வானரர்க்கு அழகு தருவது" என்று இராவணன் கூறுகிறான். (V 53. 3)

வானரர் தம் உணர்ச்சி வெளியீட்டுக்கு வாலைச் சாதனமாகக் கொண்டனர். உணர்ச்சி மேலீட்டால் அனுமன் தன் வாலை வீசினான் தரையில் அடித்தான்; (rV 67. 4) அதை முத்தமிட்டான்; (V 10.54) வாலை அடித்ததால் எழுந்த ஓசை இலங்கையை நிரப்பிற்று (42. 31); வாலை ஆட்டினான் (57, 17); மன எழுச்சி யால் வாலைத் தூக்கி நீட்டி, நுனியை வளைத்து அழகு காட்டினான் (64. 39).

இராவணன் வானரர்களின் படையைக் கண்ட போது சாரணன், பல வானரத்தலைவரை அவரவர் வாலைக் கொண்டு அடையாளம் காட்டுகிறான் (IV 26).

14. வானரருடைய வாலின் பயன்பாட்டைக் கம்பனும் கூறியுள்ளார்.

வாலியும் சுக்கிரீவனும் போர் செய்தபோது 'வாலினால் உரம் வரிந்தனர்' (3991) என்று குறித்திருக் கிறார்.

வாலி தன் மீது ஏவப்பட்ட அம்புகளை 'வாலினும் காலினும் பறிப்பன்' (4004) என்பது இன்னொரு பாட்டு.

அனுமன் கடலைக் கடக்கக் கிளம்பியபோது, 'வால் விசைத்து எடுத்து'ப் புறப்பட்டான் (4756).

இலங்கையில் அகப்பட்ட அனுமனின் வாலை மூலம் அறச் சுடும்மாறு இராவணன் ஆணை இடுகிறான் (5921).

சேது பந்தனத்தின் போது வானரர் வாலிடை மலைகளை ஈர்த்து வந்தனர் (6680).

தொகுப்புரை

1. வால்மீகி வானர சமூகத்தில் ஆரிய சடங்குகளைக் காண்கிறார். கம்பன் தாரையின் கைம்மைக் கோலத்தில் தமிழ் வழக்கத்தைக் காண்கிறார்.
2. பொதுவாகக் கிட்கிந்தைச் சமூகம் வேறுபாடுகள் உயர்வு தாழ்வுகள் அற்றது; இயற்கையாகவே சமத்துவம் நிலவியது.
3. கிட்கிந்தைச் சமூகத்தில் அரசும் தாம்பத்ய உணர்வும் நிலை ஊன்றவில்லை.
4. கம்பன் 'உணர்வு சென்றுழிச் செல்லும் இயல்பு' உடையவர்களாக வானரரைக் குறிக்கிறார். வால்மீகித்தில் வானரர் ஆரிய மரபுகள் பல வற்றைக் கொண்டிருந்தனர்.
5. வானரர் சிலரேனும் ஸம்ஸ்க்ருத மொழி அறிந்த வர்கள்.
6. வானரர் இரு கால்களால் நடந்து தம் இரு கை களைத் தொழிலுக்குப் பயன்படுத்தினர்.
7. அவர்கள் வாள் ஒச்சவும் தெரிந்து இருந்தனர் என்று வால்மீகம் கூறுகிறது.

5. மக்கள் - இலங்கையில்

இராவணன் இலங்கையின் அரியாசனத்தில் சூரியனைப் போன்ற ஒளியுடன், மந்திரிகளும் சேனைத் தலைவரும் புடைசூழ, தேவர் பணிசெய்யக் கொலு வீற்றிருந்த மாட்சியை வால்மீகியும் (III 32) கம்பனும் (3068-88) ஏறத்தாழ ஒரே வகையில் வருணிக்கின்றனர்.

அப்போது மூக்கிழந்த சூர்ப்பணகை முன் அறிவிப்பு ஏதும் இன்றி அரசவையில் நுழைந்து, அச்சத்தால் நடுங்கியவளாய் இராவணனைப் பழிக்கத் தொடங்கு கிறாள் (III 33 1..)

கம்பராமாயணத்தில் அவள் 'வடதிசை வாயிலில் வந்து தோன்றினாள்' (3091); 'மூன்றுலகு உடையவன் தங்கை மூக்கிலள் தனியவள் வர' (3092); ஊர் மக்கள் 'புகல்வது ஓர்கிலர் வாய் மடித்து நிற்கின்றார்;' அவள் தாளில் வீழ்ந்தனர்; பொருமி விம்மினர்; புலம்பினர்; புரண்டார்; வாரி கலுழ்கின்றார்' (3093, 3110); 'என்றும் இல்லதோர் அழுகுரல் பிறந்தது அவ் இலங்கைக்கு' (3102); 'அவளைத் தழீஇக் கொண்டு ஏகினார் (3103); சூர்ப்பணகை 'குன்றின் அடிவந்து படி கொண்டல் என மன்னன் கழல் விழுந்தனள்' (31'1).

அதன்பின் நடந்த செயல்களில் மக்கள் பங்கை வால்மீகியோ கம்பனோ கூறவில்லை. இராவணன் சீதையைக் கவர்ந்ததையும், அவள் அசோகவனத்தில் காவலில் வைக்கப்பட்டதையும் மக்கள் அறிந்திருந் தனர் எனின், அவர்களுடைய எதிரலையை இரு கவிஞர் களுமே கூறவில்லை.

மாரீசன் வாக்கின்படி, இலங்கையில் ஆட்சி மக்களுக்கு அச்சமூட்டுவதாலும் கொடுமை புரிவதாலும் நடை பெற்றது. 'மக்களுடைய நலனுக்கு எதிராக, நீதிக்குப் பணிதல் இன்றிக் கடும் தண்டனை விதிப்பதால் நாட்டை ஆளமுடியாது. கொடுமையால் ஆளும் அரசனுக்கு மந்திரம் கூறியும், துணைபுரிந்தும் வாழ்கின்ற ஆணையர் அவ் அரசனோடு அழிவர்.'

ராஜ்யம் பாலயிதும் சக்யம் ந தீக்ஷ்ணேந நிசாசர ।
ந ச அப்ரதி கூலேந ந அவநீதேந, ராக்ஷஸ ॥
யே தீக்ஷ்ண மந்த்ரா: ஸசிவா புஜ்யந்தே ஸஹ தேந வை ।
(III *41.11-12*)

மாரீசனுடைய இந்தச் சொற்கள் இலங்கை ஆட்சியில் மக்களுடைய நிலைமையைக் காட்டுகின்றன.

அனுமன் கண்ட இலங்கையை நோக்குவோம்.

இலங்கை திரிகூடமலைச்சாரலில் உள்ளதெனவும் (IV *2-1.*), மலை உச்சியில் உள்ளதெனவும் (VI *39.179-*) வால்மீகி கூறுகிறார். 'இலங்கை வெற்பு' என்கிறார் கம்பன் (*4830*). இலங்கைக்கு நாற்புறமும் வாயில்கள் இருந்தன. இவ்வாயில்களுக்கு வெளியேதான் போர் நடைபெற்றது.

உலகின் செல்வங்கள் யாவும் இலங்கையில் குவிந்திருந்தன. உலகம் என்னும் பெண் தன் உருவையும் திருவையும் காணவைத்த கண்ணாடி இலங்கை நகர் (*4831*). நுண்புலம் நுணங்கு கேள்வியர் காணக் கூடிய நுட்பத்துக்கு எல்லை உண்டு; ஆனால், இலங்கையில் காணக்கூடிய பொருட்களுக்கு எல்லை இல்லை (*4834*).

'களிக்கின்றார் அலால் கவல்கின்றார் ஒருவரைக் காணா' (4864) அனுமன், அரக்கர் செல்வத்தின் காரணம் என்ன எனச் சிந்திக்கிறான் போலும்! 'வரத்தின் தன்மை அளவற்றார்' (4869); 'ஈட்டுவார் தவம்' (4937) என அவர் முன் செய்த முயற்சியை வியக்கிறான்.

வால்மீகி கவிக்கூற்றாக, 'இராவணன் முயன்று பெறாத பொருள் அங்கு ஏதும் இல்லை. அங்கு உள்ளவை அனைத்தும் அவன் தவத்தாலும், பராக்ரமத்தாலும், மனத்தை ஒருமைப்படுத்தி ஆற்றிய செயல்களாலும் பெற்றவை. அந்த 'மஹாத்மா'வின் புண்ணியம், பெருஞ் செல்வம், புகழ், ஆனந்தம் போலப் பரந்துள்ளது அவனுடைய மாளிகை' (V 8.3-5) என்று கூறுவதும் இங்கு எண்ணத்தக்கது.

அனுமன் இலங்கையில் ஜபம், மந்த்ரம், வேத ஒலிகளைக் கேட்கிறான் (4.13.). இராவணன் மாளிகையிலும் வேதம் ஓதும் புண்ய ஒலிமுழக்கத்தை வீடணன் கேட்கிறான் (VI 10.8). மூன்று ஸ்தாயிகளிலும் இசை ஒலிக்கிறது (V 4.10).

அரக்கர் இருளிலும் தம் தொழில்மிசைச் செல்வர் (4881-2). தேவ மடந்தையர், வித்யாதரப் பெண்கள், நாகவனிதையர், இயக்கர்பாவையர் இரவில் செல்லுவர் (4883). அரக்கர் மாதர் இன்பம் நுகர்வர் (4938).

இவை யாவற்றையும் கண்ட அனுமனின் வியப்பு ஒருபால் இருப்ப, அவன்

'பொரு அரும் திரு உள்ளம் நெக்கு நின்றனன்'
"நீங்கும், அந்தோ, இந் நெடு நகர்த் திரு"
என்னா, (5039).

எனக் கம்பனும்,

'தவத்தின் பயனைத் துய்த்தபின் ஒருவன் வீழ்வதுபோல' இவ் ஊரார் முயற்சிகளின் பயன் குன்ற அவர் வீழ்ச்சி அணியது என்று அனுமனுக்குத் தோன்றியது (V 9. 42).

என வால்மீகியும் பாடுகின்றனர்.

இலங்கைச் செல்வம் வரம்பு கடந்தது பல நாட்டு மக்களின் உழைப்பின் தொகுதி அது, பல வெற்றிகளின் விளைவு. அரக்கர் பெருமிதமும், செருக்கும், பிறருக்கு இழைத்த தீமையும், இலங்கைத் திருநகரின் அழிவுக்குக் காரணமாயின. அனுமன் கண்டபோது இலங்கைச் செல்வம் அழியும் தறுவாயில் இருந்தது.

அனுமன் அசோக வனத்தை அழித்ததைச் சீதையைக் காவல் புரிந்த அரக்கியரே இராவணனிடம் விரிவாகக் கூறினர் (V 42. 13-21). கம்பன் காவியத்தில் பொழிலின் அழிவை இராவணனிடம் கூறச் சென்ற காவலர்—அச்சத்தால் 'நீர் இடு துகிலர் அச்ச நெருப்பு இடு நெஞ்சர்......தெற்றிப் பிணங்கிடு தாளர்' (5483). 'இற்றது கடிகா......தெய்வ இலங்கையும் சிதைந்தது' (5484-5) என நடந்ததையும், நடக்கப் போவதையும் வெளிப்படுத்தினர்.

இராவணன் அனுமனை அழிக்கக் கிங்கரரை அனுப்புகிறான்; ஆனால் அவர்கள்தாம் அனுமனால் அழிகிறார்கள்: இதைச் சொல்லவந்த 'நந்தவனத்து நாயகர்' நடுங்கி, 'பிந்து காலினர்......பெரும்பயம் பிடரின் உந்தச் சென்றனர்' (5543).

சம்புமாலி இறந்த செய்தியைக் கூறவந்தவரும் 'விக்கா நின்றார் விளம்பல் ஆற்றார்.' இராவணன்

'நடுங்காதீர்' என்று சொல்லிய பின்பே அவர் செய்திகளைக் கூறினர் (5599).

மந்திரி குமாரர் எழுவர் அனுமனோடு போர்புரியச் சென்றபோது, 'அவருடைய தாய்மார், நண்பர், உறவினர் யாவரும் கிங்கரர் மடிந்ததைக் கேள்விப்பட்டவராதலால் துயரத்தில் மூழ்கி மயக்கம் உற்றனர்' (V 45-5). இதைக் கம்பன், பஞ்ச சேனாபதிகள் அனுமனுடன் போர் செய்யப் புறப்பட்ட போது, 'சுரிகுழல் மடந்தையர், தொடிக்கை மக்கள், தாயர், மற்று யாவரும் தடுத்தனர் மறுகி; ....அழுது இரங்கினர் புலம்பி' (5614) என்று, பெண்கள் மறித்த செய்தியைக் கூறுகிறார். போருக்குப் புறப்படும் போது அவர்களுக்கு உற்சாகம் ஊட்டாது தடுப்பதும் அழுவதும் தீய நிமித்தங்கள் என்பது அறிந்ததே.

இப்போருக்கான காரணங்களை மக்கள் அறியார்; போருக்குச் செல்ல வேண்டாம் என்பது ஒன்றையே அறிவர்.

போரில் அனுமன் அக்க குமாரனை அரைத்து அழித்த செயல் கண்டு படைகள் அஞ்சி ஓடின. யாரும் இராவணனிடம் சென்று செய்தி சொல்லவில்லை. ஊர் அழுத குரலைக் கேட்டு மண்டோதரி இராவணன் பாதத்தில் வீழ்ந்து புலம்பிய பின்னரே அவன் அறிந்தான். இதைக் கம்பன் சொல்வது குறிப்பிடத் தக்கது. 'காவல்மாத் தேவரும் அழுதனர், களிக்கும் சிந்தையார்' (5716).

அவ்வாறே, பிரமாத்திரத்தால் கட்டுண்ட அனுமன் இலங்கையுள் சென்றபோது, 'அரக்கரும் அரக்கியர் குழாமும் அல்லவர் கரக்கிலர் நெடுமழைக் கண்ணின் நீர்' (5822) என்று கம்பன் குறிக்கிறார். இலங்கைச் சமூகத்தில்

போர் புரிவோர் அரக்கர்; பிறர் ஏவலாளர். ஒரே நிகழ்ச்சி இவ் இரு வர்க்கங்களிடை மாறுபட்ட உணர்ச்சிகளை எழுப்புகிறது.

இராவணனுக்கு உண்டான ஐயத்தையும் அச்சத்தையும் முனிவர் காட்டுகிறார். இராவணன், 'அச்சத்தால் ஒடுங்கிய உடலன்' ஆக இருந்தான் (V 46. 1). படைத் தலைவரை அனுமனுடன் போர்புரிய அனுப்பியபோது, அவன் "முயன்று உம்மைக் காத்துக் கொள்ளும்; போரில் வெற்றி நிச்சயம் அற்றது" (16) என்று கூறியதையும் இங்கு கருதவேண்டும்.

தான் வென்ற இந்திரன், நாகர், கந்தருவர், அசுரர், முனிவர் எல்லாரையும் நினைவு கூர்ந்து, அவர்கள் இன்று தனக்குத் தீங்கு செய்ய எண்ணி ஏதேனும் சூழ்ச்சி செய்திருக்க வேண்டும் என்று நினைக்கிறான் (46. 8-9). தன் காரியம் கைகூடாவிடின், அதன் காரணம் தன் நலிவு அன்று, மாற்றார் சூழ்ச்சி எனக் கூறுவது இறுமாப்பின் இயற்கை; தன்னையே உள்ளூற ஆராயும் தன்மை இன்மை.

இலங்கை எரி உண்ண, யாவரும் ஓடினர்; புகையில் மறைந்தனர். தீயைத் தணிக்க முயலவில்லை. இராவணன் மனையில் தீ புக, அவன் புட்பக விமானத்தில் ஏறி வெளிப்போந்த பின்னரே 'நகர் வெந்தது என்?' எனக் கேட்டான். 'நெருப்பை அணைமின்', 'குரங்கைப் பற்றுமின்' என்று ஆணையிட்டான். வீரர் விரைந்தனர்; தோற்றார்; துஞ்சினார். இராவணன் ஆணை இடுவதற்கு முன்னர் யாரும் செயல்படாமைக்குக் காரணம், இராவணன் ஆணையின்றி மக்கள் எத்தகைய நெருக்கடி நிலையிலும் தாமே இயங்கக் கல்லாதது ஆகும்.

இலங்கை வேக, இராவணனும் அவன் மனைவியரும் புட்பக விமானத்தில் ஏழுநாள் விசும்பிடை இருந்தது (5985, 6581) தலைவனுக்கு அடுக்காத செயல்.

கட்டுண்ட அனுமனைக் கண்டு 'பயத்தினால் பதைத்து இரியலுற்று ஓடுவார்' (5813); அச்சத்தின் உச்சநிலையில் அனுமனை 'யமன்' என்பார்; 'சிவன்' என்பார். தம் காட்சியைக் கற்பனை ஆக்குவார்.

இலங்கையின் அரணையும் படைத்தலைவரையும், படைகளையும் இராவணன் வலிமையையும், அவன் புதல்வர்களின் போர்ச் செயல்களையும் இராமனுக்குக் கூறிய வீடணன், இலங்கைக் குடிமக்களைக் கூறாது விடுத்தது குறிப்பிடத்தக்கது.

யுத்த காண்டத்தில், இலங்கைக் குடி மக்களைப் பற்றிக் கூறப்படும் செய்திகள் மிகக் குறைவு.

இராவணனிடம் அங்கதன் தூதனாகப் புறப்படும் போது இராமன், 'வீடணன் அனுமதிபெற்று இலங்கையுள் புகவேண்டும்' (VI 41.59) என வலியுறுத்துவது கவனிக்கத்தக்கது. வீடணனை இலங்கை அரசனாக முடிசூட்டிய பிறகுஅவனே அந்நாட்டு மன்னன் என்பது கருத்து. போர் முடிந்தபிறகு, சீதையிடம் போய்த் தன் வெற்றியைக் கூறுமாறு அனுமனை அனுப்பும் போதும் இராமன் இவ்வாறே விதிக்கிறான். (112.24) அங்கதனைக் கண்ட நகர மக்கள் அழுகின்ற கண்ணர் ஆகி 'அனுமன் கொல்' என அஞ்சினர் (6988).

இராவணனோ இந்திரசித்தோ மற்ற படைத் தலைவரோ போர்க்கோலம் பூண்டு புறப்பட்ட போது மக்கள் ஆரவாரிக்கவில்லை; போரில் வெற்றி பெற வேண்டும் என்று விரும்பி வாழ்த்தவில்லை. போர் மக்களுடைய வாழ்க்கைக்குத் தொடர்புடையதாய் இருந்தது என்பதற்கு அறிகுறி ஏதும் இல்லை.

முதல்போரில் தோல்வி உற்றுத் திரும்பிய இராவணனை மாதர் 'தனித்தனி' நோக்கினர் (7274). அவனை நோக்கிய கண்களால் அருகில் உள்ளவரை நோக்கி, அவர் கண்களின் வாயிலாக அவர் கருத்தை அறியவும், தம் கண்களால் கருத்தை வெளிப்படுத்தவும் அஞ்சினர். சுற்றத்தார் எந்திரக் கருவி போல் நின்றனர் (7276).

இராவணன்பால் சென்று செய்தி கூறுவோர் களிடம் சுந்தரகாண்டத்தில் காணப்படும் அச்சம் யுத்தகாண்டத்தில் காணப்படவில்லை. பல அழிவு களால் உண்டான இராவணனுடைய கொற்றச் சிதைவு அவர்களுக்கு மனவலிமை தந்ததுபோலும்! கும்ப கருணன் இறந்த செய்தியைச் சீதைக்கும் மாயாசனக னுக்கும் எதிரிலே தூதர் இராவணன் 'செவிமருங்கு எய்திப் பையச் சொன்னார்' (7706). படைத்தலைவன் பிரஹஸ்தன் நீலனால் கொல்லப்பட்டதை இராவண னுக்கு அறிவிக்கச் சென்ற அரக்கர் தலைவன் கோயிலுக்குச் சென்று தியானத்தில் இருப்பவர் போலப் பேசாமல் நின்றனர் (IV 58.59).

அதிகாயன் மாண்டபின்னர், தூதர் மன்னவன் அடியில் விழுந்து அழுது "அதிகாயன் முதல்வராய கோக்குலக் குமரர் எல்லாம் கொடுத்தனர் ஆவி" என்றார் (7987). போர்க்களம் புக்கு, 'மக்களைச் சுமந்து செல்லும் தாதையர் வழியில் ஆவி உக்கனர் என்ன வீசி ஓடினார்' (7985) என்று மேலும் அவர்கள் கூறினர். தானியமாலி, மகன் இறந்த செய்தி கேட்டு, அவைக்கு வந்து, இராவணன் தாள்மேல் விழுந்து புலம்பலுற்றாள்.

இந்திரசித்தன் ஒருவனே எஞ்சுகிறான். அவன் தந்தையைப் "புந்தி இல்லாய்" என விளித்து "மக்கள்

துணை அற்றனை, இற்றது உன் வாழ்க்கை மன்னோ!" (8009) என்று தன் வெறுப்பை வெளிப்படுத்துகிறான். இராவணனுக்குச் சற்று எதிர்ப்பு தோன்றுகிறது.

'வில்லாளர் ஆனார்க்கு எல்லாம் மேலவன்' (9171). இந்திரசித்தன் நிலை இது. அவன் இராமலக்ஷ்மணர் மீது ஏவிய பிரமாத்திரம் போன்ற கணைகள் பயனில ஆக, இதுகாறும் தான் போரில் எதிர்த்த மானிடர், வானவர், முனிவர் என்ற இனங்களைச் சேர்ந்தவர் அல்லர் இவர் எனத் தேர்ந்து, "யான் எனது என்னும் எண்ணம் தீர்ந்தார் எண்ணுறும் ஒருவன்...என்றே... தெரிந்தது" என்றான் (8851).

இராவணனும், போரின் இறுதியில், "இவனோ தான் அவ்வேத முதல் காரணன்?" (9837) என வியக்கிறான்.

வால்மீகத்தில், இராவணன்

"ஆ, இராமன் சிறந்த வலிமை உடையவன்; பெரும் கணைகளைப் பெற்றவன். அவ் வீரனை எவற்றாலும் ஊறுபடாத நாராயணன்—எங்கும் கரந்து உறைபவன், யாவற்றுக்கும் ஆதாரம் ஆனவன்—என்றே கருது கிறேன்" (VI 72.10,11) என்கிறான்.

இன்னது என்று ஆராய இயலாத நிலையில், தம் அறிவுக்குப் புறம்பான ஒன்றை, காரணம் காட்ட முடியாத, கற்பனை சார்ந்த வீரரும் அறிஞரும் ஏற்றுக் கொள்வதற்கு இவை எடுத்துக்காட்டு.

இராம இலக்குவரை நாகபாசத்தால் பிணித்து விட்டு. ஊருக்குத் திரும்பும் போது இந்திரசித்து ஒருவனுக்கே மாதர் பல்லாண்டு இசைத்து, அறுகு தூவி வாழ்த்துவதைக் கம்பனில் காண்கிறோம் (8207).

படைத்தலைவர் இருவர் இராமன் விட்ட வாளிக்கு அஞ்சி ஓடியதாகத் தூதர் கூற, இராவணன் அவர்கள் நாசியைக் கொய்து பறைசாற்றி நகர் முழுதும் அறிவிக்குமாறு ஆணையிடுகிறான். மாலி தடுத்ததால் அந்த ஆணை நிறைவேற்றப்படவில்லை (8308).

இந்திரசித்து பிரம்மாத்திரத்தை இலக்குவன்மீது விட்டு ஊர் திரும்பியதும், இராவணன் உவகைமிகக் கொண்டு, நகரம் களி சிறப்ப, 'விழாக் கொண்டாடுக' என ஆணையிட்டான். அவ் விழா இராவணனும் எஞ்சிய படைவீரரும் கள்குடிப்பதும், காமவெள்ளத்தில் திளைப்பதும், மயங்கித் திரிவதும் ஆக முடிந்தது. ஆனால் போர் அச்சம் உடைய வீரரின் கண்ணுக்குக் காமப் பெண்டிர் முகமும் கண்ணும் வானரக் குழு எனத் தோன்றிற்று (8838). களி ஆட்டம் பயனற்றதாய்ப் போயிற்று.

'வீரர் என்பார்கட்கு எல்லாம் முன் நிற்கும் வீரர் வீரன்' (9145) எனப் புகழப்பட்ட இந்திரசித்தனும் தந்தையை நோக்கி 'ஆசைதான் அச் சீதைபால் விடுதி' (9121) என அறிவுரை கூறினான். ஆயினும் இராவணன் செருக்கு அங்கு மேலிடுகிறது. 'என்னையே எண்ணி யான் இந்நெடும் பகை தேடிக் கொண்டேன்' (9123) என்ற இறுமாப்பு தான் அழியும்போது தன்னுடன் ஊரும் நாடும் குலமும் அழியுமே என்பதை மறக்கச் செய்கிறது.

களம் காணும் இராவணன் வீரருக்கு விருந்தளிக்க விரும்பி வானநாட்டுப் போகத்தை இங்கே தர, 'நறவும் ஊனும் ஆடையும் சாந்தமும், நானமும் புனலும் அமுதொடு பானமும் ஊட்டி சயனம் பரப்புவான் வானநாடியர் யாவரும் வந்தனர்' (9617-20). 'பாடுவார்

ஆடுவார் அம்ளியில் கூடுவார் இந்த்ரபோகம் விழைதர கரை இலாத பெருவளம் கண்ணினார்' (9621-22).

"இன்று யார் விருந்து உண்பார்? சேனை உலந்தது" (9625) எனத் தூதர் சொல்லக் கேட்ட பின்பு முதலில் ஐயுற்றுப் பிறகு தெளிந்தான்.

இவ் விழாவிலும் களியாட்டத்திலும் பங்கு கொண்டவர் போர்வீரரே; அன்றி மக்களுக்குப் பங்கு இல்லை.

இந்திரசித்தன் இறந்தான். 'இன்று இலங்கை அழிந்தது' என்று மக்கள் ஏங்குவார் (9187). ஏவலர் 'இல்லை ஆயினன் உன்மகன் இன்று' எனச் சொல்லினார் (9188). இராவணன் வாள் உருவி இதைச் சொன்னவர்களின் கழுத்தை வெட்டினான் (9190). இந்திரசித்தன் பெற்ற வெற்றியை வாழ்த்திய மக்கள் அவன் இறந்தபோது பட்ட துயரத்தைக் கம்பன் கூறவில்லை.

பல நாடுகளிலிருந்து போர் முடியும் தறுவாயில் அழைக்கப்பட்ட மூலப்படை வீரர் போர் நிகழ்ச்சிகளை அறியார். அவர் இராவணனை,

"மாதரார்களும் மைந்தரும் நின்மருங்கு இருந்தார்
பேது உறாதவர் இல்லை; நீ வருந்தினை பெரிதும்;
யாது காரணம்? அருள்" என...............
சீதை காதலின் புகுந்துள பரிசு எலாம் தெரித்தான்
(9281)

மூலபலம் அழிந்ததைக் கூறும் தூதர், 'நடுங்குகின்ற உடலினர், நா உலர்ந்து ஒடுங்குகின்ற உயிர்ப்பினர், உள் அழிந்து இடுங்குகின்ற விழியினர், ஏங்கினார் பிடுங்குகின்ற உரையினர்—பேசுவார், (9624). இறுதியாக

இராவணன் போர்க்கோலம் பூண்டு வில்லில் நாணைத் தெறித்தபோது என்ன நேருமோ என வானவர் தானவர்களின் மகளிர் அஞ்சினர் (9670).

இராவணன் இறந்தபின் அரக்கிமாரும் வீடணனுமே அழுதனர். அரக்கர் குலத்தில் எஞ்சிய மாலியவானும் (VI 111. 107) வீடணனும் ராக்ஷஸ ப்ராஹ்மணரைக் கொண்டு வேத விதிப்படி ஈமக்கடன்களைச் செய்தனர். (113-121).

சாதிவர்க்க பேதங்கள் இருந்த ஆரிய சமூகங்களில் போர் புரிந்தவர்கள் க்ஷத்ரியரும் மிகச் சிறுபான்மை ப்ராஹ்மணரும் ஆவர். (நாளடைவில் ப்ராஹ்மணர் போர் புரிதல் நின்றுவிட்டது). மற்ற வருணத்தவர் போர்த்தொழிலைக் கற்பதும் பாவம் எனக் கருதப் பட்டது. அவரவர் தம் வருணத்துக்குரிய தொழிலைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற கருத்து தலைதூக்கி இருந்தது. ஆகவே பெரும்பான்மையான மக்கள் போர் நிகழக் காரணம், போர் நடைமுறை, போரின் விளைவு போன்றவற்றை அறியவில்லை; அறிய முற்படவும் இல்லை. போரினால் ஏற்பட்ட அழிவுகளால் நொந்த னர் எனினும், தம் விதியை நோவதன்றிப் போர் நிகழாது தடுக்கவோ, போரின் போக்கைத் திருத்தவோ சிந்திக்கவும், ஆக்க வேலையில் ஈடுபடவும் ஆற்றல் இலர் ஆயினர்.

இலங்கைச் சமூகத்தில் சாதி பேதம் கூறப்பட வில்லை. ஆளும் வர்க்கமும் ஆளப்படும் வர்க்கமும் மட்டுமே கூறப்பட்டுள்ளன. ஆள்வோர் தோல்வியைக் கண்டு ஆளப்படுவோர் களிப்பது பல சமூகங்களில் நாம் காண்பதே. உறவினரும் நண்பரும் போரில் இறந்தால் அது அவரவர்க்கு ஏற்பட்ட இழவே அன்றிச் சமூகத்துக் குப் பொதுவான இழவாக எவரும் கருதவில்லை.

தொகுப்புரை

1. இலங்கைச் சமூகத்தைப் பற்றிக் கூறுவதில் வால்மீகிக்கும் கம்பனுக்கும் பெரும் வேறுபாடு இல்லை.
2. இலங்கையில் சாதிகள் இல்லை.
3. ஆட்சி செய்த வருக்கம் முன் செய்த தவத்தால் முயற்சியால், பெறற்கு அரிய செல்வம் பெற்று பலவேறு மக்கள் இனங்களை வென்று அடிமை கொண்டு செருக்குடன் வாழ்ந்தது. அரசனுடைய இறுமாப்பு படை வீரர்க்கும் பரவியது. அந்தத் தவம் அழியும் நிலையில் இருந்தது.
4. மக்களுக்கும் ஆட்சித் தலைவர்க்கும் தொடர்பு இல்லை.
5. அரசனுக்குத் துணை அவன் சுற்றமும் படைத் தலைவருமே. அரசனுடைய விருப்புவெறுப்புக்களே நீதியைச் செலுத்தின. அரச ஆணை கொடுமையால் நிறைவேறியது.
6. சமூகத்தை அச்சம் நலிவுறச் செய்தது. அந்த அச்சம் ஆட்சியாளரிடமும் பரவியது. போரில் தலைவர்கள் தோல்விகள் உற்றதால் அவ் அச்சம் மெல்ல அகன்றது.
7. அரசன் புலன்களை நெறிப்படுத்தாததால் அழிந்தான்; தன் சமூகமும் அழியக் காரணமானான்.

6. தலைவன் மந்திரம் கொள்ளல்

அரசன் - மக்கள் இவர்க்கிடையே தொடர்பு நிலைபெற முக்கியமான அமைப்பு அரசவை. சிறப்பாக, ஆட்சி மாறும்போதும், பகைவரால் நெருக்கடி உண்டாகும்போதும், மக்களுடைய கருத்தை அறிவதற்கு அரசர் அவையைக் கூட்டினர் என்பதை நாம் இராமாயணத்தில் காண்கிறோம்.

அவையில் மட்டும் அன்றி, அரசன் தானே சென்றோ, தன்னிடம் வரவழைத்தோ, தக்கவரிடம் மந்திரம் கொள்வதையும் காண்கிறோம். சிலர் அரசனைத் தாமே தேடிச்சென்று தம் கருத்தைக் கூறுவதும் உண்டு. அரசன் தன் ஒற்றர் வாயிலாக மக்கள் கருத்தை அறியும் வழக்கம் மல்கி இருந்தது.

அரசனுடைய ஐம்பெருங் குழுக்களாக அமைச்சர், புரோஹிதர், சேனாபதி, தூதுவர், ஒற்றர் கூறப்படுகின்றனர். இராமாயணத்தில் இந்த ஐந்து குழுவினரும் உரிய இடங்களில் இடம் பெறுகின்றனர். அயோத்தி, கிட்கிந்தை, இலங்கை எனும் மூன்று களங்களிலும் அரசில் குறிக்கத்தக்க மாறுதல்கள் ஏற்பட்டன. அயோத்தியிலும் கிட்கிந்தையிலும் ஏற்பட்ட மாறுதல் உட்பூசலால் விளைந்தது. இலங்கையில் அரசன் செய்த தீமையாலும் புறப்பகைமையாலும் ஏற்பட்டது, வானரர் தம் கருத்தைத் தெரிவிக்க வாய்ப்புப் பெற்றது கடற்கரையில்.

இம்மூன்று இடங்களிலும் தலைவன் மந்திரம் கொண்டதை வால்மீகியும் கம்பனும் கூறும் பகுதிகளைக் காண்போம்.

6.1 அயோத்தியில்

வால்மீகத்தில் தசரதனுடைய மந்திரிகள் த்ருஷ்டி, ஜயந்த, விஜய, ஸுராஷ்ட்ர, ராஷ்ரவர்தந, அகோப, தர்மபால, ஸுமந்த்ர (I 7-3) என்ற எண்மர். அவர்கள் புறநிலையோடு அகநிலையும் அறிந்தவர்; என்றும் அரசனுடைய நலத்தையே நாடுபவர். (I) காவியத்தில் வதிட்டன் உள்ளிட்ட எட்டுப் புரோகிதர்களுக்கு முன்னதாக அவர்கள் கூறப்படுகின்றனர். மேலும், பல சான்றோர் ('பௌர்விகா:) கல்வி, கேள்வி, ஒழுக்கங்களில் சிறந்தோர் அரசனைச் சூழ்ந்து இருந்தனர் (6-8).

இந்த அமைச்சர் எண்மரில் கம்பன், சுமந்திரன் ஒருவனையே பெயரால் குறிப்பிடுகிறார். சுமந்திரன் பல இடங்களில் மந்திரியாகவும், துணைவனாகவும், தேர்ப் பாகன் ஆகவும் காணப்படுகிறான். அவனை 'மந்திரி சுமந்திரன்' (*1856*) என்றும், 'தேர்வலான்' (*1858, 1879, 2326*), 'தேர்ப்பாகன்' (*1895*), 'தந்தை துணை' (*2329*) என்றும் கம்பன் குறித்துள்ளார்.

இராமன் நகர்நீங்கிச் சென்றபோது, சுமந்திரன் தேர் ஓட்டிச் சென்றான். இராமன் திருமணத்துக்கும், திருமுடி சூட்டலுக்கும் சென்றபோது, அவன் தேர் ஓட்டியதாகக் கூறப்படவில்லை.

சுமந்திரன் முதியவன்; தசரதனுடைய தோழன். எனினும், கைகேயி பணிக்க, முடிசூட இருந்த இராமனை அழைக்கச் சென்றபோது, இராமனிடம் பணிவாகவே நடந்துகொண்டான். 'குன்று இவர் தோளினானைத் தொழுது வாய் புதைத்துக் கூறினான்' (*1574*) என்பது

பாட்டு. இராமனும் அப் பணிவை ஏற்றுக் கொண்டான். இராமனை வனத்தில் விட்டுத் திரும்பும்போதும் சுமந்திரன் இராமனின் 'அடிஉறத் தழுவினன்; படி உறப் புரண்டனன்' (1864). அதைக் கண்ட இராமன் சுமந்திரனைத் தடக்கையால் எடுத்துத் தழுவி, கண்ணீர் துடைத்து, வேறு இருத்தினான் (1865). இந்தப் பணிவும் நிகழ்ச்சியும் வால்மீகத்தில் காணப்படவில்லை.

வால்மீகி முனிவர், இராமனுடைய கல்யாண குணங்களைக் கவிக்கூற்றாக விரிவாகக் கூறுகிறார். அவற்றில் திளைத்த தசரதன் அமைச்சர்களுடன் கலந்து இராமனை இளவரசன் ஆக்க முடிவு செய்தான் (II 1.42).

நகரத்தார், கிராமத்தார், நாட்டுப் பெருமக்கள், அரசர் யாவரையும் ஒன்று கூட்டினான் (46). அவையினர் தத்தம் இருக்கையில் அமர்ந்து அரசன் முகம் நோக்கினர் (50). தசரதன் துந்துபிபோல், மேகம் போல் முழங்கி, அனைவரும் மனம்மகிழ, சாரம் உள்ள சொற்களால் இனிய குரலில் பேசினான் (II 2.3). "இக்ஷ்வாகு தொடங்கிப் பல அரசர் மக்களைத் தம் புதல்வர் போல் காத்தனர். மன் அறம் என்னும் நுகத்தை நெடுங்காலம் தாங்கி இளைத்தேன். ஓய்வு பெற விரும்புகிறேன். சிறந்த பண்புகளை உடைய இராமனை இள அரசில் நாளைக்காலை நியமிப்பதாக எண்ணியுள்ளேன். பெரியோர் அதற்கு அனுமதி தரவேண்டும்" என வேண்டுகிறான்.

"தாங்கள் அனைவரும் எனக்கு அனுமதி தரவேண்டும்; அன்றி, நான் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என விரும்புகிறீர்கள்?"

'பவந்த: மே அநுமந்யதாம் கதம் வா கரவாணி அஹம்'

(II. 15)

"இது எனக்கு இன்பமும் நன்மையும் தருவது; வேறு உள எனினும் நடுநிலையில் நின்று ஆராய்ந்து வாழ்வின் உயர்நலத்துக்கு உரியதைச் சிந்தியும்"

'யத் அபி ஏஷா மம ப்ரீதி: ஹிதம் அந்யத் விசிந்த்யதாம் ।
அந்யா மத்யஸ்த சிந்தா து விமர்த அப்யதிக உதயா' ॥(16)

முதலில், தசரதன் உறுதி செய்துகொண்ட கருத்து; இரண்டாவது, அவ் உறுதிக்கு அவையோரின் ஒப்புதலை நாடுதல்; மூன்றாவதாக, வேறு முடிவுகள், முறைகள் உளவேல் அவற்றை ஆராய்தல், என இவ் உரை மூன்று பகுதிகளைக் கொண்டது.

முதியோன் தசரதனுடைய கருத்தை அறிந்த அவையோர் உடனே தம் இசைவைத் தந்தனர் (20). தசரதனுக்கு அந்த இசைவு முழுத்திருப்தி தரவில்லை. அவையோருடைய உடன்பாட்டுக்குக் காரணம் வினவுகிறான் (25). அவையோர் இராமனுடைய குணங்களைப் பரக்கக் கூறி (27-54), அவன் அபிஷேகம் செய்விக்க உரியன் எனக் கூறினர்.

செயல் ஆக்க முடிவு ஒன்றே எனினும், அம்முடிவுக்குக் காரணங்கள் பல ஆகலாம். காரணங்களுள் ஒன்று மற்றொன்றிற்கு முரண்பட்டதாகலாம். ஆதலால் அவையில் ஒவ்வொருவரும் தத்தம் காரணங்களைக் கூறி முடிவு நாட்டுதல் வேண்டும்.

அரசன் அவையோர் கூறியதைக் கேட்டு மகிழ்ந்து, வதிட்டன் முதலாய அந்தணரை மறுநாள் நடக்க உள்ள அபிஷேகத்துக்கு வேண்டியனவற்றைச் செய்யுமாறு வேண்டுகிறான் (II 3-4.). அவர் கருத்தை வினவவில்லை. செயல் முற்றியதால், ஒளிபொருந்திய தசரதன் சுமந்திரனை அனுப்பி, விரைவில் இராமனை அழைத்துவரப் பணிக்கிறான் (22). இராமன் வந்ததும்,

"நீ மூத்த மகன் ஆதலாலும், குணங்களால் சிறந்தவன் ஆதலாலும், பண்பால் மக்களுடைய மனத்தைக் கவர்ந்துள்ளதாலும், 'யௌவ ராஜ்யம்' பெற உரியவன். நாளையே நீ அதை ஏற்க வேண்டும்" (3.39,40) என்று கூறி, மேலும் அவன் 'என்றும் புலனடக்கத்துடன் இருந்து மக்களைக் காக்க வேண்டும்' என அறிவுரையும் பகர்கிறான். 'பவ நித்யம் ஜிதேந்த்ரிய' (42). இராமன் யாவற்றையும் பணிவுடன் கேட்டுப் பதில் கூறாமல் நண்பருடன் தன் மாளிகைக்குத் திரும்புகிறான்.

கம்பன் இந்த நிகழ்ச்சியைக் கூறும் விதத்தைக் காண்போம்.

தசரதனுடைய மந்திர அவைகள் இரண்டு: 'மந்திரக் கிழவ'ரைக் கொண்டது ஒன்று; 'வேந்தரை'க் கொண்டது மற்றொன்று.

தசரதன் மந்திரக் கிழவரை 'வருக' என்று ஏவினான் (1314).

தசரதனுடைய 'மந்திரக் கிழவர்' அறுபதினாயிரர் (1323). அவர்கள் அரசனை 'மறிதிரைக் கடல் என வந்து சுற்றினார்'. அரசனை வணங்கிக் கை தொழுது, அவன் 'அருளும் சூடினார்' (1324). அவர் 'குலமுதல் தொன்மையர்'; 'கேள்வியும் பயனும் எய்தினார்'; 'நடுவு நோக்குவார்'; 'தருமம் தாங்கினார்'; 'திருவின் பெட்பினர்'; 'மேல்வந்து உறு பொருள் உணரும் கோளார்'; 'தலைவற்கு உறுதிபயக்கும் நீரார்' எனப் பலவாறாக அவர் பண்புகளைக் கம்பன் கூறுகிறார். 'தலைமகன் வெகுண்டபோதும், வெம்மையைத் தாங்கி, நீதி விடாது நின்று உரைக்கும் வீரர்' (1318-22) என்பது அவர் சிறப்புப் பண்பு.

அவை கூடியது. அரசன் மந்திரக்கிழவரை நோக்கி, "இராமனுக்கு அரசை நல்கி வனத்தை நண்ணுவேன்; யாது நும் கருத்து?" எனக் கேட்டான் (1343). தசரதன் அளிப்பதாக இங்குக் கூறுவது அரசை; வால்மீகத்தில் 'இளவரசை'.

அவையினர் வெருண்டு, 'இரண்டு கன்றினுக்கு இரங்கும் ஓர் ஆ என இருந்தார்'; 'ஆயினும்,.... அரசனுக்கு...உறுதி எனக் கருதியும், இராமனின் மன்னவர் இல்லை என்ன உன்னியும், விதியது வலியினும், இசைந்தார்' (1345). அவர் இசைவைப் 'பொதுவுற நோக்கித் தெரிந்து' வதிட்டன் செப்பினான் (1346). "அரச, நிற்கு உறு பொருள் அறியின், புனித மாதவம் அன்றி ஒன்று இல்" எனப் புகன்றான் (1353). தொடர்ந்து, 'மந்திரக் கிழவர் தம் முகத்தால் எழுதி நீட்டிய இங்கிதம்', "நின் முதல் மணிப்புதல்வனை அரசன் ஆக்கு"வது (1359) எனச் சுமந்திரன் சொன்னான்.

சுமந்திரனை அனுப்பி இராமனை வரவழைத்து, அரசன் "யான் நின்னை வேண்டி எய்திட விழைவது ஒன்று உளது" (1373) எனத் தொடங்கி, நீ "மாமுடி புனைந்து இந்த நல் அறம் புரக்க நினையல் வேண்டும்" (1381) என முடிக்கிறான்.

இது தசரதனுடைய வேண்டுகோள்; இராமனுக்குக் கூறும்போது, அவன் அவையினரிடம் மந்திரம் கொண்டதைக் குறிப்பிடவில்லை; தன் சுமை நீக்கு வதையே காரணமாகச் சொல்கிறான். இராமன் 'காதல் உற்றிலன்; இகழ்ந்திலன்; கடன் இது என உணர்ந்தும், 'கொற்றவன் ஏவியது செயல் நீதி எற்கு என நினைந்தும் அப்பணி தலைநின்றான்' (1382).

அம் மந்திரம் முடிவுற்றது.

'மந்திரக் கிழவர்' மீண்டும் காவியத்தில் காணப் படுவது கேகயத்தினின்று பரதன் திரும்பியபோது. அம் 'மந்திரக் கிழவர்' பரதனைச் சுற்றினார் (2245). வதிட்டன் பரதனை நோக்கி, "அந்தமில் பேர்அரசு அளித்தி" (2254) என்று கேட்டபோது, அவர்கள் யாதும் கூறவில்லை. ஆனால், பரதன் வதிட்டன் வேண்டுதலை மறுத்தபோது, அவையினர் "வாழிய நின் புகழ்" என வாழ்த்தினர் (2263).

பரதன் சித்திர கூடத்துக்குச் சென்றபோதோ, இராமன் குறித்த காலத்தில் வாராமையால் பரதன் எரிபுகத் துணிந்தபோதோ, மந்திரக்கிழவர் அங்கு இருந்ததாகக் கூறப்படவில்லை. ஆனால், இராமன் திருமுடி சூடப் பெறுமுன் அவர் அவனுக்கு நீராட்டினர் (10323); அரியணையில் அமர்ந்தபோதும் 'மந்திரக் கிழவர்' அவையை அலங்கரித்தனர் (10338).

கம்ப ராமாயணத்தில் மட்டும், அயோத்தியில் காணப்படும் 'வேத்தவை'யைப் பார்ப்போம்.

வேந்தரை 'வருக' என 'உவணம் வீற்றிருந்த இலச்சினை போக்கி' அழைத்து, அவர்களிடம் தசரதன் தன் முடிவைக் கூறினான் (1386).

இது நடந்தது இராமன் அரசை ஏற்றுக்கொண்ட பின்பு என்பது குறிப்பிடத் தக்கது.

வேந்தர் இராமன், பரசுராமனுடைய வீரத்தைச் செகுத்த சேவகத்தை நினைவு கூர்ந்து, "அவற்கு ஆவ இவ் உலகம், ஈது அறன்" என்றார் (1389). தசரதன் உவகையனாய், "தகவு என நினைந்தது எத் தன்மை யால்?" (1391) எனக் கேட்டான். அவர்கள் வாயால் இராமனுடைய பெருங் குணங்களைப் புகழக்கேட்டு

மகிழ்ந்தான். "என் மகன் என்பது என்? நெறியின் ஈங்கு இவன் நும் மகன்; கையடை நோக்கும் ஈங்கு" (1397) என்று, அவன் வேந்தரிடம் கூறினான்; மந்திரக் கிழவரிடம் கூறவில்லை.

இராமன் முடிசூடப் 'பொருந்து நாள் நாளை' என (1408) நாள் குறித்தது தசரதன் அல்லன்; 'உரை தெரி கணிதர்' (1399)

இராமனுக்கு 'உறுதி வாய்மையும் சொல்லுதி பெரிது' எனத் தசரதன் வதிட்டனைத் தொழுது வேண்டினான் (1409). தானே அவற்றைச் சொல்ல வில்லை.

வால்மீகத்தில் தசரதன் அவையோரிடம் அனுமதி கேட்கும்போதும், இ ரா ம னி ட ம் 'யௌவராஜ்ய அபிஷேகம்' பற்றித் தெரிவிக்கும் போதும், அவனிடம் ஒரு தயக்கம் காணப்படுகிறது. அவன் கூறவேண்டுவன அனைத்தும் கூறவில்லை. கூறியதினும் கூறாதது குறிப்பிடற்பாலது என முனிவர் உணர்த்துகிறார். தன் முடிவைக் கேகயனுக்கும் சனகனுக்கும் தெரிவிக்கவில்லை. மறுநாளே அபிஷேகம் என்று உறுதிசெய்யப்பட்ட படியால் பின்பு தெரிவிக்கலாம் என அவன் கருதினான் (II.1.48).

இராமன் தன் மாளிகையை அடைந்ததுமே, சுமந்திரன் அங்கு வந்து அரசன் மீண்டும் அழைப்பதாக அறிவித்தான். ஆனால் அழைப்பைக் கூறும் முறை ஆணையாகவும் இல்லை; வேண்டுகோளாகவும் இல்லை.

"அரசர் உம்மைப் பார்க்க விரும்புகிறார். அங்கு வருவதா இல்லையா என்பதை நீரே முடிவு செய்து கொள்ள வேண்டியது."

"ராஜா த்வாம் த்ரஷ்டும் இச்சதி
ச்ருத்வா ப்ரமாணம் தத்ர த்வம் கமநாய இதராய வா !! (4. 7)

அரசனுடைய மறு அழைப்பும் சுமந்திரன் அதைக் கூறும் முறையும் இராமன் எதிர்பாராதன. எனினும் இராமன் காலம் தாழ்த்தாது, சுமந்திரனுக்கு எந்த விடையும் கூறாது, திரும்ப அரசர் மாளிகைக்குப் போகிறான். தசரதன் முன்னர் இருந்த அரசபாணியில் அன்றி, தாழ்ந்த குரலில், தன் முதுமையையும், உற்ற நிமித்தங்களையும், கோள்களின் நிலையையும் கூறி, பரதன் பட்டாபிஷேகத்துக்கு வர இயலாத நிலையையும், அவன் பல பண்புகளை உடையவன் என்பதையும் நினைவு கூர்ந்து, யாக்கை நிலையாமைபற்றிக் கூறித் தன் பேச்சை முடிக்கிறான் (12-27).

இது ஒரு புதிர். இராமன் யாதும் பேசவில்லை. தசரதன் விடைதர இராமன் விரதம் காக்கத் திரும்புகிறான். இந்த நிகழ்ச்சி கம்பராமாயணத்தில் இல்லை.

தொகுப்புரை : அயோத்தியில்

1. வால்மீகத்தில் அந்தணரையும் அரசரையும் சேனைத் தலைவரையும் உறவினரையும் கொண்ட ஒரே அவை.

   கம்பனில் 'மந்திரக் கிழவர்', 'வேத்தவையினர்' என்ற பாகுபாடுள்ள இரு அவைகள்.

2. வால்மீகத்தில் இராமனை இளவரசன் ஆக்க அரசன் அவையினரின் அனுமதியை வேண்டினான். அவர்கள் தம் முடிவைத் தெரிவித்தபோது அதற்குக் காரணம் கேட்டான்.

கம்பனில் அரசன் இராமனுக்கு அரசை நல்கும் கருத்தைக் கூற அவையினர் அதற்கு இசைந்தனர். வதிட்டன் தெரிந்து செப்பினான். சுமந்திரன் மந்திரக் கிழவர் கருத்தை இங்கிதத்தால் அறிந்து கூறினான்.

3. கம்பனில், அரசன் வேத்தவையினிடம் மட்டுமே காரணம் கேட்டறிந்து, இராமனை அந்த அவையினருக்குக் கையடைப் படுத்தினான்.

4. வால்மீகத்தில், தசரதனுடைய தயக்கம் காணப் படுகிறது. இராமனை அரசன் இரண்டாம் முறை அழைத்துத் தன் தளர்ச்சியை வெளியிட்டான்.

6.2 மந்திரம் - கிட்கிந்தையில்

சுக்கிரீவன் எவரிடத்தும் மந்திரம் கொள்ளவில்லை. எனினும் அவன் இன்பநுகர்வில் திளைத்து இராமனுக்குத் தந்த வாக்குறுதியை மறந்து மயங்கி இருந்தபோது, அனுமன் அவனை அணுகுவதை வால்மீகி நுணுக்கமாகக் கூறுகிறார்.

'கூறக் கருதிய பொருளை ஐயம் திரிபு அற உறுதி செய்து கொண்டு, அப்பொருளில் பதிந்த உண்மையை மனத்தில் கொண்டு, சொலற்குரிய காலத்தையும் சூழ்நிலையையும் தெரிந்து, அச் 'சொல்லின் செல்வன்' சுக்கிரீவனுக்கு அருகில் வந்து அவன் மனத்தை மகிழச் செய்ய, தெளிவான வாக்கியங்களால் பல காரணங்களுடன், நன்மை பயப்பதும், உண்மையானதும், உகந்ததும், அமைதி-அறம்-பொருள்-நீதிகளுக்கு உட்பட்டதும், அன்பு நிறைந்ததும், நம்பிக்கை ஊட்டுவதுமான உரையை ஆற்றினான் (IV 29. 6-9).

அனுமன் மற்ற மந்திரிகளுக்குக் கூறுவது; "மந்திரிகளை அரசன் நியமிப்பது அவனுக்கு நன்மை பயப்பனவற்றைக் கூறவே அன்றோ? அவன் சினம் கொள்வான் என்று அஞ்சாது அவனுக்கு உறுதி கூறுவதே என் கடமை" (32-18).

கம்பராமாயணத்தில் இலக்குவனுடைய சீற்றத்தைத் தாரையும் அனுமனுமே தணித்தனர். அங்கதன் சுக்கிரீவனிடம் சென்றிருந்தான்.

வானரரிடம் மந்திரம் கொண்டவன் இராமன். மந்திரப் பேச்சு கடற்கரையில் நிகழ்ந்தது.

கடற்கரையில்—இராமன்

வீடணனை அடைக்கலமாக ஏற்றபொழுது இராமன் வானரருடன் மந்திரம் கொள்கிறான்.

எதிர்பாரா நிலையில், மேருசிகரம் போன்ற பேருருவுடன், மின்னின் ஒளிவீச, வானில் கவசம் தரித்தவராய், ஆயுதங்கள் ஏந்திச் சிறந்த ஆபரணங் களைப் பூண்டு, ஐவர் வந்ததைச் சுக்கிரீவன் கண்டான், (VI 17. 2-4). அவர்கள் தம்மைக் கொல்ல வந்துள்ளனர் எனக் கருதி வானரர் கற்களையும் மரங்களையும் எடுத்தனர். வானத்தில் நின்றவாறே வீடணன் உரத்த குரலில் தன் வரலாற்றைக் கூறி, இராமனைச் சரணம் அடைய வந்துள்ளதாக அறிவித்தான். இதை இராமனிடம் சென்று அறிவிக்க வேண்டினான். சுக்கிரீ வன் பதட்டத்துடன் சென்று இராமனுக்கு அறிவித்த துடன், அந்த ஐவரும் ஒற்றர், தீவிரமாகத் தண்டிக்கப் படவேண்டியவர், கொல்லப்படவேண்டியவர் என்ற கருத்தையும் தெரிவித்தான் (19-29).

இராமன் சற்று நேரம் மௌனமாக இருந்தபின், அமைதியாகப் பிற நண்பர்கள் கருத்தைக் கேட்டான். சுக்கிரீவன் முன்னரே தன் கருத்தை உணர்த்தி இருந் தான்; ஆதலின், அவனைத் தொடர்ந்து அங்கதன், சரபன், சாம்பன், மைந்தன் என்ற நால்வரும் முதலில் வீடணனை வினாவி, அவன் வந்துள்ள நோக்கத்தை ஐயமற அறிந்தபின், அவனை ஏற்பது குறித்து முடிவு எடுக்கவேண்டும் என்றனர்.

அனுமன் தன் கருத்தைக் கூறத் தொடங்கினான். அவனை வால்மீகி முனிவர் அழகாக அறிமுகப் படுத்துகிறார்.

அமைச்சருள் சிறந்தவன் (ஸசிவ உத்தம:); திருந்திய கல்வி, கேள்வி, ஒழுக்கச் செல்வம் உடையவன் (ஸம்ஸ்கார ஸம்பந்ந:); அவன் பேச்சு தெளிவு, பொருள் செறிவு, இனிமை, எளிமை பொருந்தியது (ச்லக்ஷண அர்தவத் மதுரம் லகு 17-50).

இத்தகைய சொற்களின் செல்வனாகிய அனுமன், பல காரணங்களைக் காட்டி விளக்கித் தனக்கு வீடணன் மீது எந்த ஐயமும் இல்லை எனத் தெரிவித்து, இருப் பினும் 'ஆணை உமதே' (ப்ரமாணம் த்வம் ஹி) என முடிக் கிறான் (68).

அனுமன் பேச்சைக் கேட்டபின் இராமன். "நட்புப் பூணும்' மனத்துடன் வந்து என்னை அடைந்தவனை நான் எக்காரணத்தைக் கொண்டும் கைவிட மாட்டேன்" (மித்ர பாவேந ஸ்ம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந 18-3) என்று தன் கருத்தை வெளியிட்டான். சுக்கிரீவன் அதை மறுத்துப் பேசுகிறான்.

"நல்லவன் ஆகட்டும், கெட்டவன் ஆகட்டும். இந்த நெருக்கடி நிலையில் தன் அண்ணனைத் துறந்தவன் வேறு எவரைத்தான் கைவிடமாட்டான்? அத்தகைய வனால் என்ன பயன்?" (18-5-6) என்பது அவன் வினா.

இப் பேச்சு இலக்குவனுக்குப் புன்னகையை வரு வித்தது (7). காவியத்தில் வேறு எங்கும் இலக்குவன் சிரித்ததாகவோ, புன்னகை கொண்டதாகவோ, காணப் படவில்லை.

இலக்குவன் ஏதும் பேசவில்லை. அவன் குறிப்பை உணர்ந்த இராமன் "என்மேல் உள்ள அன்பு அன்றோ

இவன் தன் செய்கையையும் மறக்கும்படி செய்தது!'' என வியந்து, சுக்கிரீவனுடைய அச்சத்தை அகற்றி, 'வீடணன் ஏற்றுக் கொள்ளத் தக்கவன்' என்ற தன் முடிவை அறிவிக்கிறான் (14). அத்துடன், "உன்னை ஒத்த நண்பரும் பரதனை ஒத்த தம்பியரும் உலகில் உண்டோ?'' (15) எனச் சுக்கிரீவனைப் புகழ்கிறான். இலக்குவன் எழுந்து இராமனை வணங்குகிறான்; தன் இகழ்ச்சிப் புன்னகைக்கு மன்னிப்புக் கோருகிறான் போலும்! அவன் எதுவும் பேசவில்லை.

அப்பொழுதும் சுக்கிரீவனால் இராமனுடைய முடிவை ஒப்புக்கொள்ள முடியவில்லை. அவன் எழுந்து இராமனை வணங்கி, 'வீடணன் கொல்லத்தக்கவனே' என்று மீண்டும் வற்புறுத்துகிறான்.

இராமன் தன் சரணாகத விரதத்தைத் தெளிவாகக் கூறச் சுக்கிரீவன் மனம் மாறிற்று. இராமனை 'அறம் அறிந்தவனே', 'உலகத் தலைவருள் சிறந்தவனே' (லோக நாத சிகாமணே) என விளித்து, 'என் மனமும் வீடணனு டைய தூய்மையை அறிகிறது' என ஒப்புக் கொள்கிறான் (18.36-37). 'விரைவில் சென்று வீடணனை அழைத்து வா' என்ற இராமன் ஆணையை ஏற்றுச் சுக்கிரீவன் செல்கிறான்.

மந்திரம் முடிவுற்றது.

கம்பராமாயணத்தில் இந்நிகழ்ச்சி கூறப்படும் வகையைக் காண்போம்.

வீடணன் துணைவர்களுடன் வானரத் தானையின் மருங்கு முற்றினான் (6397). வானரர் 'நிருதர் உற்றனர்' என அவரைச் சுற்றினார். மயிந்தன் துமிந்தன் என்ற காவலர் இருவரும் வீடணனை நண்ணி, படைஞரை விலக்கி, அவரை வினவினர். வீடணனின் துணைவ

னாகிய அனிலன் என்பான் அவர்கள் வரலாற்றைக் கூறினான் (6406-9). 'நாயகற்கு இயம்புவேன்' என்று மயிந்தன் கூறி இராமனிடம் சென்று, "இலங்கைக் காவலற்கு இளவல்...அருளின் வேலையைச் சரண்புகுந் தனன்" என்றான் (6413,15). 'சரண்புகல்' அனலன் கூறிய கூற்றில் இல்லை. இதுவரை வீடணனும் ஏதும் பேசவில்லை.

இராமன் அருகில் இருந்தோரை "இவன் கைப்புகற் பாலனோ? கழியற்பாலனோ? இயம்புவீர்" (6419) என்று கேட்க மந்திரம் தொடங்குகிறது.

சுக்கிரீவன் கைகூப்பி நின்று, வால்மீகத்தில் உள்ளது போலவே "தம்முனைத் துறந்தது தரும நீதியோ?"; "உலகின் வேந்தனைப் பகையுற வருதலும் துறந்த பண்பு நகையுறத் தக்கது"; "இவன் ஆர்க்கு உறவு ஆகுவன்?"; "நஞ்சினும் கொடியனை நயந்து கோடியோ?" என்று வினாக்களை முடித்தான். (6422-32).

சாம்பனோ, வீடணன் "சிற்றினத்தவன்"...; 'மாயமான் என வந்தவனை மானுவன்" என்றான் (6434-8).

நீலன் பகைப்புலத்திினின்று வந்தவருள் எத்தகைய வர் ஏற்றுக்கொள்ளத்தக்கவர் என அட்டவணைப் படுத்தி "வீடணன் சீலமே நோக்கித் தேறுவோம்" என்றான் (6440-45).

அனுமனை இராமன் குறிப்பினால் கேட்க, அவன் நீண்ட சொற்பொழிவாற்றி இறுதியில் "இவன் வரவு நல்வரவே என உணர்ந்தேன் அடியேன்; திருவுளத்தின் குறிப்பறியேன்" என்று விட்டான் (6466).

இராமன் "நன்று நன்று" என மாருதியைப் போற்றிப் 'பற்றுதல் அன்றி உண்டோ அடைக்கலம் பகர்கின்றானை?' எனக் கூறி,அடைக்கலம் அருளுவதன் சிறப்பை எடுத்துரைக்கிறான் (6467-81).

முதலில் மறுத்த சுக்கிரீவனிடம் இராமன் தவறு காணவில்லை. வால்மீகத்தில் உள்ளது போன்றே

'என்பால் வைத்த காதலால் இயம்பினீர்' (6481)

என்று அவன் அன்பைப் பாராட்டி, அவனே சென்று வீடணனைக் கொணரச் செய்கிறான்.

தொகுப்புரை : இராமனுடைய மந்திரத்தின் சிறப்புக்கள்

1. தலைவன் அனைவரையும் தன்னோடு ஒத்தவராக எண்ணி அவர்களுடைய கருத்தை அச்சமோ பின்வாங்கும் தடைக்கட்டோ இன்றிக் கூறும் வாய்ப்பு அளித்தது.

2. அவர் அவ் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டது. சுக்கிரீவன் கருத்தை மறுக்க அவன் அமைச்சர் தயங்கவில்லை. இராமன் கருத்தை மறுக்க சுக்கிரீவனும் தயங்கவில்லை.

3. மந்திரப் பேச்சில் தலைவனைப் புகழ்தல், மாற்றானை இகழ்தல், இன்மை.

4. மந்திரத்தில் ஒருவர் மற்றொருவரைக் குறிப்பால் எள்ளியபோதும் அதற்குரிய சமாதானம் தந்து காழ்ப்பு இன்றிக் காத்தல்.

5. தலைவன் உரையை மறுப்பவரும் அவன் நலனைக் கருதியே மறுக்கின்றனர்; தம் நலம் கருதி அன்று; என்ற உணர்வை உண்டாக்கல்.

6. மறுத்தவரைத் திருத்தி அவரைக் கொண்டே காரியம் செய்வித்தல்.

6.3 இலங்கையில்

இராவணன் அமைச்சர் பரிவாரங்கள்சூழக் கொலு வீற்றிருக்கிறான். அப்போது சூர்ப்பணகை மூக்கிலும் காதுகளிலும் குருதி சோர, உடல் நடுங்க, அழுது கொண்டு, இரக்கப்படத்தக்கவளாய் உள் நுழைந்து சினத்துடன் சுடுசொற்களைக் கொட்டுகிறாள் (III 33.1).

சூர்ப்பணகை பேசிய அனைத்தும் இராவணனைப் பழிசாற்றும் சொற்கள். "நீ மதம் பிடித்து அலைகிறாய்; சிற்றின்ப விழைவும் உன் விருப்பப்படி நடப்பதும் உன்னை அழிக்கின்றன; காவல் இல்லாத, ஒற்றர் இல்லாத, நாடு உன்னுடையது; உன் படைகள் அழிந்தன; நீ புலனடக்கம் இல்லாதவன்; உன் செல்வமும் நாடும் அழிவுறும் (33.2-11). இராமன் தண்டக முனிவருக்கு அபயம் அளித்துள்ளான். கரன், தூஷணன் உட்படப் பதினாலாயிரம் அரக்கரை அழித்துளான். உன்புகழ் மாசுற்றது" (12-20) அரசனுக்கு உரிய சிறந்த பண்புகளைக் கூறி, அவை அற்ற நீ அரசாளத் தகுதியற்றவன் என்று தன் தமையனை ஏசுகிறாள்.

கர தூஷணரும் படைகளும் அழிந்ததை இராவணன் இதுகாறும் அறியான் எனத் தெரிகிறது.

செல்வத்தாலும், இறுமாப்பாலும், படைச்செருக்காலும் சூழப்பட்ட இராவணனை இச் சொற்கள் துளைத்தன. சற்றுநேரம் சிந்தித்து, "யார் அந்த இராமன்? அவன் வலிமை என்ன? ஏன் அவன் தண்டகாரண்யத்துக்கு வந்துள்ளான்? அவன் படைகள்

யாவை? ஏன் அவன் நம் சேனைகளை அழித்தான்?" (34.2-3) எனக் கேட்டான். சூர்ப்பணகை இராம இலக்குவர் பெருமையையும் சீதையின் அழகையும் கூறி "அவள் உனக்கு ஏற்ற 'பார்யா'; நீ அவளுக்கு ஏற்ற 'பதி'" என முடிக்கிறாள் (20).

இராவணன் செய்யவேண்டுவனவற்றை மந்திரிகளுடன் ஆலோசித்து அங்கிருந்து எழுகிறான் (35. 1). தன் வலியும் மாற்றான் வலியும் சீர்தூக்கி, நன்மை தீமைகளை ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்தபின், தன் மனத்தை நிலைநிறுத்தி, வாகனசாலைக்குச் சென்று, பாகனுடன் ஜநஸ்தானத்துக்குப் புறப்படுகிறான் (2, 3).

கம்பராமாயணத்தில், இராவணன் அவையில் இருந்த அமைச்சர்கள் அஞ்சினோராக உள்ளனர். அவன் அமைச்சரை நோக்கி 'ஒரு நல்மொழி பகரினும் நடுங்குசிந்தையர்' (3076).

சூர்ப்பணகை 'இராமன் புயத்திடைக் கிடந்த பேர் ஆசை மனம் கவற்ற', 'சீதை தன்மை உரைப்பென்' என இலங்கைக்குச் சென்றாள் (3067).

தான் இராமனை அடைவதற்காகச் சீதையையும் இராவணனையும் இணைப்பது அவளுடைய குறிக்கோள்; சூழ்ச்சியுமாகும். தன்னை அலங்கோலம் செய்த இராம இலக்குவர் அழகை வருணிக்கிறாள் (3118-23). "நீ இழைத்த குற்றம் என்னை கொல்?" என்ற கேள்விக்கு (3132), "சீதை பொருட்டினால் புகுந்தது" என்று கூறி, இராவணனுடைய இயல்பை நன்கு அறிந்த அவள், சீதையின் அழகைப் பனைந்துரைக்கிறாள் (3135-46).

—

அதைக்கேட்ட இராவணன்,

'கரனையும் மறந்தான்; தங்கை
முக்கினை கடிந்து நின்றான்
உரனையும் மறந்தான்; உற்ற
பழியையும் மறந்தான்; வெற்றி
அரனையும் கொண்ட காமன்
அம்பினால், முன்னைப் பெற்ற
வரனையும் மறந்தான்; கேட்ட
மங்கையை மறந்தி லாதான்' (3149)

முதிர்ந்த காம நிலையிலும் 'ஆற்றலால் அடுத்தது எண்ணும் அமைச்சரைக் கொணர்ந்து (3234), அவரோடு

'மாசற மனத்தின் எண்ணி'...'சிந்தையில் நினைந்த செய்யும் செய்கையன் தெளிவு இல் நெஞ்சன்' ......'விமானத்தில் ஆரும் இன்றி'...'மாரீசன் இருக்கை சேர்ந்தான்' (3234-35).

இரு நூல்களிலும் அவன் மந்திரிகளோடு எண்ணியது இன்னதெனக் கூறப்படவில்லை.

சூர்ப்பணகையின் பழிப்புரை போல் தோன்றும் அறிவுரை கம்பனில் இல்லை; கம்பனில் காணப்படும் காமவெறி ஏற்றும் சீதையின் வருணனை வால்மீகத்தில் இல்லை. இராவணன் புறப்படும்போது பெற்றிருந்த மனநிலையைக் கூறுவதில் வால்மீகத்திலிருந்து (க்ருத்வா நிச்சயம் ஆத்மந: ஸ்திரபுத்தி:III 35.3). கம்பன் முற்றிலும் வேறுபடுகிறார்.

இராவணனுக்கு இடித்துரைத்து அறிவுரை கூறும் அடுத்த பாத்திரம் மாரீசன். இருநூல்களிலும் அவன் அச்சமுடையவனாகக் கூறப்படுகின்றான். 'பயத்தன்... வெருவு கின்றான்' என்பது கம்பன் பாட்டு (3237).

மாரீசன் தன் 'அச்சம் அகற்றி' (3243) இராவணன் செயலைத் தடுக்கும் உரை எழுகிறது:

'திரு உற்றாய்; புறத்திறனாலே இழக்கப்புகுவாயோ?' (3246)

'வாளிகள் கொண்டு உன் வழியோடும் கொய்தான் அன்றே' (3250)

'விராதன் போனான்... உணர்தோறும் நையா நின்றேன்' (3251)

'நீ இனி மாள்வார் தொழில் செய்ய வேண்டா' (3252)

'என் ஆண்மை தவிர்ந்தே தளர்வுற்றேன்...கவல்கின்றேன்' (3253)

'வாழ்வன யாவும் நிலையாவால்... செல்வத்து வைகுதி என்றும்' (3524)

இவை தவிரப் 'பிறனில் விழைதலின்' தீமையைக் கூறுவன இருசொல் தொடர்கள்:

'மற்று ஒருவற்காய் மனைவாழும்
தாரம் கொண்டார்......தம்மை......தருமம் ஈரும்' (3247)

'அகலிகை பொறற்பால் இந்திரன் அழிவுற்றான்' (3248)

இந்தச் சொற்களிலும் காணப்படுவது பயமே.

பிறனில் விழைதல் இல்லறத்துக்கு ஊறுசெய்வதாகும். எந்தப் பெண்ணையும் வலியக்கவர்தல் பெண்ணின் பெருமைக்கு இழுக்கு எனவோ, விருப்பம் இல்லாத பெண்ணுடன் கூடல் சுடும் எனவோ, மாரீசனோ, மந்திரிகளோ, இராவணனுக்கு எடுத்துரைக்கவில்லை.

வால்மீகத்தில் மாரீசன் உரை, இராமன் சிறுவனாக இருந்தபோது, மாரீசனுக்கு ஏற்பட்ட தோல்வியால் உண்டான பயத்தை அடிப்படையாகக் கொண்டது.

எனினும், அரசன் ஒழுக்கத்தையும் அவன் மந்திரிகளோடு பயிலும் முறையையும் கூறும் அவர் உரையாடல் அக்கால அமைச்சியலைக் காட்டும். அவ் உரையாடலில் ஒரு கருத்து வெளிப்படுகிறது.

> "அரசே! நீ கேட்க விரும்பும் மந்திரத்தையே எப்பொழுதும் சொல்லும் மந்திரிகளைப் பெறல் எளிது. நீ கேட்க விரும்பாத, ஆனால் உனக்கு நன்மை பயக்கும் மந்திரத்தைச் சொல்வோர் கிடைத்தல் அரிது. அவர் சொன்னாலும் அச்சொல் பொறுக்கும் அரசனும் அரிது"

ஸுலபா: புருஷா ராஜந் ஸததம் ப்ரிய வாதிந:।
அப்ரியஸ்ய ச பத்யஸ்ய வக்தா ச்ரோதா ச துர்லப:॥ (III 37.2)

இந்தச் சுலோகம் இராவணன் அவையில் வீடணன் கூற்றாகவும், மஹா பாரதத்தில் விதுரன் கூற்றாகவும் கூட வருகிறது.

ஒரு தலைவன் பிறருடைய யோசனையை நாடுவது எதற்காக? அவன் அச்சமயம் என்ன சொல்லுகிறானோ செய்கிறானோ அதுதக்கதே எனச் சான்று பெறுவதற் காக. அது தக்கது அன்று எனப் பிறன் கூறினால், அது தலைவனுடைய தன்முனைப்புக்கு ஊறு விளைவிக்கும், தன் மானத்துக்கு இழுக்குத் தரும். அதையும் பலர் உள்ள அவையில் மந்திரி கூறிவிட்டால் 'தலைவனும் தவறு செய்யக் கூடும்' என்ற கருத்துப் பரவித் தலைமைக் குத் தாழ்வு நேரிடலாம். தலைமையின் பெருமை நிலை பெறுவதற்கு 'தலைவன் தவறு செய்யான்' என்ற முழு நம்பிக்கையும், எந்த நிலைமையிலும் எதிர்ப்பு இன்மை யும், எதேச்சாதிகார அரசுக்கு வேண்டியுள்ளன.

இராவணன் தன்விருப்பப்படி, அடக்குவார் இன்றிச் செயல் ஆற்றுபவன் ('காம வ்ருத்தம் நிர் அங்குசம்'-37.6).

எனினும், தானே வலியவந்து மாரீசன் உதவியை நாடிய தால், தன்கருத்திற்கு இணங்காத நிலையில் மாரீசன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் எனவும் அறிவுரை கூறுகிறான்.

"ஆம், நீ என் சொல்லிலோ செயலிலோ, குற்றமோ குணமோ இருப்பதைச் சொல்ல உரிமை உடையவன்; கடமைப்பட்டவன் ஆகவும் இருக்கலாம். எனினும், நான் உறுதி பூண்டபின் அதை நிறைவேற்றும் உபாயம் என்ன? அதை நிறைவேற்றுவதில் என்ன அபாயம் நேரிடக் கூடும்? என நான், கேட்டால் மட்டுமே சொல்" (40,8).

"அரசன் வினவினால் தன் வாழ்வையும் வளமையை யும் நாடும் அறிவுடைய மந்திரி எழுந்து நின்று, கை கூப்பி விண்ணப்பம் செய்ய வேண்டும்" (9).

"அவ் விண்ணப்பம் அரசனுக்குப் பொருத்தமாகவும் ('அப்ரதிகூலம்'), இனிமையாகவும் (ம்ருதுபூர்வம்), நன்மை யானதாகவும் ('சுபம்'), இதமாகவும் ('ஹிதம்'), அன்பும் பணிவும் கலந்து ('உபசாரேண வக்தவ்யம்'), சூழ்நிலைக்கு ஏற்றதாகவும் ('யுக்தம்') இருக்க வேண்டும்" (10).

"அரசன் தன்மானத்தைப் பேணுபவன். ஆதலால் அவன் சொன்னதை நேரே மறுக்கலாகாது. நன்மை தரும் சொல்லாகினும் மறுத்தல் அவனுக்கு அவமான உணர்ச்சி தரும். அத்தகைய பேச்சால் அவன் மகிழான்" (11).

மாரீசன் தொடர்கிறான் :

"வெற்றியில் சிறந்தவனே! அறமும் புகழும் அரசன் மூலமாக எழுவன. ஆதலால் எல்லாச் சூழ்நிலை களிலும் அரசன் காக்கப்பட வேண்டியவன்,"

ராஜமூலம் ஹி தர்ம: ச யச: ச ஜயதாம் வர।
தஸ்மாத் ஸர்வாணி அவஸ்தாஸு ரக்ஷிதவ்யா நராதிபா:॥
(III 41.10)

"ஆணி வேர் உறுதியாக இருந்தாலன்றோ மரம் உறுதியாக இருக்கும்? அறத்துக்கும் நாடுபெறும் புகழுக்கும் வேர் அரசன். (வேரைக் காப்பது அதைச் சுற்றியுள்ள மண்; அரசனைக் காப்பவர் குடிமக்கள்.) ஆதலால், அரசன் ஒழுக்கத்தினின்று வழுவாமல் காக்க வேண்டியது அவனைச் சூழ்ந்தவருடைய கடமை."

மாரீசன் மேலும் கூறுகிறான் :

"தலைவன் அறத்துக்கு மாறான குணம் கொண்டிருத்தலால் ஏனைய மக்கள் துயர் உறுகின்றனர்".

"வ்யஸநம் ஸ்வாமி வைகுண்யாத் ப்ராப்நுவந்தி இதரே ஜநா:"
(III 41;9)

"உலகில் பெரும்பான்மை மக்கள் நல்லவர்; தமக்கு உரிய கடமைகளை வழுவாது செய்பவர். ஆனால் நல்லவரும் சிறுபான்மையான பிறருடைய தவறால் அழிகின்றனர்."

'பஹவ: ஸாதவ : லோகே யுக்த தர்மம் அநுஷ்டிதா :।
பரேஷாம் அபராதேந விநஷ்டா: ஸ பரிச்சதா: ॥ (13)

"இராவண! நீ கொடுமை, துர்புத்தி, புலனடக்கம் இன்மை, இவற்றோடு அரசனாகவும் இருப்பதால் அரக்கர் குலம் அழிவது திண்ணம்." (15)

இதே கருத்து சீதை கூற்றாக வேறு வகையில் வெளிப்படுகிறது.

"பண்பாடு இல்லாத ஒருவன் அரசைப் பெற்று அறத்துக்குப் புறம்பான வழிகளில் ஈடுபடுவதால், நாடும் நகரமும் அவற்றின் செல்வமும் அழியும்,"

'அக்ருத்ய ஆத்மாநம் ஆஸாத்ய ராஜாநம் அநயே ரதம்' ।
ஸம்ருத்தாநி விநச்யந்தி ராஷ்ட்ராணி நகராணி ச ॥ (V 21-11)

நாடு நகரங்களின் செல்வங்கள்—பொழில்கள் வயல்கள், ஆலைகள், சாலைகள், மாளிகைள், பள்ளிகள், இயந்திரங்கள் போன்ற யாவும்—மக்களுடைய உழைப்பால் உண்டானவை. அவற்றின் தோற்றத்துக்கும் மாண்புக்கும் அரசனோ தலைவனோ தானாக ஆற்றிய பணி மிகமிகக் குறைவு. ஆனால் அவனுக்கு மக்கள் தந்த அதிகாரத்தைக் கொண்டு செய்யும் தீய செயல்களால் இச் செல்வங்கள் அழியக் கூடும். மக்களுடைய ஆக்கத்தைக் காப்பதற்காகத் தலைவன் தவறு செய் யாமல் தடுப்பது மக்கள் கடமை.

இந்தக் கடமையை நிறைவேற்ற வீடணன் முனை கிறான். இராவணன், 'சீதையை விடேன்' எனப் போருக்குத் துணிந்தபோது, வீடணன் அவையோரைப் பார்த்து அறைகூவி அழைக்கிறான்.

''இங்குக் கூடியுள்ள நீவிர் அனைவரும் அரசனால் உம் விருப்பங்கள் நிறைவேறப் பெற்றவர்; பயன் எய்தினவர்.'

''அரசன் இப்போது கொடிய, வலிமைமிக்க காமப் பேயால் பீடிக்கப்பட்டுள்ளான். இந்நிலையில் அவன் நன்மையை நாடும் நாம் செய்யத்தக்கது ஒன்றே. அரசன் ஆணையை மீறி அவனை இப்பேயாட்டச் செயலிலிருந்து தடுக்கக் குடுமியைப் பிடித்து இழுத்தேனும் காத்தல் நம் கடன்.''

'யாவத் ஹி கேசக்ரஹணாத் ஸுஹ்ருத்பி:
ஸமேத்ய ஸர்வை: பரிபூர்ண காமை: ।
நிக்ருஹ்ய ராஜா பரிரக்ஷிதவ்யோ
பூதை: யதா பீம பலை: க்ருஹீத: ॥ (VI 14. 19)

இதை, 'ராஜத்ரோஹம்' (அரசனை எதிர்ப்பது) எனவோ 'ராஜ்யரக்ஷணம்' (நாட்டை, மக்களை காப்பது) எனவோ கொள்ளலாம்.

இனி, இராவணனுடைய மந்திர அவையைப் பார்ப்போம்.

இராவணனுடைய மந்திர அவை மும்முறை கூடியதாக வால்மீகி கூறுகிறார்.

முதல் அவை

இலங்கை எரியூட்டப்பட்ட பின்னர், நாணத்தால் சாம்பும் இராவணன், கீழ்நோக்கிய முகத்தினனாக, இலங்கைக்கு நேர்ந்த பரிபவத்தை அவையோரிடம் கூறுகிறான். 'அவையோர் மாற்றான் வலி அறியார், நீதிக்குப் புறம்பானவர், தாமாக எண்ணும் திறன் இலர்' என்பது கவிக் கூற்று. (VI 1, 2).

'வெற்றிக்கு வேர் மந்திரம்' எனத் தொடங்கி, 'குரங்கு ஒன்று, எவரும் புக அஞ்சும் இலங்கையின் அரண்களை அழித்தது; உட்புகுந்து சீதையைக் கண்டது; மனைகளையும் மண்டபங்களையும் தகர்த்தது; சேனைத் தலைவரைக் கொன்றது' போன்றவற்றைக் கூறி, இராவணன் மனம் அழிகிறான். கடலை வற்றச் செய்தல் போன்ற இயற்கைக்கு மாறுபட்ட செயல்களை ஆற்றி அரக்கர் இழந்த பெருமையை மீட்கச் சேனையின் துணையை நாடுகிறான் (3-18).

இவ் அவையில், இராவணன் அவையோரிடம் தன் பரிபவத்துக்கான காரணங்களையும், சீதையைக் கவர்ந்து வந்ததையும் கூறவில்லை; பரிபவத்தை நீக்கச் செயல் முறைகளை வகுக்கவில்லை; குறிக்கோள்களை விளக்கவில்லை. தனக்கு உறுதிகாணப் பிறருடைய இரக்கத்தை வேண்டுகிறான்.

அவையோர் அவனைக் கும்பிட்டு (7. 1) தம் படை பலம், பழைய வெற்றிகள், யாவற்றையும் நினைவு கூர்ந்து, இராமனையும் குரங்குகளையும் எதிரிகளாகக் கருதுவதே இராவணன் பெருமைக்கு இழுக்கு என்கின்றனர். படைத்தலைவர் ஒவ்வொருவரும் தனித்தனி சென்று வானரப் படைகளைப் போரில் அழிக்க அனுமதி கேட்கின்றனர் (ஸர்கம் 8). அவருடைய வீரத்தின் ஒளி ஒன்று திரண்டு பொங்க, அந்த அவை கிளர் ஒளி உடையதாகிறது (9. 1-5). படைத்தலைவர் போருக்கு எழ முனையும் தறுவாயில், வீடணன் எழுகிறான் (7).

இவ் அவையில் கும்பகருணன் இலன்.

வீடணன் இராவணனைக் 'குழந்தாய்' ('தாத') என விளிப்பது (89) அவனுடைய பிள்ளைமைப் புத்தியைச் சுட்டுகிறது. "புலன் அடக்கம் இன்றி, பித்தேறிய நீ, காமம் வெகுளி மயக்கங்களை வென்ற பகைவருடன் எவ்வாறு போர் புரிய முடியும்?" (10) எனத் தொடங்கி, இராமன் வெலற்கரியவன், ஆதலால் சீதையை விட்டு விடு' என ஏழு சுலோகங்களில் சொல்லுகிறான் (16-22).

அதில் இறுதி சுலோகம் :

"அறத்தைப் பேணுவதால், இன்பமும் புகழும் பெறுவாய்; உன் சுற்றத்தோடும் மக்களோடும் நீடு வாழ்வாய். ஆதலின், சீதையை விட்டுவிடு" (VI 9. 22).

உடனே இராவணன் அவையைக் கலைத்து விட்டுத் தன் மாளிகைக்குச் சென்றுவிட்டான்.

மறுநாள் காலை வீடணன் தனியாக இராவணன் மாளிகைக்குச் சென்றான். மந்திரிகள், பரிவாரங்கள் மக்கள் எவரும் இன்றித் தனியே அமர்ந்திருந்த இராவணனிடம், நகரில் ஏற்பட்டுள்ள துர்நிமித்தங்

களைக் கூறி "சீதையை இராமனிடம் சேர்ப்பிக்க வேண்டும்" என மேலும் வலியுறுத்துகிறான். அவன் கூறியதில் ஒன்று குறிப்பிடத்தக்கது:

"உன் தவறுகளையும் அழிவுக்கு உற்பாதமான துர்நிமித்தங்களையும் அரக்கர், அரக்கியர், நகர மக்கள், உள்ளோர், புறத்தோர், அனைவரும் அறிவர். உன் மந்திரிகள் அறிவர். ஆனால் அவை உன் காதுக்கு எட்டாதவாறு மறைத்து வைத்துள் ளனர்" (VI 10. 24, 25).

தலைவன் கேட்க விரும்புவதையே பிறர் கூறுவதற்கு இது எடுத்துக்காட்டு.

இராவணன் "அச்சம் தருவனவற்றை (உற்பாதங் களை) நான் காணவில்லை" என்று கூறினான் (28). பிறவற்றுக்குப் பதில் சொல்லவில்லை.

விடணன் திரும்பினான்.

இங்கு, கம்பன் கூறுவது ஒரே அவை நிகழ்ச்சி.

இவ் அவை முன்னையின் அழகுடையதாக மயன் இயற்றிய நகரில் உள்ள எழில் மண்டபத்துள் கூடியது (6071-75). இராவணன் அரி ஆசனத்து இனிது மேவினான். 'முனிவர், தேவர் மற்றுளோர் யாவரும் தவிர்க' என ஆணை இட்டு, மகளிரொடு இளைஞரைப் போக்கி, 'பண்டிதர், பழையவர், கிழவர், பண்பினர். மந்திரத்தலைவர்' இவரை மட்டும் உடன்கொண்டான், வண்டும் காற்றும் உட்புகாக் காவல் அமைத்தான் (6077-78). அடுத்த பாட்டிலேயே, 'போருக்கு உரியர் அல்லரையும், புறத்துப் போக்கினான்' எனக் காண்கிறோம் (6079).

வால்மீகத்தில் போலவே, இவ் அவையில் இராவணன் பேச்சு தன் இரக்கம், தன் ஆட்சிக்கும் ஊருக்கும் உற்ற பரிபவம், பழியில் மூழ்கி உள்ளது, இவற்றையே கொண்டது. பகை உண்டாகக் காரணம், சீதையைக் கவர்ந்து வந்தது, இராமன் கடற்கரைக்கு வந்துள்ளது—எதையும் இராவணன் கூறவில்லை

படைத்தலைவர் பலர் மனிதரையும், குரங்குப் படையையும் இகழ்ந்து பேசினர். ஒவ்வொருவரும் சென்று, வென்று, இராவணனுக்குப் புகழ் தருவோம் என உறுதி கூறினர்.

அவர்கள் முடித்தபின், கும்பகருணன் எழுந்து போர்க் காரணங்களை எடுத்துரைக்கிறான். அதை மேலே காண்போம்.

இரண்டாம் அவை

மறுநாட் காலை நிகழும் இரண்டாம் அவைக்கு இராவணன் அரக்க சமூகத்தினர் அனைவரையும் அழைக்கிறான். அனைவரும் ஆயுதபாணிகளாக வருகின்றனர் (VI 11.18). இராவணன் தேரில் வந்து, கம்பீரமாக சிங்காதனத்தில் அமருகிறான்.

இங்கு ஒரு சுலோகம் குறிப்பிடத்தக்கது:

"அவையில் யாரும் உரக்கப் பேசவில்லை; பயனில் சொல் பாராட்டவில்லை; பொய் உரையும் இல்லை. பெறற்கரும் பயன் முழுதும் பெற்ற அறிவினார் அவர்; சிறந்த வீரர். அனைவரும் தலைவன் முகத்தையே நோக்கி அமர்ந்திருந்தனர்" (30).

இந்த அவை தொடங்கும்போதே, இராவணன் சீதைபால் கொண்ட அளவு கடந்த காமத்தால் மனக்

குழப்பம் உற்றிருந்தான் என வால்மீகி கூறுகிறார் ('மைதிலீ காம மோஹித;' 'அதீவ காம ஸம்பந்ந;' 11.12).

எனினும், இவ் அவையில் இராவணன் முன்பு இருந்த தோல்வி மனப்பான்மை இன்றித் தன் கருத்தைத் தெளிவாக எடுத்துரைக்கின்றான்.

"நன்மையிலும் தீமையிலும் இன்ப துன்பங் களிலும், இலாப நஷ்டங்களிலும், இனிய கொடிய சூழ்நிலைகளிலும், அறம் பொருள் இன்பங்கள் தேய்ந்த காலத்தும், நீங்கள் அறிந்து ஆய்ந்து மந்திரம் கூறும் இயல்பு உடையவர்கள் (12.7). உங்கள் அறிவுரையின்படி நான் தொடங்கிய செயல்கள் யாவும் வெற்றி பெற்றன (8). இலங்கைக் குத் திரு எய்தியது (9). ஒரு விஷயத்தை கும்ப கருணன் அப்போது உறங்கிக் கொண்டு இருந்த தால் இதுகாறும் உங்களிடம் சொல்லவில்லை (10.11).

"அரக்கர் உலவும் (அரக்கருக்கு உரிய) தண்டகாரண்யத்திலிருந்து இராமனுடைய அன்புக் குரிய மனைவியை, ஜனக புத்திரியை நான் கவர்ந்து வந்துள்ளேன் (12). மூன்று உலகங்களிலும் அவளை ஒத்த அழகி இல்லை; என் கட்டிலில் ஏற அவள் இசையவில்லை (41). அவள் கால் நகங்களைக் கண்டாலும் என் காமத்தீ கொழுந்து விட்டு எரிகிறது (15). அவள் ஓராண்டு என்னிடம் காலக் கெடு கேட்டு இருக்கிறாள். (இந்தக் கெடு இராவணன் தந்தது; சீதை கேட்டது அன்று.) அதற்குள் இராமன் தன்னை மீட்பான் என நம்பு கிறாள் (19). நான் காமவேதனையால் தளர்ந்துள்

ளேன். இராமன் குரங்குப் படையுடன் கடற்கரையை அடைந்துள்ளான் (24).

"இந் நிலையில், நான் தங்களுடைய (பவத்பி:) மந்திரத்தை அறிய விரும்புகிறேன்; சீதையைத் திருப்பித் தருவதா? அன்றித் தசரத குமாரரைப் போரில் கொல்வதா? (25)"

அவர்கள் கடலைத் தாண்டி வந்து போர் புரியும் ஆற்றல் இல்லாதவர்கள்; வெற்றி எனதே என்பது என் கருத்து" (26).

நீண்ட பேச்சை இராவணன் முடித்தான்.

கம்பனில், சீதையைக் கவர்ந்து வந்ததையும் அவளை இப்போது விடுவதையும் கேள்விக்கு உரியன வாக இராவணன் அவையில் கூறியதாக இல்லை. 'பழியில் மூழ்கினோம்' (6081-84); மீள்வது எங்ஙனம்? என்பதே பேச்சு. சீதையைக் கவர்ந்ததுபற்றிய சிந்தனையை எழுப்பியது கும்பகருணன்.

வால்மீகத்தில், அவையில் வீற்றிருந்தவர்களில் கும்ப கருணன் முதலில் எழுந்து கூறுகிறான்:

"நீ சீதையைப் பலாத்காரமாகக் கவர்ந்து இங்கு கொண்டு வர முடிவு செய்தபோது எம்மைக் கேட்கவில்லை. பேரரசனாகிய நீ, கள்வனைப் போல், ஆரியன் அற்றம் நோக்கி உன் பெருமைக்குத் தகாத இச் செயலைச் செய்துவிட்டு, பிறகே, உன் செல்வம் எரிந்து அழியும் காலத்தில் எம் மந்திரத்தை நாடுகிறாய் (VI 12. 28-30). முன்பு நீ எண்ணித் துணியவில்லை; துணிந்தபின் எண்ணுகிறாய்; நீதி, அநீதிகளை அறியாமல் பேசுகிறாய் (32). எனினும், இவ் அடாத செயலைத் தொடங்கி விட்டதால்

உன் பகைவரைக் கொன்று நான் நிலைமையைச் சீர்படுத்துவேன்'' (35).

இறுதியில் ஓர் அங்கதச் சொல்லுடன் அவன் பேச்சை முடிக்கிறான்.

''இன்பம் நுகர்; நல்ல மதுவைக் குடி; காய்ச்சல் இன்றி நீ விரும்புவனவற்றைச் செய். நான் இராமனை யமலோகத்துக்கு அனுப்பியபின் சீதையை உன் வசமாக்கிக் கொண்டு நெடுங்காலம் வாழ்வாயாக'' (40).

பிறரைப் போருக்கு அனுப்பி, அவர் இறந்தாலும் தன் செயல் வெற்றிபெற்றால் போதும் என்று எண்ணுபவனாக, பிறருடைய உழைப்பால் தன் இன்பத்தைப் பெருக்க முயல்பவனாக, இராவணனைக் கும்பகருணன் கருதுகிறான்.

கம்பனில், படைத்தலைவர் பலர் தம் வீரத்தைக் கூறி, பகைவரை அழிப்போம் என்றபின் கும்பகருணன் இராவணனை ஏசுவதும் இவ்வாறே அமைந்துள்ளது.

''கோ இயல் அழிந்தது. வேறு குலத்தோன் தேவியை நயந்து, உன் தேவியர் நகைதர, நீ அவள் அடி தொழ, அவள் மறுத்தல் புகழாம்! 'பேசுவது மானம் இடை பேணுவது காமம்; கூசுவது மானிடரை' 'சிட்டர் செயல் செய்திலை, குலச்சிறுமை செய்தாய்.' நரர் வானரரை எல்லாம் வேரொடு அடங்க நூறுவதே கருமம்'' (6119-28).

இவ்வாறு கும்பகருணன் பேசக்கேட்டு இராவணன், ''நன்று குமர, நமர் படையை எல்லாம் 'இன்று எழுக' என்க'' என இசைத்தான் (6127).

வால்மீகத்தில், கும்பகருணன் கூறிய அறிவுரை கேட்டு இராவணன் சினம் கொண்டான்; ஆனால், ஏதும் பேசவில்லை (VI 13.1).

ஒரு நாழிகை சிந்தித்து மஹாபார்ச்வன் வழக்கம் போல் இராவணனைப் புகழ்கிறான்.

"நீ அரசர்க்கு அரசன். உனக்கு மேலானவர் இல்லை. கும்பகருணனுடன் சென்று பகைவரை வென்று தருவோம். நீ வைதேகியுடன் இன்புற்று இரு. அவள் இணங்காவிடினும், நீ அவளைப் பலாத்காரமாக அனுபவி" (13.3,6,7).

இப்பேச்சு அவனை அமைதிப்படுத்திற்றுப் போலும். ஆயினும் ஒரு பெண்ணைப் பலாத்காரப்படுத்தினால் தன் தலை சுக்குநூறாக வெடித்துப் போகும் என்ற புஞ்ஜிகஸ்தலாவைக் கற்பழித்த போது பிரமன் இட்ட சாப வரலாற்றை இங்கு இராவணன் அவைக்குத் தெரிவிக்கிறான் (13.11-16). அச்சமே சீதையையும் பலாத்காரப் படுத்துவதிலிருந்து அவனைத் தடுக்கிறது என அவையோரிடம் ஒப்புக் கொள்கிறான்.

வீடணன் அவையோரிடம் கூறும் 'நோய் உனக்கு யான்' (6151) என்ற வேதவதியின் சாபத்தினும் இது கொடியது. இறுதியில், வீடணன் இவ் இரண்டாம் அவையிலும் முன்கூறிய கருத்துக்களை வலியுறுத்துகிறான். இராவணனிடம் தனிமையில் கூறியதைக் குறிப்பிடவில்லை.

"வானரர் இலங்கையை அழிக்க வல்லவர். இராமன் அரக்கர் படையை வெல்ல வல்லவன். சீதை உனக்கு நஞ்சு. ஆதலால், போர் ஒழிக; சீதையைத் திருப்பித் தருக" (14.1-6).

அரக்கர் வலிமையை இகழ்ந்த வீடணன்மீது பிரகத்தனும் இந்திரசித்தனும் கொதித்து எழுந்தனர். முன்பு கூறியுள்ள ராஜத்ரோஹப் பேச்சு (vI 14-19) அவர்களுடைய சினத்தைக் கிளறியது.

இந்திரசித்தன் வீடணனை 'சிறிய தந்தை' (தாத கனிஷ்ட 15.2) எனச் சிறுமையை உறுத்திக் குறிப்பிடுகிறான். வீடணனும் 'இளமையின் குமுறல்', 'பக்குவம் அடையாத புத்தி', 'நண்பனாகத் தோன்றும் பகைவன்' (பால: த்வம், அவிபக்வ புத்தி:, 9, 12) மூர்க, துராத்மா, மித்ர முகோசத்ரு, எனச் சாடுகிறான்.

மந்திரத்தில் இத்தகைய வசை மொழிகள் கம்பனில் இல. இந்திரசித்து பிற சேனைத் தலைவரைப் போல இராவணனுக்கு உறுதி கூறினான்; பகைவரை வென்று மீள 'விடை ஈமோ' (6135) என முடித்தான். சீதையைப் பற்றி ஏதும் கூறவில்லை.

கம்பனில், வீடணன் கும்பகருணனைத் தொடர்ந்து போரின் காரணங்களை ஆராய்கிறான்.

இராவணனுடைய பெருமைக்கு நேர்ந்த இழுக்கு, அவன் பெற்ற சாபங்கள், உற்ற துர் நிமித்தங்கள், சானகியின் கற்பு, எனப் பல காரணங்களைக் கூறி 'அணங்கை விட்டருளுதி' (6169) என முடிக்கிறான்.

இராவணன் இராமனை இகழ்ந்து, போருக்கு எழ, வீடணன் அமர்த்தி, இரணியன் கதையை உரைக்கிறான். இந்நிலையில், அந்நீண்ட கதையைக் கேட்ட இராவணன் பொறுமையை நாம் வியக்கிறோம்,

இது வால்மீகத்தில் இலது அங்கு. இந்திரசித்தனை இகழ்ந்த பின், வீடணன் இறுதியாக இராவணனுக்குக் கூறும் அறிவுரை :

'செல்வம், ரத்தினங்கள் (அரிய பொருட்கள்) அணிகள், ஆடைகள், அழகிய நவமணிகள் இவற்றுடன் சீதையை இராமனிடம் அர்ப்பணம் செய்' (15-14) என்பது.

இதுகாறும் விவாதத்தைக் கேட்டுக் கொண்டிருந்த இராவணனிடமிருந்து கடுமையான சொற்கள் வெளிப்படுகின்றன. கம்பனிலும் இந்தக் கடும்பேச்சு காணப்படுகிறது.

'ஞாதி' என்ற சொல்லுக்குப் பங்காளி, தந்தை வழித் தொடர்பு பூண்டவன், சொத்துக்கு உரிமை உடையவன் என்று பொருள். வீடணன் 'ஞாதி'யாகையால் தனக்குப் பகைவன் என இராவணன் ஐந்து முறை சொல்கிறான் (16,5-9). கருத்து, செயல் வேறுபாடுகளுக்குச் சுயநலம் காரணம் எனத் தலைவன் புனைந்துரைப்பது இயல்பே. ஆனால், இராமனும் அனுமனும் கூட வீடணன் அரசு பெறக் கருதி இராமன்பால் வந்தான் என்ற நோக்கத்தை ஒப்புக் கொள்கின்றனர் (VI 17.67, 18.13). "அருத்தியும் அரசின் மேற்றே" (6468). என்பது கம்பனில் இராமன் வாக்கு.

அரக்கர் சமுதாயம் சிறந்தது (ஆர்ய:); மேலல்லாருடன் நட்புப்பூண்டதால் (அநார்ய ஸௌஹ்ருதம் 16:11-15) வீடணன் தன்னைக் கெடுத்துக் கொண்டான், எனப் பல சான்றுகளுடன் இராவணன் அவனைப் பழிக்கிறான். "நீ ராக்ஷஸ குலத்துக்குக் களங்கம் தருபவன்; வேறு ஒருவனாயின் ஒரு நாழிகையில் அவன் இராமல் செய்வேன்" என அவன் அச்சுறுத்தியதும், வீடணன் நீங்குகிறான் (16).

தம்பன் கூறும் இராவணன் கருத்தும் இதுவே,

"......நீ என் பெருஞ்செல்வம் எய்தி
பின் வாழவோ கருத்து?" (6368)

"நண்ணின மனிதர்பால் நண்பு பூண்டனை,
அரசின்மேல் ஆசை ஊன்றினை" (6370)

"தஞ்சு என மனிதர்பால் வைத்த சார்பினை
வஞ்சனை மனத்தினை........." (6371)

வீடணன் இராவணன் அவையிலிருந்து நீங்கிய போது, "உனக்கு நன்மை உண்டாகுக; நான் ஏகுகின்றேன்; நான் இன்றி நீ சுகமாக இரு." (vl. 16. 5) என்னும் அங்கதச் சொல் அவன் வாயினின்று வந்தது. கம்பனில் வீடணன் வெளியேறிய போது சொல்வது:

"எத்துணை வகையினும் உறுதி எய்தின
ஒத்தன உணர்த்தினேன், உணரகிற்றிலை,
அத்த! என் பிழை பொறுத்தருளுவாய்" என
உத்தமன் அங்கர் ஒழியப் போயினான். (6376)

மந்திரம் முடிவுற்றது.

மூன்றாம் அவை

இராவணனுடைய மூன்றாம் மந்திரம் இராமன் கடலைக் கடந்து இலங்கையை அடைந்த போது நிகழ்ந்தது. வானர சேனையின் பேரிமுழக்கம் (vl 35.2) கேட்ட இராவணன் மந்திரிகளை வரவழைத்துச் சொல்கிறான்:

"நீங்கள் இராமன் கடலைத் தாண்டியது பற்றியும் அவனுடைய வீரம், வலிமை, ஆண்மை பற்றியும் பேசிக் கொண்டிருக்கிறீர்கள் என யான் கேள்விப்பட்டேன். நான் கேட்பதால் நீர் ஒருவர் முகத்தை ஒருவர்

பார்த்துக் கொண்டு பேசாமல் இருக்கிறீர். இராமனுடைய ஸத்ய பராக்கிரமம் நாளைப் போர்க்களத்தில் தெரியும்'' (35. 4-5).

இதைக் கேட்டு ஒருவரும் பதில் சொல்லவில்லை. முந்திய மந்திர அவைகளில் ஏதும் பேசாத மாலியவான் மட்டும் இராமனுடன் நட்புப்பூண வேண்டும் என்றும், 'விஷ்ணுவே மானுட உருவம் பூண்டு ராமனாக வந்துள்ளான் என எண்ணுகிறேன்' என்றும் (35.35) கூறுகிறான். இராவணனுக்குச் சினம் மூள, மாலியவான் நாணத்தால் அடங்குகிறான் (36.14).

கம்பனில், இந்த மந்திரம் இரவில் நிகழ்ந்ததாக வருகிறது. விளக்கு வேண்டி இருந்தமையால், 'உணர்வு இல் நெஞ்சினர், ஊமர், உரைபொருள் புணரும் கேள்வியர் அல்லர்' விளக்கு ஏந்தினர் (6786). மாலியவான் அரக்கர் பட்ட தோல்விகளைக் கூற, இராவணன் அவனை வீடணனோடு 'ஏகு, என்றும் வாழ்தி இளவலோடு' (6793) என ஏகுகிறான்.

சேனை நாதன் மறுபடியும் அரக்கருடைய பழம் பெருமைகளைக் கூறும்போது, இராவணன் அனுப்பிய ஒற்றர் திரும்பிவந்து இராமனைப் பற்றியும் வீடணன் அவன்பால் இருப்பது பற்றியும் கூறினர் (6802-11). படைத்தலைவன் தொடர்ந்து 'நீ உருத்து எழுந்தால் குரங்கு எதிர் நிற்பதுண்டோ?' என, இராவணனின் ஊக்கம் கிளர்ந்தது. மாலியவான் மீண்டும் இராமன், சீதை, இளவல், வானரத் தலைவர் ஆகியோருடைய பெருமைகளைக் கூறுகிறான். அதைக் கேட்ட இராவணன் 'கற்றவா, நன்று போ' என அவனை இகழ்கிறான் (6828).

இராவணன் சுக்கிரீவனால் மகுடபங்கப் படுத்தப் பட்டுத் தளர்ந்த போது, அமைச்சரை 'வருக' (6955) என அழைத்து, 'உளைந்தனம்...என் செயற்கு உரிய' என்று கேட்டான் (6956). நிகும்பன் வானரப்படையை இழித்துக் கூற, மாலியவான் அனுமன் ஆற்றலை நினை வூட்டிப் 'படை இலாப் படையை ஈண்ட அடைக்கலம் புகுவது அல்லால் இனிப்புகும் அரணும் உண்டோ?' (6961) என வினவுகிறான். அதைக் கேட்ட இராவணன் 'அடாதன அறையல்' எனக் கடிந்து சேனையை அணிவ குக்க ஆணை இட்டான்.

இவ்வாறு பலமுறை இராவணன் மாலியவானை எள்ளியிருக்கிறான்; கடிந்தும் இருக்கிறான். ஆனால் முதற்போரில் தோற்று, 'மனம் வருந்தி, தோளும் வாடி, கவை உறு நெஞ்சனாய், கனல்கின்ற கண்ணனாய், தீ உயிர்ப்பு உறத் திறந்த மூக்கனாய், புலர்ந்த நாவின னாய்' இராவணன், தனக்கு உற்ற தோல்வியை விரிவாக, அதே மாலியவானிடம் தான் சொல்கிறான் (7285-7302).

வால்மீகத்தில் செருக்கு அழிந்து, ஐம்பொறிகளும் சோர்வு அடைய, இராமபாண பயத்தால் நடுங்கும் இராவணன், தனக்கு ஏற்பட்ட பரிபவத்தைச் சேனைத் தலைவருக்குக் கூறுகிறான். அநரண்யன், வேதவதி, உமா, நந்தீச்வரன், ரம்பா, வருணகன்னியர், ரிஷிகள் யாவரும் தனக்கு இட்ட சாபங்களை நினைவு கூர்கிறான் (VI 60. 1-12).

கம்பனில் இவை முன்பே வீடணனுடைய அவைப் பேச்சில் வந்துள்ளன (6147-51).

இராவணனுக்கு அவ்வப்போது ஏற்படும் தோல்வி மனப்பான்மையையும் தளர்ச்சியையும் மாற்றுவதற்கு

அவன் கூட்டும் அவைகள் துணைபுரிகின்றன. அரசன் அவையினருக்குத் தன் கருத்தையும் கருத்துக்குரிய காரணங்களையும், பலவேறு செயற்பாட்டு முறைகளை யும், அவற்றால் ஏற்படக்கூடிய விளைவுகளையும், தெரிவித்து, அவர் கருத்தைக் கேட்பதில்லை. மேலும், இராவணனால் போர்வீரர் ஊக்கமும் உறுதியும் பெறவில்லை. வீரருடைய முகமனாலும் அவர்கள் தம்மையே அழித்துக் கொள்ளும் தியாகத்தாலும், இராவணன் ஊக்கம் பெறுகிறான்.

இராவணனுடைய மந்திர அவையினரின் தகுதியின் மையைக் கும்பகருணன் போருக்குப் புறப்படும்போது சுட்டிக் காட்டுகிறான். அவனுடைய இறுதி அறிவுரை இது:

"இவர்கள் நீதியும் ஒழுக்கமும் அறியாதவர்; அவற்றை மதிப்பவரும் அல்லர். ஆட்சிமுறைகளைப் பற்றிக் கவலைப் படுவோரும் அல்லர். பொருள்நூல் அறியாத அவர்கள் பெற விழைவதோ பெருஞ்செல்வம். செருக்கால் அறிவிழந்து உனக்கு அடாதனவற்றைப் பிதற்றுகின்றனர். அப் பிதற்றலை உன் நன்மைக்காகச் சொல்கின்றனர் எனக் கருதி நீ ஏற்கிறாய். சிறிது நன்மையும் அவர்கள் செயலால் அது மாக அடையும் (க்ருத்ய தூஷகா:); அவர் சொல் கேளாதே: மந்திர அவையிலிருந்து அவரை நீக்கு" (VI. 63. 15-16).

கம்பனுடைய கும்பகருணன் மந்திரத்தில் பேசிய போதும், போருக்குப் புறப்படுகையில் இராவணனிடம் விடை பெற்றபோதும், தன் கடமை என அவன் எண்ணியதைச் செய்தான். 'விதி பிடர்பிடித்து உந்து கின்றது... பொன்றுவென்...பெற்றனன் விடை' (7366) என்று சொல்லிப் போனான். அவையிலிருந்த பிறரைப்

பற்றியோ நாட்டு நலனைப்பற்றியோ அவன் கவலைப் படவில்லை. அவனுடைய 'இராஜபக்தி' இராவண னுக்கே; சமூகத்துக்கு அன்று.

தொகுப்புரை : இலங்கையில்

1. இராவணன் மந்திரம் கொண்டது அவையில் மட்டும் அன்று; சூர்ப்பணகை, மாரீசன், வீடணன், மாலியவான், இந்திரசித்தன் ஆகிய பலரிடம் தானே வேண்டிச் சென்றும், அவர்களை வரவழைத்தும், அவையிலும், தனிமையிலும், மந்திரம் கொண் டான்.

2. வால்மீகியில் கூறப்படும் அவை கிளைஞரையும் படைத்தலைவரையுமே கொண்டது. கம்பனின் அவையில் வேறு பலரும் உள்ளனர். எனினும், மந்திரத்தில் பேசியவர் கிளைஞரும் படைத் தலைவருமே.

3. இரு நூல்களிலும் படைத்தலைவர் தலைவனைப் புகழ்வதும், தற்பெருமை கூறுவதும், தலை வனுடைய அழியும் புகழைத் தம் உயிர் ஈந்தேனும் மீட்பதில் முனைப்புக் காட்டுவதும், காணப்படு கின்றன.

4. வால்மீகத்தில் இராவணன் தன் கருத்தையும் செயலையும் அவையினரிடம் மறைக்க வில்லை. வெளிப்படையாகக் கூறி அவர் இசைவு நாடினான். தன் தளர்ச்சிகளை நீக்கிக் கொள்ள அவருடைய உற்சாகத்தை வேண்டிப் பெற்றான்.

   கம்பனில், தன் குலத்துக்குற்ற பழியைத் துடைக்க அவையை நாடினான்; தன் செயலுக்கு அவையினர் இசைவைக் கேட்கவில்லை.

5. வால்மீகத்தில் இராவணனை எதிர்த்த வீடணன் அவையினரை வன்முறைக்கும் தூண்டினான்.

6. இரு நூல்களிலும் அரசன் ஆணை இட்டபடி போர் புரிவதற்கெனவே பலர் வாழ்ந்தனர்; போர் புரிந்து மாண்டனர்.

7. இரு நூல்களிலும் தலைவன், தனக்கு வந்த எதிர்ப்பைப் பொறுக்கவில்லை. ஆனால், மாறு பட்ட கருத்தினரோடு வாதிடவில்லை.

தன்னோடு மாறுபட்டவரை அழிக்க முற்பட்டான்.

8. 'ஞாதி' பகைவன் என்ற கருத்து இராவணன் வீடணனுக்குக் கூறுவதில் உறுதியாகக் காணப் படுகிறது.

வால்மீகத்தில், வீடணன் தீயினம் சேர்ந்தவன் என்ற கருத்தும் இராவணன் பேச்சில் வெளிப்படு கிறது.

7. பெண் இனம்

வால்மீகி வாழ்ந்த சமூகத்தில் பெண் இனத்தின் வாழ்க்கையை ஒரே வாக்கியத்தில் குறிப்பிடலாம் எனில், அது மனு கூறிய 'பெண்ணுக்குச் சுதந்திரமில்லை' (ந பஜேத் ஸ்த்ரீ ஸ்வாதந்தர்யதாம். 5-106) என்பது.

இந்த நெறி பெரும்பாலும் சிந்து, யமுனை, கங்கை ஆறுகள் பாயும் நாட்டில் பயின்ற அளவு தெற்கில் கிட்கிந்தையிலும் இலங்கையிலும் நாம் காண்பதில்லை.

நாளடைவில் பிறநெறிகளின் மோதல்களால் நீதியில் பல மாறுதல்கள் உண்டாயின. கம்பன் காட்டும் அயோத்தி சமூகமும் மனுநெறிக்குக் கட்டுப்பட்டிருந்த தாகக் கவிச்சக்கரவர்த்தி பல இடங்களில் கூறியுள்ளார். 'மனு வென்ற நீதியான்' (650), 'மனுநெறி கூறிற்றுண்டோ?' (4021). எனினும், பெண்களின் வாழ்க்கையில் பல கட்டுப்பாடுகள் தளர்ந்திருந்தன என்று கூறலாம்.

1. பொது இடங்களில்

வால்மீகத்தில், பொது இடங்களில் குலமாதர் ஆடவரோடு காணப்படுவதில்லை. இராவண வதைக்குப் பின் வீடணன் சீதையைப் போர்க்களத்துக்கு அழைத்து வந்தபோது, அவள் பலர்காண வருவது தவறு அன்று என இராமன் கூறுகிறான். 'விபத்திலும், உடலும் மனமும் நொந்துள்ள நிலையிலும், போர்க் களத்திலும், கணவனை வரிக்கும்போதும், யாகத்திலும், திருமணத்திலும், பெண்கள் ஆடவர் கண்களில் படுவது

தவறு அல்ல" (VI 114.28). இதனால் பிற சூழ் நிலைகளில் பெண்கள் ஆடவர் கண்களில் படலாகாது என்பது தெளிவு.

கம்பனில், 'பேதைமார் முதல் பேரிளம் பெண்கள் ஈறா' (1062) நாட்டுப் பெண்களும் நகரப்பெண்களும் பல சூழ்நிலைகளில் தனியாகவும், ஆண்களோடு இணைந்தும், வாழக் காண்கிறோம்.

அயோத்தியில் 'பந்தினை இளையவர் பயிலிட'மும், 'கந்தனை அனையவர் கலைதெரி கழக'மும் அருகில் இருந்தன. (79). பெண்கள் 'நந்தன வனத்து அலர் கொய்து, நவ்விபோல் வந்து இளையவரோடு வாவி ஆடி ....தேறல் மாந்தி சூது உந்தினர் (161).

மிதிலையில் வழியில் செல்லும் ஆடவர் கண்களில் பெண்கள் பட்டதைக் கீழ்வரும் தொடர்கள் காட்டும்:

"ஐய நுண் இடையார் ஆடும் ஆடக அரங்கு கண்டார், (487)

'ஊசலில் மகளிர்......உலவக் கண்டார்' (488)

'மகளிர் ஈந்த தெள்விளிப் பாணித் தீந்தேன் செவி மடுத்து இனிது சென்றார்.' (490)

'மங்கையர் விரும்பி ஆடும் வாவிகள் பலவும் கண்டார். (497)

அயோத்தியிலிருந்து மிதிலைக்குப் போகும்போது பெண்கள்,

'ஆடவர் உயிர்என அருகு போயினார்' (752)
'சூடகத் தளிர்க்கை பற்றிப்.............பயப்பயக் கொண்டு போனார்' (783).

ஆண்களும் பெண்களும் ஒருங்கே நீராடுவதும், பூக் கொய்வதும், உண்டாடுவதும், கம்பனில் பல படலங் களில் கூறப்படுகின்றன.

இராமன் வில் இறுத்ததும், மிதிலைப் பெண்கள் மகிழ்ச்சி பொங்கப் 'பருவம் நோக்கும் தோகையின்' ஆடினார் (703); மிதிலை வீதி சென்று எய்திய இராமனைக் காணவந்து 'மொய்த்தார்' (1063); அவன் அழகினைப் பருகினார்.

இன்ப நிலையில் மட்டும் என்பதில்லை; துன்ப நிலையிலும் ஆடவரும் மகளிரும் சேர்ந்து இருந்ததைக் கம்பன் கூறுகிறார். இராமன் நகர் நீங்கியபோது, அவனுடன் ஆடவரும் பெண்டிரும் ஒருங்கே சென்றனர்; ஒருங்கே துயின்றனர் (1849-53).

அவ்வாறே, பரதன் சித்திர கூடத்துக்குச் சென்ற போதும் நிகழ்ந்தது (2356-62).

வால்மீகத்தில் அயோத்தியிலோ, மிதிலையிலோ, கிட்கிந்தையிலோ, இலங்கையிலோ, பொது இடங்களில் இத்தகைய நிகழ்ச்சிகள் அல்லது காட்சிகள் காட்டப் படவில்லை. பணிப்பெண்கள், அடிமைகள் மட்டுமே பொது இடங்களில் காணப்படுகின்றனர்.

கம்பனிலும், ஆண்களோடு பழகுவதில் மணமா காத பெண்களுக்கு இருந்த சுதந்திரம் மணமான பெண்களுக்கு இருந்ததாகத் தெரியவில்லை.

மக்கட் பேறு

'மக்கட்பேறு' என்பது ஆண்மக்கட்பேறே அன்றிப் பெண் மக்கட்பேறு அன்று என்பது வான்மீகத்துக்கும் கம்பனுக்கும் பொது.

தன் குலம் நீடிக்க (குலஸ்ய வர்தநம் I 14. 59) வேள்வி இயற்ற வேண்டும் என ருஷ்யச்ருங்க முனிவனைத் தசரதன் வேண்டியது மகனைப் பெறுவதற்காவே. (புத்ர ஈப்ஸு I 16.19) கம்பனிலும் 'பார் அளிக்கும் மைந்தரை ...நல்க வேண்டுமால்' (260) என்றே தசரதன் கேட்கிறான்.

2. திருமணம்

திருமணத்துக்கு முன்பு

மகன் ஆயினும் மகள் ஆயினும் அவர்களுக்கு மிக இளமையிலேயே மணம் செய்விக்கப் பெற்றோர் விரும்பினர்.

விசுவாமித்திரன் தசரதன் சபைக்கு வந்தபோது இராமனுக்குப் பதினாறு வயது நிரம்ப வில்லை ('ஊந ஷோடஸ வர்ஷ: I 20.2). எனினும், புரோஹிதருடனும் உறவினருடனும் தசரதன் இராமனுடைய திருமணத்தைக் குறித்துச் சிந்தித்துக் கொண்டிருந்தான் (18.37). கம்பன் அவ்வாறு கூறவில்லை.

பெண் பிறந்து விட்டால், தந்தை அவளைப் பிறன் ஒருவனுக்கு உரியவளாகவும், பிறன் ஒருவனுக்கு மணம் செய்து கொடுக்கும்வரை அவளைக் காக்கும் பொறுப்பு உடையவனாகவும் கருதினான். மகளுக்குத் திருமணம் செய்துதுவைப்பது தந்தையின் கடமையாகக் கருதப் பட்டது. அக்கடமையை நிறைவேற்றும் வரை தந்தையின் கவலை பெரிது. இக் கருத்தை வால்மீகியின் சீதை அநஸூயையிடம் கடுமையாக விமர்சிக்கிறாள்.

'நான் திருமண வயது—கணவனோடு சேரும் வயது (பதி ஸம் யோக ஸுலபம் வயோ')—எய்தியதைக் கண்ட என் தந்தை, நான் பிறந்ததாலும் என்னை வளர்த்த

தாலும் பெற்ற இன்பத்தை மறந்து. செல்வம் பெற்றிழந்த வறிஞனைப்போல் கவலையும் ஏக்கமும் உற்றார்.' (II.118.34).

"மணமாகாத பெண்ணின் தந்தை, இந்திரனுக்குச் சமம் ஆனவன் எனினும், உலகில் ஒத்தவராலும் தாழ்ந்தவராலும் பழிக்கப்படுகிறான்" (35).

"நெருங்கியவரால் பழிக்கப்பட்ட தந்தை ஜநக ராஜன் கடலின் கரை சேரப் படகு காணாதவன் போல் துயர்க்கடலில் ஆழ்ந்தான்" (36).

சீதையின் இவ் விமர்சனம் கம்பனில் இல்லை. ஒரே ஒரு குறிப்பு சதானந்தன் கூற்றாக வருகிறது: எவராலும் வில்லை வளைக்க இயலாததால் "என்றும் இனி மணமும் இலை என்று இருந்தோம்; இவன் ஏற்றின் நன்று; மலர்க்குழல் சீதை நலம் பழுது ஆகாது" (689).

அரக்கர் குலத்திலும், புலத்தியன் பெண்ணைப் பெற்ற மானமுள்ள தந்தை படும் துன்பங்களைக் கூறுகிறான் (VII 9. 10).

ஒருவன் ஒருத்தியைக் கண்டு காமுற்று அவளை மணக்கும் விருப்பத்தை அவளுக்கு அறிவித்தாலும், சீலம் உள்ள பெண் 'என் தந்தை எவருக்கு என்னைத் தருகிறாரோ அவரே என் கணவர்' (I 34, 22) என்று கூறுவாள் என வால்மீகத்தில் ஒரு குறிப்பு உள்ளது.

தமிழ் வழக்கு களவு ஒழுக்கம், கற்பு ஒழுக்கம் என இரு பகுதிகளை உடையது.

ஒத்த தலைமகனும் தலைமகளும் கொடுப்பவும் அடுப்பவும் இன்றித் தாமே எதிர்ப்பட்டு அன்பொடு புணர்வது களவு ஒழுக்கம். கரணமொடு புணரக் கொளற்குரி மரபின் கொடுப்பக் கொள்வது கற்பு மணம்.

இம் மரபை ஒட்டி, இராமனும் சீதையும் எதிர்ப்பட்டு அன்பொடு புணர்ந்து, கற்பு மணம் பூண்டதாகக் கம்பன் தன் காவியத்தை அமைத்தான் என்பது யாவரும் அறிந்ததே. தமிழ் இலக்கிய மரபில் ஆணும் பெண்ணும் தம்முள் இணங்கிய பின்பே திருமணச் சடங்கு நடைபெறும். மகளுக்குத் திருமணம் செய்வித்தல் தந்தையின் கடன் என்ற கருத்துக் காணப்படுவது இல்லை.

மிதிலையில் இராமன் வில் இறுத்தபின், சனகன், விசுவாமித்திரனுடைய ஒப்புதல் பெற்று, தசரதனுக்குச் செய்தி கூறி, விரைவில் மிதிலைக்கு வருமாறு அழைப்புடன் தூதுவரை அனுப்புகிறான் (I 67. 26-7.)

கம்பனில் இந் நிகழ்ச்சி ஒரு சிறு மாற்றம் பெறுகிறது. சனகன் விசுவாமித்திரனைப் பார்த்து, "உன் புதல்வன் வேள்விதான் விரைவில் இன்று முடித்தல் வேட்கையோ? அவ் அரசையும் அழைத்தல் வேட்கையோ?" என்று கேட்க, முனிவன், "அவனும் வந்துறுதல் நன்று" எனக் கூற, சனகன் 'ஓலையும் தூதும் போக்கினான்' (730-1).

வால்மீகத்தில் காண்பதுபோலத் தந்தை திருமணத்திற்கு வருதல் இன்றியமையாததாகக் கம்பனில் சனகன் கருதவில்லை.

வால்மீகத்தில் இராமன் திருமணத்துக்கு அயோத்தியிலிருந்து தசரதனுடைய மனைவியரோ வேறு பெண்களோ வந்ததாகக் கூறப்படவில்லை. கம்பன் அவர்கள் வந்தனர் எனப் பாடுகிறார்.

மகட்கொடை குலமுறை கிளத்தல்

இராமன் வில் இறுத்த வீரத்துக்குப் பரிசாகச் சீதையைப் பெற்றான். எனினும், வால்மீகத்தில் வதிட்டன், பிரமன் தொடங்கி இராமன்வரை முப்பத்தொன்பது தலைமுறை அவன் குலமன்னர் பெயர்களைக் கூறி, "அரச! இக் குலத்தில் பிறந்த இராமலக்குவருக்கு உன் மகளிரை வேட்கிறேன். அவர் ஒருவர்க்கொருவர் ஏற்றவர். நீ தருவாயாக" (I 70.45) எனச் சனகனைக் கேட்கிறான். அவன் கைகூப்பித்தொழுது இருபத்தொரு தலை முறை தன் குல அரசர் பெயர்களைக் கூறி, 'முனிப் பெரும! மிக்க மகிழ்ச்சியுடன் என் பெண்களைத் தருகிறேன்' (71.20) எனக் கொடை நேர்கிறான்.

குலமுறை கிளத்தல் கம்பனிலும் உண்டு. வில் இறுக்கும் முன்பே 'முடிச் சனகர் பெருமான் இருந்த குலக்குமரர் தமை இரு கண்ணால் முகந்து அழகு பருக நோக்கி, அருந்தவனை அடி வணங்கி, 'யார் இவர்கள் உரைத்திடுமின் அடிகள்' என, விசுவாமித்திரன் 'அவர் தகைமை பேசலுற்றான்' (636) என வருகிறது. அத் தகைமை மனு தொடங்கி, தசரதன் ஈறாக, பதின் மூன்று அரசருடைய வரலாற்றை, பலர் பெயர்களைக் கூறாது அவர் ஆற்றிய செயற்கரிய செயல்களால் கூறுகிறார் முனிவர். அச் செயல்கள் மனிதகுல நாகரிக வளர்ச்சியின் வரலாறு.

1. உணவு தேடி அலைந்து கொண்டிருந்த குழுக்கள் ஓர் இடத்தில் தங்கி நிலத்தில் உழுது பயிர் செய்து, சமூகமாக வாழ வகை செய்தவன். 'பேதித்த உயிர் அனைத்தும் பெரும்பசியால் வருந்தாமல் வரிசிலையால் நிலமடந்தை முலைசுரப்பச் சாதித்த பெருந்தகை' (637).

2. 'தவம்பேணி, வழிபட்டுப் பரஞ்சுடரை யாம் காண, அணி அரங்கம் தந்தான்' (638).

3. மனிதனுடைய சக்தியால் மட்டுமே நடந்து கொண்டிருந்த உழவுத் தொழிலுக்குக் கால் நடைச் சக்தியையும் பயன்படுத்தியவன்; மாட்டைப் பழக்கி, உழவுக்கும் போக்குவரத்துக்கும் 'விடை ஏறாய்ச் சுமக்க' வழி கோலியவன் (639).

4. நரை, திரை, மூப்பு, பிணிகளால் மக்கள் நலியாமல் மருந்தைக் கண்டவன் (640).

5. சமூகத்தில் வலியோர் - மெலியோர், உயர்ந் தோர், தாழ்ந்தோர் என்ற பாகுபாடுகள் தோன்ற, அவற்றின் இழுபறிகளைச் சமன் செய்து, நீதிவகுத்து, அந்நீதி வழுவாது காத்து, 'புலிப்போத்தும் புல்வாயும் ஒரு துறையில் நீர் உண்ண உலகு ஆண்டவன்' (641).

6. அறம் காவலுக்கு வேண்டிய படைவலி கண்டவன்; 'வில் பிடித்த அறம் என்ன ஒரு தனியே திரிந்து...காத்தான்' (642).

7. இருநிலம் காக்குங்கால், ஓர் உயிருக்கு ஊறு விளைய, 'மன் உயிர்க்குத் தன் உயிரை மாறாக வழங்கியவன்' (643).

8. மழைக்குக் கரு ஆகவும், பிற நாட்டுத் தொடர்புக்கு வழி ஆகவும் 'கடலைத் தொட்டான்' (644).

9. மழையையே நம்பிய உழவுத் தொழில் உயராது என, உணவுத் தேவையை என்றும் நிறை வேற்று வதற்காக, மலையில் பெய்த நீரையும் ஊற்று நீரையும் கொண்டுவரும் ஆற்று நீரை வாய்க்கால் வழிப் பாய்ச்சி

நாட்டை வளப்படுத்த, 'புனல் நீரை வான் நின்று கொணர்ந்தான்' ஒரு மன்னன் (645).

10. ஈட்டிய செல்வத்தைப் பகிர்ந்து கொள்ளவும், பொருள் நிலையில் அவ்வப்போது ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளைச் சமன் செய்யவும். 'பெருவேள்வி ஒரு நூறும் செய்து அமைத்தான் ஒருவன்' (646).

11. மன்னனுக்கு மாண்பு தருவது போரில் வெற்றி பெறுவது என்ற கருத்துப் பரவியிருந்த காலத்தில், 'ரகு என்பான்......திசை இரு நான்கும் வென்றான்' (647).

12. வேந்தரை வென்று, 'இந்துமதி என்னும் திருவை...அயன் என்பான்.........புயத்துக்கு அணி என்ன வைத்தான்' (4 8).

13. இறுதியாக, 'பகைவென்று படிகாப்போன், தனு அன்றித் துணை இல்லான், தருமத்தின் கவசத் தான்' ஆகிய தசரதன் கூறப்படுகிறான் (650).

இங்குக் கூறப்பட்ட மனிதகுல வளர்ச்சிப் போக்கில், இராமன் மேலும் அதை வளர்ப்பவன் என்ற கருத்துத் தோன்றப் படைக்கலங்கள் இவற்கு ஏவல் செய்வதையும், கோதமன் தன் பன்னிக்கு அருளியதையும் கூறி விசுவாமித்திரன் தன் நீண்ட உரையை முடிக்கிறான் (665).

கம்பன், சீதை பிறப்பையும் வளர்ப்பையும் மிக அழகான முறையில் கூறுகிறார். ஆனால், சனகனுடைய குல முறையைக் கூறவில்லை.

சனகன் அவையில் யாக்ஞவல்க்ய, அச்வல, கார்கி ஆகியோர் இருந்ததாகப் ப்ருஹத் ஆரண்யக உபநிஷதம் கூறும். ஆனால், இரு புலவரும் அவர்கள் இருப்பைக் கூறவில்லை.

கம்பன், 'இரவிதன் குலத்து எண்இல் வேந்தர்' (23), 'சூரியன் மரபு' (3776) என இராமன் குலத்தையும், 'திங்கள் தங்கள் குலக்கொடி சீதை' (1114) எனச் சீதையின் குலத்தையும் கூறுகிறார். இது வால்மீகத்தில் இல்லை. சூரிய சந்திரரிடமிருந்து தம் குலத்தைத் தொடங்குவது பிற்கால அரசர் வழக்கம்.

கம்பன் திருமணத்தை மகட்கொடையாகக் கருதவில்லை. 'மண வேள்வி' வதிட்டன் செய்விக்க, சனகன் 'நல்நீர்' இராமன் 'தடக்கையின் ஈந்தான்' (1245). ஆசி, பல்லாண்டு, இசை, வந்தனை, வாழ்த்து, சங்க முழக்கம், மந்திரம் வழங்கல், ஆவுதி, கைப்பற்றல், கனல் சூழ்வரல், தீயை வணங்கல், பொரி சிந்தல், அம்மி மிதித்தல், அருந்ததி காண்டல், மாதவர் கொற்றவன் தாள் சூடல், மனைபுகல் எனச்சடங்குகள் கூறப்படுகின்றன (1246-51).

வால்மீகத்தில், மந்திர பூர்வமாக எரி வளர்த்தது வதிட்டன். அவ் எரிமுன், சனகன் சீதையைக் கொணர்ந்து இராமனிடம் மந்திரம் கூறி இராமன் கையில் புனிதநீர் வார்த்துத் தந்தான். வேறு சடங்குகள் இல (I 73.24-28).

திருமண மந்திரம்

இராமன் சீதையைத் திருமணம் செய்தபோது சனகன் கூறுவன கவனித்தற்குரியது.

"வால்மீகியின் புகழ்பெற்ற ச்லோகம் வருமாறு; இந்தச் சீதை என் மகள்; உம்முடன் அறவழி நடப்பவள்; இவளை ஏற்றுக் கொள்வீராக; உமக்கு மங்களம் உண்டாகுக; உம் கையினால் இவள் கையைப் பற்றுக; இவள் கணவனோடு இல்லற நோன்பு நோற்பவள்;

மிகுந்த பாக்கியம் உடையவள். இவள் நிழல்போல் உம்மை எப்பொழுதும் பின்தொடர்வாள்.''

(இயல் ஸீதா மம ஸுதா ஸஹதர்ம சரீ தவ ||

ப்ரதீச்ச ஏநாம் பத்ரம் தே பாணிம் க்ருஹ்ணீஷ்வ பாணிநா |

பதிவ்ரதா மஹா பாகா சாயாஇவ அநுகதா ஸதா ||

(1-73 26-7)

இவ் வாக்கிலிருந்து சீதையின் தூயகுலப் பிறப்பும் அறநெறி அறிவும் தோன்றும். ''இவள் அறத்தை நடத்த உமக்குத் துணை நிற்பாள்—அறம் அல்லாததை நடத்த அன்று. அவள் அறம் எது எனப் பகுத்து அறியும் விவேகம் உடையவள். நீர் தவறான வழியில் சென்றாலும் உம்மைத் திருத்த உரியவள். நீவிர் இருவீரும் இணைந்து அறவழி ஒழுகுவீராக. அறம் புரிய இவளை ஏற்றுக் கொள்ளும்.''

இவ்வாறு கூறியதும் அவர்கள் இருவருக்கும் கண்ணேறு படுமோ என்று ஐயுற்ற சனகன், ''உமக்கு மங்களம் உண்டாகுக'' என வாழ்த்துகிறார். ''இவள் கையை நீட்டவும் கூசுவாள்; ஆதலின் நீரே உம் கையை நீட்டி அவள் கையைப் பற்றும். அவள் உம் நோன்பு நிறைவேறத் துணைபுரிவாள். அவளுடைய நோன்பும் நீரே. அவளால் நீர் எல்லாப் பாக்கியங்களையும் பெறுவீர். இல்லறம் நடாத்த, எல்லாக் காலங்களிலும் எல்லா நாடுகளிலும் எல்லாச் சூழ்நிலைகளிலும் நிழல்போல இவள் உம்மைப் பின் தொடர்வாள். இனி, அவள் ஆற்றும் அறம் எல்லாம் உம்முடனே அன்றித் தானாக அன்று; பிறருடனும் அன்று.''

ஒத்த தம்பதிகளின் வாழ்க்கை எவ்வாறு அமைய வேண்டும் என்பதைச் சனகன் வாழ்த்தாகவும் அறிவுரையாகவும் கூறுகிறார்.

கம்பனில் வீரனும் அன்னமும் மணத்தவிசு ஏறி இருக்க. சனகன் சொல்வது:

"பூ மகளும் பொருளும் என நீ என்
மாமகள் தன்னொடும் மன்னுதி" (1245)

'பூமியும் அதில் பொதிந்துள்ள பொருட்களும் போல நீர் திருமகள் அனைய என் மகளுடன் பொருந்தி வாழ்க' என்பது இதன் பொருள். 'எல்லாப் பொருட்களும் பொருட்களில் பொதிந்துள்ள சக்திகளும், பூமியிலிருந்தே தோன்றுகின்றன; பூமியிலேயே மறைகின்றன; பொருள் பூமியிலிருந்து பிரிக்க ஒண்ணாதது; அவ்வாறு நீவிர் இருவரும் ஒன்றுபடுக. உம் சேர்த்தியால் மக்களுக்கு நன்மை உண்டாகுக; வாழ்க' என்று விரியும்.

கந்யா தநம், கந்யா சுல்கம்

திருமணத்தின் போது சனகன் சீதைக்குத் தந்த பொருள்களை (கந்யா தநம் (I. 74-3) வால்மீகி அட்டவணைப் படுத்திச் சொல்கிறார்.

'கந்யா சுல்கம்' திருமணத்தை உறுதி செய்வதற்கு மணமகன் மணமகளுக்குத் தரும் பொருள்; அதை மனு அனுமதிப்பது மட்டுமின்றித் திருமணத்தின் உறுப்பாகவும் கூறுகிறார். தமிழில் இது 'பரிசம்' எனப்படும்.

இராமன் பரதனிடம் சித்திரகூடத்தில், "தம்பி! நெடுங்காலத்துக்கு முன்பு நம் தந்தை உன் தாயை மணந்தபோது, பாட்டனாருக்கு இவ் ஒப்பற்ற

நாட்டைச் 'சுல்க'மாக வாக்குறுதி அளித்தார்" (II 107.3) என்று கூறுகிறான்.

கம்பன் நேரடியாக இதைக் கூறவில்லை. சிதைவு களுடன் ஒரு பாட்டில் ஒரு வரி இதனைக் குறிக்கிறது. அயோத்தி அரசு பரதன் உடையதே என்பதை, 'உடைத்தரணி நின்னது என்று இயைந்த தன்மையால், உரனின் நீ பிறந்து உரிமை ஆதலால்' என்னும் காரணத்தைக் குறிப்பாக இராமன் காட்டுகிறான் (மிகைப் பாடல் 245).

தாலி அணிதல்

தாலி அணியும் சடங்கைச் சீதையின் திருமணத் தில் கூறாவிடினும், திருமணமான பெண்கள் கணவன் உயிருடன் இருக்கும் வரை தாலி அணிவதும், கணவன் இறந்தபின் தாலி களைவதும் கம்பனில் கூறப் படுகின்றன.

'தாலி ஐம்படை தழுவு மார்பு' (89)

'மங்கையர் மங்கலத் தாலி' (5116)

முதலியன தாலிஅணிதலையும்,

"உன் கழுத்தின் நாண் உன் மகற்குக் காப்பின் நாண்
ஆம்" (1653)

'மங்கல அணியை நீத்து' (4320)

முதலிய தொடர்கள் கணவன் இறப்ப விதவை தாலி களைவதையும் காட்டும்.

இடர் வருங்கால் கணவனைக் காக்க, மகளிர் தாலியைத் தொட்டனர் என்பது,

'தவிர்கிற்பார் கொல்......தாலியைத் தொடல்' (9206)

'மகளிர் துனுக்கம் எய்தினர் மங்கல நாண்களைத்
தொட்டார்' (9670)

எனவரும் சொற்களால் விளங்கும்.

கம்பனில் கூறப்படும் தாலிபற்றிய கருத்துக்கள் அயோத்தி, கிட்கிந்தை, இலங்கை முச்சமூகங்களுக்கும் பொது.

வால்மீகத்தில் தாலியைப் பற்றிய பேச்சே இல்லை.

3. இல்லறம்

காதல் மலர்தல்

உலகம் முழுதிலும், எக்காலத்தும், எச்சமூகத்திலும், அனைத்து இலக்கியங்களிலும், வாழ்க்கையிலும், தலைமகனையும் தலைமகளையும் 'முதலில் உறவு செய்வன கண்கள்'. இன்பச்சுவையின் முதல் நிலை 'நாட்டம்'; 'சக்ஷு ராகம்'.

கம்பன் காவியத்தில்,

'அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்' (514)
என மிதிலையில் அரும்பிய இங் 'நாட்டம்'

மிதிலை பூத்த
'தே மொழித் திருவை ஐயன் திருவருள் முகத்துநோக்க'
(10353)

என அனுமனுக்கு விடை கொடுக்கும் வரை தொடர்கிறது.

ஐம்புலன் அறிவுகளுள் கண் முதன்மைத்து ஆயினும், 'கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறிய'

இன்பச் சுவை முழுமை பெறும். இம் 'மெய் உறு புணர்ச்சி' இராமன்-சீதை இடத்துக் காணப்படவில்லை. 'இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினார்' (516) என்பதோடு நிற்கிறது. இது 'அறிவு உடம்படுத்தல்' ('மனஸ் ஸங்க;') மட்டுமே.

வால்மீகத்தில் இராமன்-சீதை இடையே காதல் அரும்புவதும், மலர்வதும், திருமணத்துக்குப் பின்பு; அயோத்தியில், மிதிலையில் அன்று.

'தன் மனத்தை வென்ற இராமன் அவள்பால் வைத்த சிந்தையனாய்த் தன் நெஞ்சை அவளுக்குச் சமர்ப்பித்தான், தன் அன்புக்குரிய சீதையைத் தனக்கு மனைவி ஆக்கியது தந்தை என. சீதையின் பண்பாலும் ரூப சௌந்தர்யத்தாலும் அவர்களிடையே அன்பு மேலும் மேலும் வளர்ந்தது. அவன் இதயத்தில் அவளும் அவள் இதயத்தில் அவனும் மாறிமாறிப் புக்கனர். புகுந்தோறும் அவரிடை மலர்ந்த காதல் பன்மடங்கு வளர்ந்தது. காதல் உள்புக, ஒருவருடைய இதயம் மற்றவருக்குத் தெற்றென விளங்கியது.'

'மநஸ்வீ தத்கத மநா: தஸ்யா ஹ்ருதி ஸமர்பித: I
ப்ரியா து ஸீதா ராமஸ்ய தாரா: பித்ரு க்ருதா இதி II
குணாத் ரூப குணாத் ச-அபி ப்ரீதி; பூயோ (அ) பிவர்ததே I
தஸ்யா: ச பர்தா த்விகுணம் ஹ்ருதயே பரிவர்த்ததே II
அந்தர் கதம் அபி வ்யக்தம் ஆக்யாதி ஹ்ருதயம் ஹ்ருதா I
(I 77.26-28).

'இராமன் சீதையை மனைவியாக ஏற்று, தன் மனத்தை அவளுக்குச் சமர்ப்பித்தது, அத் திருமணம் தந்தையால் நிறைவேற்றப்பட்டதால்' என்று முனிவர் கூறுவது குறிப்பிடத்தக்கது. அந்தத் 'தந்தை' இங்கு விசுவாமித்திரன் எனக் கொள்ளலாம்.

"தந்தையும் தனித்தாயும் நீ; இவர்க்கு எந்தை
தந்தனென்; இயைந்தன செய்க' (331)

என்று தசரதன் கையடைப் படுத்தியது முதற் கொண்டு, விசுவாமித்திரனே தந்தை நிலையில் இருக்கிறான்.

'பெரிய காரியம் உள, அவை முடிப்பது பின்னர்' (451). என்றதும்,

'உன்புதல்வன்' (730 எனச் சனகன் கூறுவதும் இதை உறுதிப்படுத்துகின்றன.

இராமன் மனத்தில் சீதையும் சீதை மனத்தில் இராமனும் வீற்றிருத்தலை இருபுலவரும் தொடர்ந்து கூறுகின்றனர். 'அந்தத் தேவியின் மனத்தில் அவனும், அவனுடைய மனத்தில் அவளும் நிலைபெற்றுள்ளனர்' என்பது அனுமன் வாக்கு. (அஸ்யா தேவ்யா மந: தஸ்மிந் ப்ரதிஷ்டிதம் அஸ்யாம் தஸ்ய ச (V 15-22). அவன் சீதையிடம்

"ஆண்தகை நெஞ்சில் நின்றும் அகன்றிலை அழிவு உண்டாமோ?
ஈண்டு நீ இருந்தாய்; ஆண்டு அங்கு எவ் உயிர்விடும்
இராமன்?" (5304)

எனவும், இராமனிடம்

"கண்ணினும் உளைநீ; தையல் கருத்தினும் உளைநீ; வாயின்
எண்ணினும் உளைநீ; கொங்கை இணைக்குவை தன்னின்
ஓவாது
"அண்ணல் வெங்காமன் எய்த அலர் அம்பு தொலைத்த ஆறாப்
புண்ணினும் உளைநீ; நின்னைப் பிரிந்தமை பொருந்
திற்றாமோ?" (6036)

எனவும் கூறியது இக் கருத்தே

இராவணன் சீதைமேல் கொண்ட காதலே அவன் உயிர்வாழக் காரணம்.

"உம்மை நினைப்பு விட்டு, ஆவிநீக்க அஞ்சினேன். அடியனேன் நும் அடைக்கலம், அமுதின் வந்தீர்!" (7641) ஆவி நீப்பின் உம் நினைவும் அகலுமே என்ற காரணத்தால் நான் இறக்க அஞ்சினேன் என இராவணன் அவளைச் சரண்புகுகிறான்.

மனைவியின் கடமை-உரிமைகள்

அயோத்தியில் மணிமுடிதுறந்து, இராமன் காடு உறையப் போகிறான் என்று நகர மக்கள் முழுவதும் அறிந்த பிறகே சீதை அறிகிறாள். 'சீரையின் உடையினன் ஆக இராமன் வருவதைப் பாரா, சீதை துணுக்க மொடு எழுந்தாள்' (1819). 'ஈது இன்னது என்று அறியாள்' (1820). "எம்பி புவிபுரப்பான்... நான் கல்தடம் கண்டு வருவென்... நீ வருந்தலை" (1822) என இராமன் சொல்ல, "நின் பிரிவினும் சுடுமோ காடு?" என்றாள் (1827). இராமன் 'என் செயற்பாற்று?' என எண்ணிக்கொண்டிருப்ப, சீதை 'சீரம் துணிந்து புனைந்து வள்ளல்பின் வந்து அயல் நின்றனள்' (1829). இராமனுடைய மறுமொழியை எதிர்பார்க்கவில்லை.

வால்மீகத்தில் இக் காட்சி நீண்டதாய் அமைக்கப் பட்டுள்ளது; மனைவியின் கடமைகளையும் உரிமை களையும் விவாதிக்கிறது.

இராமன் முதலில் தன் மாளிகைக்குச் சென்று சீதையைப் பார்த்து 'பெருங்குடி மகளே, அறம் அறிந்தவளே, அறவழி நடப்பவளே, சனகன் மகளே, கேள்' (II 26.20) என்று தொடங்கி, கைகேயி மாளிகையில் நிகழ்ந்தவற்றைச் சொல்கிறான். 'பரதனோடு அயோத்தியில் தங்கி நோன்பு ஆற்ற வேண்டும் (37)' என்று கூற, அவளிடம் மூண்ட சினத்தையும் காண்கிறான். ('பாமினி' -38).

சீதை, ''ராம! ஏன் இவ்வாறு பேசுகிறீர்?'' (27.2). எனத் தொடங்கி, மூன்று ஸர்கங்களில் (27,29,30), இருவரும் மேற்கொண்ட இல்லறநெறியைக் நினைவு கூர்கிறாள். அவற்றுள் கீழ்வரும் சொற்கள் குறிப் பிடத்தக்கன:

''தந்தை, தாய், மகன், உடன் பிறந்தோர் யாவரும் அவரவர் ஆற்றிய பாக்கியத்தின் பலனைத் துய்க்கின்றனர்; மனைவி மட்டுமே கணவன் ஆற்றும் பாக்கியத்தின் பயனைக் கொள்கிறாள்.'' (27.4)

''தந்தை, மகன், தாய், ஆயத்தினர். ஏவலாளர் —எவரும் பெண்ணுக்குக் கதி ஆகார்; தானும் கதி ஆகாள். கணவன் ஒருவனே அவளுக்குக் கதி'' (5).

''நான் உமக்கு முன்பு வனத்தில் நடந்து முட்களையும் கற்களையும் மிதித்துப் பாதையை ஒழுங்கு படுத்துவேன்'' (7).

''நீர் உண்ட மிச்சிலை உண்பேன்'' (27.17)

''நான் உம்மைத் (உம்மோடு) துய்ப்பவள் ('பக்தா'); உம் நோன்பை (உம்மோடு நோன்பு) ஆற்றுபவள் ('பதி வ்ரதா'), நீரே என் நோன்பு. (உம்மோடு) ஒத்த இன்ப துன்பங்களை உடையவள் ('ஸமாந ஸுக து:கிதா-). ஆதலின், என்னை உடன் அழைத்துச் செல்லவேண்டும்'' (29.20).

''உம்மை அன்றி எனக்கு வேறு புகல் இல்லை. உம் விரேதமும் என்னுடையதே. என்னோடு நீர் வனத்துக்கு வாரும்'' (30.18).

இறுதியில், இராமன் இவ்வேண்டுகோளை ஏற்று, ''உன் சொல் நீ பிறந்த குலத்துக்கும், புகுந்த குலத்

துக்கும் முற்றிலும் இயைபு உடையது (ஸர்வதா ஸத்ருசம்). என்னுடன் அறம் ஆற்றுபவளாக அமைவா யாக ('ஸஹ தர்ம சரீ பவ'—*30.40,41*)" என்று கூறி அவளைக் காட்டுக்கு உடன் அழைத்துச் செல்ல ஒருப் படுகிறான். அதன் பின்னரே சீதை புறப்பட ஆயத்தம் செய்கிறாள்.

கம்பனில் இராமனுடன் காட்டுக்குச் செல்லக் கோசலையும் எழுந்தாள். அவளைத் தடுத்து இராமன் கூறியது:

"என்னை நீங்கி இடர்க்கடல் வைகுறும்
மன்னர் மன்னனை வற்புறுத்தாது உடன்
துன்னு கானம் தொடரத் துணிவதோ? (1624)
"கொற்றவன்
திருவின் நீங்கித் தவம் செயும் நாள் உடன்
அருமை நோன்புகள் ஆற்றுதி ஆம் அன்றே" (1625)

வால்மீகத்தில், கோசலைக்குக் காடு செல்லவேண்டும் என்ற கருத்தே எழவில்லை. இரு காவியங்களிலும் தசரதன் இறந்தபிறகு சித்திரகூடத்தில் கோசலை இராம னோடு காட்டில் வாழும் பேச்சை எடுக்கவில்லை; பதினான்கு ஆண்டுகளையும் அயோத்தியிலேயே கழித்தாள்.

கணவனுக்குப் பணிபுரிதலே மணமான பெண்ணின் வாழ்க்கைக் குறிக்கோள் என்பதைச் சீதையும் கோசலையும் ஒருவர்க்கொருவர் பரிமாறிக் கொள்ளும் அறிவுரையில் காண்கிறோம். (II*39. 23-31*). இவை அநஸூயையோடு சீதை பேசும் போதும் காணப் படுகின்றன (II.*117.118*). அநஸூயை சீதையைப் பாராட்டி ஆடைகளையும், அணிகளையும், சந்தனம்

அகில் போன்ற மணம் கமழும் பூச்சுக்களையும் தந்து. அவளுக்குப் பூச்சூட்டி, ஸர்வ அலங்கார பூஷிதையாக, வாழ்த்துடன் மாலைக்காலத்தில் இராமனிடம் அனுப்புவதை முனிவர் கூறுவது (119 ஸர்கம்) நின்று அனுபவிக்க வேண்டிய பகுதி.

கணவனுடன் அறம் ஆற்றுதலுக்கு இலக்கியமாக அமையும் நிகழ்ச்சி ஒன்று இராமனும் சீதையும் வனத்துக்குள் நுழைந்ததும் நேரிடுகிறது.

இலக்குவனுடன் அவர்கள் இருவரும் காட்டில் செல்கிறார்கள். அப்போது இராமன் ஆயுதங்களைத் தரித்திருப்பது அவன் 'தவநிலை'க்குத் தகாது எனச் சீதைக்குத் தோன்றுகிறது. அன்பு கலந்த இனிய சொற்களால் அவள், "க்ஷத்ரியன் வில்லை ஏந்தி இருப்பது நெருப்புக்கு அருகில் விறகு இருப்பதை ஒக்கும். விரைவில் சூடு உண்டாகி விறகில் தீப் பற்றி எரியும்" என்றாள் (III 9.15). மேலும் அவள் சொல்லியது "ஆயுதம் ஏந்தி இருத்தலால், தவமே செல்வமாக உடையவர் நாளடைவில் சினம் உடையர் ஆவர்; அவர் தவம் அழியும்" (21). "ஆயுதங்களுக்குச் சேவை செய்வதால் கோழைமையும் மனக்கலக்கமும் ஏற்படும்." 'கதர்ய கலுஷா புத்தி; ஜாயதே சஸ்த்ர ஸேவநாத்' (II 9.28) ஒருவனுடைய மனப்பான்மை அவர் செய்யும் தொழிலை ஒட்டி உண்டாகிறது.

"ஆயுதங்களில் நம்பிக்கை பெருக தன்னம்பிக்கை அழியும்; மனம் கலங்கும்; செயலை ஆளும் திறமை குன்றி விடும். அதனால் தனக்கும் பிறருக்கும் கேடு விளைய ஏது உண்டு."

தையின் இந்தப் பொருள் பொதிந்த சொற்கள் இன்றைய உலகுக்கும் பொருந்துவன.

பண்புடைய மனைவி தன் கணவனுக்கு—அதுவும் இராமனைப் போன்றவனுக்கு—அறிவுரை எவ்வாறு கூறவேண்டும்?'' இவை நீர் அறியாதவை அல்ல. உமக்கு நினைவூட்டுகிறேனே அன்றி, கற்றுத்தரவில்லை. உம் மீது உள்ள அன்பாலும் மதிப்பாலுமே சொல்கிறேன்'' (24).

இராமன் இவ் உரையை ஏற்றுக் கொண்ட முறை அவனுடைய பண்புக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைகிறது. ''எனக்கு நன்மையையே சொன்னாய். அவை நீ சொல்ல உரியனவே, அதற்காக உன்னைப் பாராட்டுகிறேன். உன் வாக்கால் உன் குலப்பெருமை விளங்குகிறது. நீ சனகன் மகள், தர்மம் அறிந்தவள் அன்றோ?'' (III.10.2) ''நீ என்னோடு அறம் நடத்துபவள். ஆயிற்றே; நான் அறத்தினின்று வழுவுகிறேன் என்று நீ கருதினால் எனக்கு அறிவுரை கூறக் கடமைப் பட்டவள். உயிரினும் இனியை நீ!'' (21) என்ற இராமனுடைய சொற்கள் கருதத்தக்கன.

ஆனால், சீதையின் உரையைக் ஏற்று இராமன் ஆயுதங்களை விட்டுவிட வில்லை. அப்போது இருந்த சூழ்நிலையில் ஆயுதங்களின் தேவையை விரிவாக அவளுக்குக் கூறுகிறான்.

கிட்கிந்தையில்

போர் செய்வதிலிருந்து வாலியை விலக்குவதற்குத் தாரை முற்பட்டாள். அதற்கு அவள் கூறும் காரணம் கம்பனில், ''சுக்கிரீவன் நின் தோள் வலிக்கு இற்றனன்...பெயர்த்தும் போர் செயற்கு உற்றது நெடுந்துணை உடைமையால்' (3958) என்பது. விலக்கும் செயல் ஏற்றது எனினும், அது வாலியின் மனத்தைச்

கூடுகிறது. 'அத் துணைவன் அறத்தின் ஆறு எலாம் இழைத்தவன். பிழைத்தனை, பாவி, உன் பெண்மையால் (3965) எனக் காரணம் தவறு எனக் காட்டி அவளுடைய நல்லுரையைத் தள்ளிவிட்டான். 'சுக்கிரீவன் உயிர் குடித்து எய்துவன்'' என்று வாலி சொல்லத் தாரை, 'பின் உரை விளம்ப அஞ்சினாள்!' (3970).

வால்மீகத்தில் வேறுபாடு காணப்படுகிறது. இராமனுடைய குணங்களைத் தாரை புகழ்கிறாள். (IV 15-18-22). இத்தகைய சிறப்புக்களை உடைய இராமனைச் சுக்கிரீவன் துணைவனாகக் கொண்டுள்ளான். நீரும் சுக்கிரீவனுடன் பகைமை ஒழிந்து, அவனை இளவரசன் ஆக்கி, அவனுடனும் இராமனுடனும் நட்புப்பூண்டிரும் (15.23-30) என்று வேண்டுகிறாள். வாலி அதை ஏற்றுக் கொண்டான். ''நான் சுக்கிரீவனைக் கொல்ல மாட்டேன்; அவன் செருக்கை மட்டும் அடக்குவேன்' எனப் புறப்படுகிறான். (16.7).

இலங்கையில்

இராவணன் செயலை மண்டோதரி கண்டித்ததாக வால்மீகியோ கம்பனோ எங்கும் கூறவில்லை. வஞ்சனையால் சீதையைக் கவர்ந்ததும், அவள்மீது ஆசைகொண்டு அழிவுதேடியதும், இராவணன் இறந்த பின்னர் மண்டோதரி புலம்பலில் வருகிறது (VI 111.22.23). இந்திரசித்து இறந்தபோது போர்க்களம் வந்து, 'மைந்தன் மேல் மறுகி வீழ்ந்த' மண்டோதரி, ''சீதை என்று அமுதால் செய்த நஞ்சினால் இலங்கை வேந்தன் நாளை இத்தகையன் அன்றோ?'' (9238) என்று கூறி 'அஞ்சினாள்.' ஆனால் இராவணனிடம் அவன் செயல் தகாது எனக் கூறியதற்குச் சான்று இல்லை.

தானியமாலி அதிகாயன் இறந்த பின்னர் புலம்பும்போது,

"பேதையாய்க் காமம் பிடிப்பாய், பிழைப்பாயோ?
சீதையால் இன்மை வருவ சிலவோயோ?" (7997)

என்று முறையிடுகிறாள்; ஆனால் அவளும் அதற்கு முன்பு இராவணன் செயல் பற்றி ஏதும் கூறவில்லை. இவை கம்பனில் வரும் செய்திகள்.

வால்மீகத்தில் தானியமாலி, சீதையைக்காண அசோகவனத்துக்கு இராவணன் சென்றபோது, உடன் சென்றாள். சீதையால் மறுக்கப்பட்டு அவமானப்பட்ட இராவணனை ஆற்றாளாகத் தழுவி, "இந்தச் சீதை கிடக்கட்டும், குடிமை மூன்று உலகும் செய் கொற்றத்தை, உன் புஜபலத்தால் ஈட்டிய செல்வத்தை, நுகரும் பாக்கியம் அவளுக்கு இல்லை. என்னோடு நீ இன்புறு வாய்" என்று கூறினாள் (V.22.41, 42). வேறு ஒரு அரிய கருத்தையும் வெளிப்படுத்துகிறாள்: "உன்மீது அன்பில்லாத பெண்ணைக் காமுறுவதால் உன்உடல் காமத்தால் வெதும்புகிறது. ஒத்த அன்புடையோர் நுகரும் காமமே இன்பம் பயப்பது" (42, 43).

இராவணனுடைய பத்தினிப் பெண்டிர் அவனுடைய இன்பத்தையே நாடுகின்றனர்; பெண் குலத்துக்கும் சமூகத்துக்கும் அடாத செயலினின்று அவனைத் தடுக்க முயலவில்லை.

அயோத்தியிலும் கிட்கிந்தையிலும் பெண்கள் நேருக்கு நேர் கணவனுடன் பேசுவதாகக் கூறும் கம்பன் இலங்கைச் சமூகத்தில் இதைக் குறிக்கவில்லை.

இராவணன் தானியமாலிக்கு விடை கூறாமல் அசோக வனத்தினின்று தன் மாளிகைக்குத் திரும்பியு

தன் காரணம் வேறு. சீதையிடம் தன் காமத்தைப்பற்றி 'உன்னை நான் பார்த்தது முதல் என் மனைவியரோடு காமம் நுகரகில்லேன்' (V-20.30) என்று அவன் கூறியதைத் தானியமாலி அறியாள்.

இராவணனுடைய இந்த நிலைக்குச் சான்று பகர்வோன் கம்பனுடைய அனுமன். இராவணனுடைய அந்தப்புரத்தில் அவனுடன் துயிலும் பெண்கள் பலரை அனுமன் காண்கிறான். அவர்கள் 'அரக்கன் மேல் வைத்த சிந்தையர், வாங்கும் உயிர்ப்பினர்' (5004), 'வளர்ந்த காதலர்,' (5026), அவனை அடையத் 'துடிக்கின்றார்' (5027); எனினும், அவனுடைய நிலை 'புன் நிலைய காமத்தால் புலர்கின்ற நிலை' (5058). ஏன்? அப் பெண்களுடைய காமம் இவன்மீதுள்ள ஒருதலைக் காமம்; நிறைவு பெறாதது. இவனுடைய காமம், சீதை மீதுள்ள ஒருதலைக் காமம்; அதுவும் நிறைவு பெறாதது. ஆதலால் இவன் புலர்கின்றான்.

பல மனைவியர்

தசரதனுக்கு மூன்று பட்டமகிஷிகளைத் தவிர 350 மனைவியர் இருந்ததாக முனிவர் கூறுகிறார், (II 34.13). 'அறுபதினாயிரவர்' எனக் கம்பன் கூறுகிறார் (1779). இவர் தவிர, 'நேய மங்கையரும்' இருந்தனர் (793). தேவியர் பலர் இருந்திருப்பினும் எவரும் மனம் அழன்ற தாகக் காப்பிய ஆசிரியர் கூறுவதில்லை. 'மாற்றாள்' எனச் சீதையைக் கருதி மனம் அழன்றதாக் கூறப்படுவள், 'வன்பிழை' இழைத்த சூர்ப்பணகை ஒருத்தியே (2846, 2853). பொதுவாக, காப்பியங்களில், மனைவியர் அனைவரும் தம் கணவருடைய இன்பத்திலே நாட்டம் கொண்டிருந்ததால், அவன் பிற பெண்டிரைக் கொள்வதில், புலவியில் அன்றி, காழ்ப்புணர்ச்சி கொண்டதாகக்

காண்பதில்லை. மாற்றாளைப் பணிவிக்கவோ, அழிக்கவோ, எப்பெண்ணும் கருதவில்லை; முயல வில்லை.

'வீழ்ந்தது நின்நலம், வாழ்ந்தனள் கோசலை மதியினால்', (1454)

'அவட்கு எய்தும் வாழ்வு' (1455)

'பிறந்திலன் பரதன்' (1462)

என்பன மந்தரை கைகேயிக்கு ஏற்றும் உரை; இது காறும் கைகேயி உறாத உணர்ச்சிகள்.

குழந்தைகளைத் தாயர் அனைவரும் பொதுவாக வளர்த்தனர். குழந்தைகளுக்கும் தாயர்மாட்டு அன்பு பொதுவானது.

"கோசலையைப் போலவே தசரதனுடைய பிற மனைவியரிடத்தும் இராமன் அன்பு பாராட்டினான்" என்பது சீதை கண்டது, சொன்னது (II 118.5).

நகரமக்கள், இராமன் 'தாய் கையில் வளர்ந்திலன், வளர்த்தது கேகயன் மடந்தை' (1591) என்று கூறுகிறார்கள். கவிக்கூற்றாகக் கம்பனும், 'நால்வர்க்கும் மறுஇல் அன்பினில் வேற்றுமை மாற்றினாள்' என்று கூறுகிறார் (1609).

'கேகயன் மாதே, மதியாலே பிடித்தாய் வையம், பெற்றனை பேரா வரம், முடித்தாய் அன்றே மந்திரம்' (1905) என்பன கோசலை தசரதன் இறந்தபின் கூறுவன.

இராமனுக்கும் சீதையைத்தவிர ஏனைய மங்கையர் இருந்தனரோ என்ற ஐயத்துக்கு வால்மீகி இடம் தருகிறார். மந்தரை, கைகேயியிடம், "இராமனுடைய

சிறந்த பெண்கள் (அவன் இளவரசு பெறுவதால்) மகிழ்ச்சி அடைவர்'' (II 8.12) எனச் சொல்கிறாள்.

அவல நிலையில் சீதை, இராமன் ''அயோத்திக்குத் திரும்பிப் பல பெண்களுடன் அச்சம் இன்றி இன்புறு வான்'' (V 29.14) எனத் தேம்புகிறாள்.

கவிக்கூற்றாக, திகழ்வலக்கை கீழதா, கருங்கடல் நோக்கிக் கருணையங் கடல் கிடந்ததை அனுபவிக்கும் முனிவர், அந்தப் 'புஜம் சிறந்த பெண்களால் வருடப் பெற்றது' (VI 21.3) என வருணிக்கிறார்.

அவ்வாறே சீதை, இலக்குவன் துறந்த செல்வங் களையும் இன்பங்களையும் எண்ணி உருகும்போது, அவற்றுள் அவன் காதலுக்குரிய பெண்களையும் இணைத்துக் கூறுகிறாள் (V 38.54).

இவ் இடங்களில் உரை ஆசிரியர், அப்பெண்கள் சீதையின் பணிப்பெண்கள் என்றும், திருமகளும் மண் மகளும் என்றும், செவிலியர் என்றும் வெவ்வேறு பொருள் கொள்கின்றனர்.

கம்பனில் இராமன் ஏகபத்தினி விரதனாகவே வருகிறான். 'இந்த இப்பிறவிக்கு இருமாதரைச் சிந்தையாலும் தொடேன் என்ற செவ்வரம்' (5378) தந்ததைச் சீதை கூறுவதால் ஒருவன்-ஒருத்தி என்ற பண்பாட்டை இராமன் கடைப்பிடித்தான் என்பதே ஆசிரியர் கொள்கை. அசோகவனத்தில் சீதை அனுமனிடம் கூறும் ஏக்கத்திலும் (5380-81) வால்மீகத் தில் கூறப்படுவது போன்ற பலபெண்கள் உறவுபற்றிய எண்ணம் எழவில்லை என்பதும் கருதத் தக்கது.

இராவணனுக்கு மண்டோதரி, தானியமாலி என்ற இரு மனைவியரைத் தவிரப் பலபெண்களுடன் தொடர்பு

இருந்ததை வால்மீகியும் கம்பனும் குறித்துள்ளனர். சூர்ப்பணகை பழிசாற்றியதும் (III 32. 13-14), அனுமன் அந்தப்புரத்தில் கண்ட காட்சியும் சான்றுகள். புஞ்ஜிகஸ்தலீ, ரம்பை இருவரை வால்மீகி இராவணன் வாக்கிலும் கதைப்போக்கிலும் கூறுகிறார் (VI 13; VII 26). இவற்றிடையில் ஒரு சுலோகம் குறிக்கத் தக்கது:

"அங்கு இருந்த இளம் பெண்கள் அவன் வென்ற பல நாடுகளிலிருந்து கவர்ந்து கொணரப் பட்டவர்; எனினும் அவனுடைய செல்வம், வீரம், அழகு, வலிமை போன்ற ஆண்மைக் குணங்களுக்கு வசப்பட்டு, அவன் மீதன்றி வேறு எந்த ஆசையும் முன்போ இன்றோ முற்றிலும் அற்றவர்—சானகி ஒருத்தியே இதற்கு விலக்கு."

ந தத்ர காச்சித் ப்ரமதா: ப்ரஸஹ்ய வீர்ய உபபந்நேந
குணேண லப்தா:-l)
ந ச அந்ய காமா அபி ந ச அந்ய பூர்வா: விநா வரார்ஹாம்
ஜநகாத்மஜாம் து|| (V-9.70).

கிட்கிந்தைச் சமூகத்தில், வாலிக்குப் பல மனைவியர் இருந்தனர் (IV 20 22). அதுதவிர, தோற்றவன் மனைவியை வென்றவன் கொள்வது வழக்கமாக இருந்தது.

பிலம்புக்க வாலி பெயரான் எனத் திரும்பிய சுக்கிரீவன், 'மிகப் பெரும் நாட்டையும் தாரையையும் உருமையோடு கொண்டான்' (IV 46.9). வாலி இறந்த பின் இராமனிடமே அனுமன் இதனைக் கூறுகிறான். கம்ப அனுமன் தாரையை நீக்கி, வானரர் சுக்கிரீவ னோடு கிட்கிந்தையில் இருந்ததைச் சொல்கிறான் (3843). அதனோடு, வாலி 'தம்பியின் தாரம் விரும்

பினான் (3852) என இராமன் மனத்தில் தாக்கும்படி உறுத்துகிறான்.

கணவன் இறந்தபின்

கணவன் இறந்ததும் மனைவி உடனிறத்தல், அல்லது கணவன் உடலுடன் சிதையில் எரிபடல், கற்புடைய பெண்களின் இயல்பு என்பதை வால்மீகத்தில் காண்பதில்லை. கைம்மை பேரிழவாகக் கருதப்படவில்லை; அது 'பெண் செய்த பாவத்தால், அவள் நல்வினைப்பயன் முற்றுப்பெற்றதால், ஏற்படுவது' எனச் சீதை வாக்கில் வெளிப்படுகிறது (VI 48.7).

அயோத்தியில்

தசரதன், இறந்தபின், அவனுடைய மனைவியர் சிவிகைகளில் இடுகாட்டுக்குச் சென்றனர். கதறி அழுது கொண்டே சிதைக்கு இடம் வந்து (II 78. 20) தீ மூட்டிய பின், ஸரயூ நதியில் குளித்துவிட்டு ஊருக்குத் திரும்பினர் (23).

கம்பனில் 'எரியில் மூழ்கினார்' (2238), 'தம் கணவர் பின்செலும் நங்கைமார் புகும் உலகம் நண்ணினார்' (2239) என்று வருகின்ற சொற்கள் தேவிமார் மூவரைக் குறிக்கவில்லை; பிற மனைவியரே உடன் இறந்தனர் என்று தெரிகிறது. பின் வரும் நிகழ்ச்சிகளில் அரசியர் மூவர் பங்கு கொள்வதைக் காண்கிறோம்.

வாலியின் 'நிமிர்ந்த உடலை'ச் (IV 25.30) சிவிகையில் சுடுகாட்டுக்கு வானரர் கொணர்ந்தனர். தாரை அவன் தலையைத் தன் மடியில் தாங்கி, அவனுடைய பிறநாயகிகள் சூழ்ந்திருப்பதைக் கூறிப் புலம்புகிறாள் (45). அங்கதன் சிதைக்கு எரியூட்ட,

அவனை முன் நிறுத்தி சுக்கிரீவனும் தாரையும் மற்ற வானரரும் நீர்க்கடன் செய்கின்றனர்.

வாலி இறந்தபின், தாரை இராமனைக் கண்ணுற்றதும், "நீ அளத்தற்கு அரியவன்; வெலற்கு அரியவன்; புலன்களை வென்றவன்; அறங்களைக் காப்பவன்; அழியாத புகழை உடையவன்; சிறந்த அறிவாளி; நிலம் போலப் பொறுமை உடையவன்" (24. 13) எனத் தொடங்கித் துதிக்கிறாள்: பழிக்கவில்லை.

கம்பனுடைய தாரை இராமனுடன் பேசவே இல்லை, துதிக்கவும் இல்லை. வாலியின் மனைவியர் எரிபுகவில்லை. வால்மீகத்தில் தாரையை மறுபடியும் காண்பது, 'கண்ணுக்கு இனியள்' (33.31,) 'அழகிய புருவங்களை உடையவள்' (32) என்று சுக்கிரீவன் கூறும் தோற்றத்தளாக.

தொடர்ந்து, வால்மீகி 'தள்ளாடும் நடை, மதத்தால் கலங்கிய கண்கள், நெகிழ்ந்த மேகலையில் பொன் நாண் கயிறு - இந்தக் கோலத்தில் குனிந்த நிலையில் மெலிந்த உடல்வாகுடன் இலக்குவன் முன்பு தாரை வந்தாள்' (38) என்று கூறுகிறார்.

இதற்கும், கம்பன் சொல்லும், 'மங்கல அணியை நீத்து, மணி அணி துறந்து, வாசக் கொங்கு அலர் கோதை மாற்றி, குங்குமச் சாந்தம் கொட்டாப் பொங்கு வெம் முலைகள், பூகக் கழுத்தொடு மறையப் போர்த்த நங்கை'க்கும் (4320) எவ்வளவு வேறுபாடு!

இலங்கையிலிருந்து திரும்பும்போது சீதை, புட்பக விமானத்தைக் கிட்கிந்தையில் இறக்கி, சுக்கிரீவனுடைய மனைவியரையும், தாரை முதலானவரையும் அயோத்திக்கு உடன் அழைத்துச் செல்ல விரும்பினாள் (VI 123,

24). விமானம் இறங்கியதும், சுக்கிரீவன் இராமன் முன்னிலையில் தாரையை 'ப்ரியே' (31) என்று அழைத்து வானரப் பெண்களுடன் அயோத்திக்குப் புறப்படச் சொன்னான். உருமையின் பெயரே இங்கு இல்லை.

கம்பனில் சுக்கிரீவன் இப்படிக் கூறுதல் இல்லை. சீதை 'கொந்தார் குழலினாரை ஏற்றுதல் கடன்மைத்து' என்றாள் (10125). அப் பெண்களை ஏற்றியது அனுமன்.

இலங்கையில்

இராவணன் இறந்தபின், மண்டோதரியின் புலம்பல் (ஸர்கம் (VI 3) வால்மீகத்தில் அறிவுத்திறன் உடையது. தான் இழந்த பெருமைகளையும் இன்பங் களையும் நினைத்தும், தன் வைதவ்யக் கோலத்தை எண்ணியும் தன்-இரக்கப் படுகிறாள் (61-65). இராவணனுடைய பல வெற்றிகளை இன்றைய நிலையில் நிறுத்தி ஆராய்கிறாள். அவற்றுள் குறிப்பிடத் தக்கன:

"இராமன் மஹா யோகி, பரமாத்மா; மனிதவடிவில் வந்துள்ள விஷ்ணு; உலகத் தலைவன்" எனப் பல அடுக்குத் தொடர்களால் இராமனுடைய பெருமை களைப் பாராட்டுகிறாள் (11-14).

"முன்பு நீ மூன்றுலகங்களையும் வென்றாய். எதனால்? முதலில் உன் ஐம்புலன்களையும் வென்றதால். உன்னிடம் தோல்வியுற்ற அப் புலன்கள் உன்னை வெல்ல உரிய காலம் தேடிக் கறுவிக் கொண்டிருந்தன. (சீதையால்) அவ் வாய்ப்புப் பெற்றதும், அவை உன்னை வென்றன; நீ அழிந்தாய்" (15).

"சீதை மண்ணில் பிறந்தவள்: பூமியில் உள்ள செல்வங்களின் செல்வம் (21); அவளை நீ வஞ்சனை

யால் கவர்ந்தாய்; பதிவிரதையின் தவம் உன்னை எரித்தது (23); சீதையினும் அழகுள்ள பெண்கள் உள்ளனர்; உன் காமமோஹத்தால் நீ அதை அறிய வில்லை" (27).

"கறங்கு கால் புகா, கதிரவன் ஒளிபுகா' (4857) இலங்கையில் காற்றும் சூரிய கிரணமும் தடையின்றிப் புகலாயிற்றே" என அங்கலாய்க்கிறாள் (82).

ஈமக்கடன் ஆற்றியபின்னர் இராவணனுடைய மனைவியர் வீடணனுடன் பைய நடந்து நகருள் சென்றனர் (122).

கம்பனுடைய மண்டோதரி இடத்துக் கழிவிரக்கம் காணப்படுவதில்லை. ஏழு பாடல்களில் (9939-45) தன் மன நிலையை உருக்கமாக வெளியிடும் அவள், மும்முறை இராமனை மானுடன் எனக் குறிப்பிடுகிறாள்.

"மானுடவன் வாளி உடல்புகுந்து தடவி உயிர் பருகியது"

"ஓர் அம்போ உயிர் பருகிற்று இராவணனை?
மானுடவன் ஊற்றம் ஈதோ"

"மாரனார் தனி இலக்கை மனித்தனார் அழித்தனரே"

எனபன அவள் சொற்கள். இராமனுடைய கடவுள் தன்மையை அவள் கூறவில்லை.

பிறகு இராவணனுடைய 'அருமார்பினைத் தன் கைகளால் தழுவி......உயிர் நீங்கினாள்' (9946). தானிய மாலியையும் பிற பெண்களையும் பற்றிக் கூறப்பட வில்லை.

கணவனைக் கொன்ற பகைவனைக் கம்பன் காட்டும் மண்டோதரி புகழவில்லை. அப்படிப் புகழ்வது அவர் சமூக மரபுக்கு அடுக்காது.

வால்மீகி கூறாத விராதன், இரந்திரன், கவந்தன். கருடன் துதிகளைத் தன் காவியத்தில் சேர்த்துள்ள கம்பன் வால்மீகி கூறிய தாரை, மண்டோதரி துதிகளை நீக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

4. சில பழக்கங்கள்

மனைவி ஒரு பொருள்

இராமன் தன் சிற்றன்னை கைகேயி அழைக்க, அவன் மாளிகைக்குச் செல்கிறான். அவள் 'உந்தை உரைப்பது ஓர் உரை உண்டு' எனத் தொடங்கி அரசன் சொன்னதைக் கூறுகிறாள். அப்போது இராமன் 'மன்னவன் பணியன்றாகில் நும்பணி மறுப்பெனோ?' என்று கூறி, அப்பணி தலைமேல்கொண்டான்' (*1604*).

வால்மீகத்தில், இராமன் பணி ஏற்பது கூர்ந்து நோக்கத்தக்கது.

> "உம் ஏவல் எனின் நான் தம்பி பரதனுக்குச் சீதையையும், நாட்டையும், என் உயிரையும், அவன் விரும்பும் செல்வத்தையும் நானாகவே (ஸ்வயம்) மகிழ்ச்சியுடன் (ஹ்ருஷ்டோ) தருவேன் (தத்யாம்)" (II *19.7*).

அஃறிணைப் பொருளான செல்வத்தையோ, தன் உயிர் தனக்கு மட்டுமே உரியது என்ற மரபில் உயிரையோ, அரசர் நாடு தமக்குரியது என்று கருதிய காலம் ஆதலின் நாட்டையோ, அதாவது ஆட்சியையோ, தரட்டும். 'சீதையையும் தருவேன்' என்றது அவளையும் மற்றவற்றோடு இணைத்து, ஓர் அஃறிணைப் பொருளாக, அடிமையாக, எந்த உரிமையும் அற்றவளாகக் கருதி இராமன் இவ்வாறு கூறுவது நமக்கு வியப்பைத் தருகிறது.

இராமன் வருகையை முன்கூட்டி அறிவித்த அனுமனுக்கு, பரதன் நூறாயிரம் பசுக்கள், நூறு

ஊர்களோடு, நல் ஒழுக்கமும், குடிப் பிறப்பும், அழகும் உடைய பதினாறு கன்யைகளையும் மனைவியராக வழங்குவதாக வால்மீகி கூறுகிறார்(VI 125.44); அனுமன் ஏற்கவில்லை.

கம்பன் கோதானத்தைப் பல இடங்களில் குறிப்பிடுகிறார்.

கோசலை 'நல்ல தவர்க்கு எலாம் கன்றுடைப் பசுவின்
கடல் நல்கினாள்'. (1407)

இராமன் 'அருத்தி வேதியர்க்கு ஆன்குலம் ஈந்து' (5094).

ஆனால், பெண்களை மனைவியராக ஒருவனுக்குத் தானம் கொடுக்கும் வழக்கம் கம்பன் கண்ட சமூகங்களில் இலது.

கம்பன் இக் கருத்துக்கு எங்கும் இடம் தரவில்லை.

பரதன் கோசலைமுன் சூள் உரைக்கும் போது. "வீட்டில் உடன் வாழும் புத்திரர், ஆண் அடிமைகள் பணி ஆட்கள், யாவரையும் விட்டுத் தனியே, இனிய உணவை உண்ணும். (II 75. 34) பதகன் அடையும் பாவத்தை நான் பெறுவேனாக" என்கிறான்.

ஆண்களைக் கூறும் பரதன் பெண்களைக் கூறாது விட்டது குறிப்பிடத் தக்கது.

பெண், ஆணைப் பெயரிட்டுக் குறிப்பிடல்

வேறு வழியற்ற நிலையில் அன்றி, பெண் எந்த ஆணையும், குறிப்பாகக் கணவனையும் கணவனைச் சார்ந்தாரையும், அவர் பெயர்சொல்லிக் குறிப்பிடுவது தமிழ்நாட்டு வழக்கம் அன்று. தன்னை மறந்து அரற்றலில் அரிதாக அப்படிப் பெயர் வருவதுண்டு. பிற

சம்யங்களில் மதிப்புக்கு உரிய பெயரோ, உறவு முறைப் பெயரோ மட்டும் உபயோகிக்கப்படும்.

கம்பராமாயணத்தில், சீதை நேராக இராமனிடம் பேசும் இடங்கள் சிலவே. அவற்றில் பயிலும் விளிப்பெயர்கள், 'பொன்னை உற்றபொலங் கழலோய்' (1821); 'நாயக' (3303); 'வேத' (10028) போன்றன.

இராம்னைக் குறித்து அவள் பிறரிடம் பேசும் போது,

'காகுத்தன் மனைவி யான் '(3357), 'காகுத்தன் கற்பினேன் '(3385), 'ஆரியன்' (5185), 'எம் கொற்றவன் (5359), 'ஆயவன்' (5362), 'சிலைவீரன்' (5369), 'ஆர்க்கு எலாம் கண்ணன் '(10026) போன்ற சொற்கள் பயில்கின்றன.

அரற்றும்போது கூட 'இறைவா, இளையோய்' (3389), 'வரதா' (3395) என்றே வருகின்றன.

அசோகவனத்தில் இராவணனுடைய 'காய்ந்தன சலாகை அன்ன உரை' கேட்டு, சீதை 'வெய்ய மாற்றங் கள்' சொல்லும் போது, காவியத்தில் ஒரே முறை "வில்தொடை இராமன் கோத்து விடுதலும்... இராவணன் பெற்றுடை வாளும் நாளும் இற்று இடையும்" (5189) என இராமன் பெயரை அவள் சொல்வதாக வருகிறது.

அவ்வாறே தசரதன் பெயரையும் அவள் ஒரே முறை சொல்கிறாள். இராவணனிடம் 'தசரதன் தொல்குலத் தனையன்' (3355) என இராமனைப் பற்றிக் கூறும் போது அது வருகிறது.

ஆனால், வால்மீகத்தில், சீதை இராமனைப் பார்த்து 'ராம' என்று அழைத்ததாகப் பல இடங்களில் வருகிறது. வனவாசத்துக்கு அழைத்துச் செல்ல மறுத்த இராமனிடம் அவள் சினந்து கூறிய மொழிகள் சில;

"ராம, உம்மை மருமகனாகப் பெற்ற என் தந்தை" (II 30. 3)

"ராம, என்னைத் தொண்டு மகளாக நீர் கருதி" (8)

"ராம, என்னுடன் வாரும்" (18)

அவள் அநஸூயையிடம் இராமனைப் பற்றிக் கூறும்போது, 'என் தந்தை என்னை ராமனுக்கு (விவாஹம் செய்து) தந்தார்' (III 118. 50-52) என்று சொல்கிறாள்.

இராமனுடைய குலத்தைக் குறிப்பிட்டு, அவள் கணவன் பெயரைச் சொல்வதும் உண்டு. 'ரகு குலத்தில் பிறந்த ராமலக்ஷ்மணர்' (44) என்பது சான்று.

கங்கை யமுனை ஆறுகளை வழிபடும் போது 'தசரதன் மகன்' (II 52. 83) எனவும், 'ராம' (55-20) எனவும், அவர் பெயர்களைக் கூறியதும் உண்டு.

இராவணனிடம் அவள் தன்னை, 'ராமன் மனைவி' என்றே அறிமுகம் செய்து கொள்கிறாள் (III.47.39). தன் வரலாற்றை அவள் கூறுகையில் அடைமொழி ஏதும் இன்றி 'ராம' என்னும் பெயர் பன்முறை பயில்கிறது. (47.11,13,16,19,23,33,48).

அவ்வாறே அசோகவனத்தில் அவல நிலையில் இருந்தபோது, அனுமனிடம் இராம இலக்குவர் பெயரையும் (V 33.16,20,25), இராமன் பெயரைத் தனியாகவும் (V 35.23,36;37.13,18) சொல்கிறாள். இவை தவிர 'ராகவ' 'தாசரதி' என அவன் மூதாதையர் பெயர்களாலும் குறிக்கிறாள்.

தாரை போருக்குப் போகும் வாலியைத் தடுத்த போது 'கொற்றவ' 'அரச' என்ற விளிச்சொற்கள் வருகின்றன. அவன் இறந்தபின் தன் தொடர்பையும் அவன் பண்புகளையும் சேர்த்து, 'ஆருயிரே, என் உள்ளமே, அரசே,' (4098), 'பகையாத பண்பினாய்' (4099), 'பொய் உரையாத புண்ணியா' (4103), 'செரு ஆர் தோள' (4104), 'மகனே' (4109) என்ற சொற்களால் புலப்படுத்துகிறாள்.

வால்மீகத்தில் அவள் இலக்குவனிடம் பேசும்போது வாலி சுக்கிரீவன் இருவரையும் அவர்கள் பெயர் களாலேயே குறிப்பிடுகிறாள் (IV 33.54;35.18).

கோசலை தசரதனை 'அரைசே' (1635), 'உலகின் தவமே' ''திருவின் திருவே'' 'கருணாலயனே' (1637) என்ற சொற்களால் சுட்டுகிறாள்.

கோசலை இராமனைப் பெயர் சொல்லி அழைத்த இடம் ஒன்றே. 'எண் இல் கோடி இராமர்கள்' (10181) என்பது அப்பாட்டு. அதேபோலச் சுமித்திரையும் ஒரே முறை, 'இராமன் நம் மன்னவன்' (1751) என்று அவன் பெயர் குறிப்பிடுவதாகக் கம்பன் காட்டுகிறார்.

ஆனால் வால்மீகத்தில் பலமுறை, குறிப்பாக இராமன் காடுசெல்ல விடை பெறும்போது, கோசலை 'ஸ்வஸ்த்யநத்தில்' 'ராம' என்றும் 'ரகுநந்தன' என்றும் அழைக்கிறாள். (II 25.21,23;24.35).

கைகேயி தசரதனுடன் பேசுவதாக வரும் நாற்பது பாடல்களில் அவள் அவனை 'மன்ன' என்று நான்கு முறையும், 'சரம்தாழ் வில்லாய்' (1528), 'குசைப்பரியோய்' (1513) எனவும் விளிக்கிறாள். கவிச் சொல்லாக 'மன்னன்' என்ற சொல் ஒன்பது இடங்களில் இப் பாட்டுக்களில் பயில்கிறது. 'மன்னன்' நிலை பெற்றவன் ஆதலால்,

அவன் ஈந்த வரம் நிலைபெறவேண்டும் எனப் பன்முறை இச்சொல்லைக் கம்பன் பயன்படுத்தியிருக்கக் கூடும்; அல்லது 'வில்லும் பரியும்' வரம் ஈந்த சூழ்நிலையை அவனுக்கு நினைவூட்டும் எனக் கைகேயி உபயோகித்து இருக்கலாம்.

மண்டோதரி இந்திரசித்தனுக்காக அழுதபோது, "இலங்கை வேந்தன் நாளை இத்தகையன் அன்றோ?" (9238) எனப் பெயர் கூறாது இராவணனைக் கூறுகிறாள்.

அவன் இறந்த பின்னரே, 'இராவணனார் முடிந்த பரிசு?' (9939) என்றும், 'ஓர் அம்போ உயிர் பருகிற்று இராவணனை?' (9941) என்றும் பெயரிட்டு அரற்று கிறாள்.

தானியமாலி ஓயாப் பூசல் இட்டு வந்து ஏங்கி இராவணனிடம், 'கொடியாய் ஐயா' (7993), 'கும்ப கருணனையும் கொல்வித்து, என் கோமகனை அம்புக்கு இரை ஆக்கி ஆண்டாய் அரசு, ஐய' (7998) என்று முறையிடும் போதும் இராவணன் பெயர் குறிக்கவில்லை.

பெண்களும் ஏனைய, 'தாழ்ந்தோரும்' ஆண்களை யும் 'உயர்ந்தோரையும்' பெயர் இட்டு அழைப்பது மரியாதைக் குறைவு எனவும், உறவு, உடைமை, ஊர், பண்பு இவைகளைப் பற்றிக் குறிப்பிடலே முறை என்றும், குழு, இன, உடைமைச் சிறப்புக்களைப் பாராட்டும் இன்றைய சமூகத்தினரும் கருதுகின்றனர். பண்டைய தமிழ் முறையும் இது ஆகலாம். கல்வி, கேள்வி, தொழில்கள், தொடர்பாகவும் பெயர்களைக் குறிப்பிட்டனர்.

பயிர்ப்பு

'பயில்தல்' என்ற சொல் பழகுதல், தொடுதல் என்ற பொருளில் பழைய நூல்களில் ஆட்சியில் இருந்தது. மகடூஉக் குணமாக, அச்சம், மடம் நாணத்துடன் தொல்காப்பியர் பயிர்ப்பைக் கொள்ளாவிடினும், பல நூல்களில் இதுவும் அவற்றுடன் வைத்து எண்ணப் படுகிறது. கணவன் அன்றிப் பிற ஆடவர் தீண்டலால் பெண்கள் கூச்சம் உறுவது இயல்பே.

கங்கையைக் கடக்கக் குகன் நாவாய் கொணர்ந்த போது இராமன் இலக்குவனிடம் கூறுகிறான்;

> "ஆண்களுள் புலி அன்னவனே! முதலில் நீ ஏறு. படகை நகராமல் நிறுத்து. மெதுவாக, மனத்தை வசப்படுத்தியவளான சீதையைப் பற்றி உடனே ஏற்று" (II 52.75).

புலன் அடக்கம் உடைய இலக்குவன் அவ்வாறே செய்தான்; பிறகு இராமன் ஏறிக்கொண்டான் (76, 77).

யமுனையைக் கடப்பதற்கு இலக்குவனே மூங்கில் களாலும், நாணலாலும் படகைச் செய்து மேலே புல் விரித்து ஆசனமும் அமைத்தான். சற்று நாணம் கொண்ட சீதையை இராமன் படகில் ஏற்றினான். (55. 15, 16). இந்த நாணம் முன்பு கூறப்படவில்லை.

இராவணன் சீதையின் மெய்தீண்டி எடுத்து முதலில் தேரிலும், ஜடாயு தேரை அழித்தபின் மடியிலும் வைத்துச் சென்றது வால்மீகத்தில் பல இடங்களில் கவிச் சொல் ஆகவும், (III 49.20; 51.22;52.18) சுக்கிரீவன் (IV 6.10) சம்பாதி (V 58.16) வாக்காவும் கூறப் பட்டுள்ளது. அவள் ஓலம் இட, சடாயு இராவணனை

எதிர்த்து அவனுடைய வாளால் வெட்டுண்டு வீழ்ந்தான். வீழ்ந்த சடாயுவை நோக்கிச் சீதை ஓடினாள். அவனைப் பற்றிக் கொண்டு, கதறி அழுதாள் (III 51, 46).

கம்பனில் இத்தகைய காட்சிகள் இல்லை. கம்பன் பயிர்ப்பைக் கற்புக்கு இணையாகக் கொண்டுள்ளார் என்று தெரிகிறது.

இராவணன் சீதையின் 'திரு உருத் தீண்ட அஞ்சுவான்' (3461): 'கீண்டான் நிலம் கீழொடு மேல், கொண்டான் தேர்மிசை' (3390-91) என்று அவளைத் தொடாமல் எடுத்துச் சென்றதைக் கவிஞர் கூறுகிறார். கொடியையும் கவசத்தையும் வில்லையும் அழித்த சடாயு தேரை அழிக்கவில்லை.

அசோக வனத்தில் அவள், முன்னர் இலக்குவன் புல்லினால் தொடுத்த தூய சாலையில் இருந்தாள் (6037) என்றே கம்பர் பாடுகிறார்.

அனுமன் சீதையிடம் 'அடியன் தோள் ஏறு கடிது, இறைவைகும் குன்றிடை உனைக்கொண்டு குதிப்பென்' (5354) என்று விண்ணப்பிக்க, அவள் 'ஆண் எனக் கூறும் இவ் உருத்தீண்டல் கூடுமோ?' (5363) என மறுத்து விட்டாள்.

இந்த இடத்தில் வால்மீகியும் இதையே கூறுகிறார்.

"இராமனைத் தவிர பிறன் உடலை நானாகத் தொட இசையேன். என் உடல் என் வசம் இல்லாத போது, என் விருப்பத்துக்கு மாறாக, பலாத்காரத்தால் இராவணனுடைய உடலைத் தொட நேர்ந்தது" (V 37. 62, 63).

அடிமை—பணிப்பெண்—கணிகையர்

வால்மீகி கூறும் அயோத்தியில் அடிமைகள் இருந்தனர்

வனவாசத்துக்குப் புறப்பட்ட சீதை பிராம்மணருக்குத் தானமாக வழங்கியவற்றுள் பொன், வெள்ளி, பசு, யானை, வாகனம், 'தாஸீ' (பெண் அடிமை) ஆகியவை இருந்தனவாகக் கூறப்படுகின்றன (II 32. 16) தசரதன் இறந்தபின் பரதன் தானமாக வழங்கியவற்றில் 'தாஸீ தாஸாந் (II 77.13), பெண் அடிமைகளும் ஆண் அடிமைகளும், இருந்தனர். அடிமைகள் உயிர் உணர்வு அற்ற பொருள்களுடனும் கால்நடைகளுடனும் வைத்து எண்ணப்பட்டனர். 'அடிமையின் மனைவியும் அடிமையே' என இலக்குவன் சூர்ப்பணகையிடம் சொல்கிறான் (III 15.18).

கம்பன் அடிமைகளைக் குறிப்பிடவில்லை. 'அடியேன்' என வருவது உபசார வழக்கே.

இராமனைத் திரும்பக் கொணரப் பரதனுடன் செல்லும் பரிவாரங்களுக்குப் பரத்துவாசன் விருந்து படைத்ததை மிகவும் விரிவாக முனிவர் ஒரு சருக்கத்தில் கூறுகிறார் (II 91).

விருந்து என்பது உணவு, குடி மட்டும் அல்ல. இருபதினாயிரம் இளம்பெண்கள் படைவீரர் உடலை அமுக்கிப் பிடித்து, அழுக்கு நீங்கத் தேய்த்தனர் (44); ஈரம் துவட்டினர் (54); சந்தனம் பூசினர்; கலவி இன்பம் தந்தனர் (58); வீரர் பரவசம் உற்றனர்; திருப்தி அடைந்தனர் (64).

கம்பனிலும் இதுபோன்ற காட்சி ஒன்று உண்டு. இராவணன், போர்த்தொழில் வருந்தினர்க்கு, விருந்து

அமைக்கிறான்.' 'வான நாடியர் யாவரும் வந்தனர்' (9620). அந்தப் பெண்கள், 'பாடுவார்கள்; பயில்நடம் பாவகத்து ஆடுவார்கள் அமளியில் இன்புறக் கூடுவார்கள்' (9621). 'அரைசர் ஆதி, அடியவர் அந்தமா. இராக்கதர் இந்திரபோகம் விழைதரக் கரை இலாத பெருவளம் கண்ணினார்' (9622).

இவை அன்றி, கும்பகருணனை வானவர் மகளிர் கால் வருடினர் (4959). இராவணனுக்கு மேனகை வெள்ளடை உதவினாள்; திலோத்தமை செருப்பினைத் தாங்கிச் சென்றாள் (5147). ஆனால் அரக்கியர்தாம் கேடகம், மழு, எழு முதலாய படைகளைத் தாங்கினர் (5163); தேவ மங்கையர் அல்ல. வேறு பெண்கள் பூஞ் சதுக்கம், சாமரை, உக்கம் போன்றவற்றைத் தாங்கி நடந்தனர் (5157); அவையில் இன்னிசை வழங்கினர் (5851).

இலங்கையில் 'அரக்கர் மாதர் வானவர் மகளிர் ஆட்ட மஞ்சனம் ஆடுவார்' (4937), அரக்கர் சமூகத்தில் இவை எல்லாம் நடந்ததாகப் பாடுவது தவிர, எப் பெண்ணும் ஆணின் உடலைத் தொட்டுப் பணிபுரிந்த தை வேறு இடங்களில் கம்பன் கூறவில்லை.

போர் முடிவுற்றபின், வீடணன் இராமனைத் தொழுது, "இனிய உடற் பூச்சுக்களையும், வஸ்த்ரம், ஆபரணங்கள், சந்தனம், மாலைகள், முதலியவற்றோடு, ஒப்பனைக் கலைகளில் வல்ல அழகிய பெண்கள் உமக்கு நீராட்டக் காத்திருக்கின்றனர்; அவர் பணியை ஏற்றருள்க" என, இராமன், "பரதன் நோன்பு ஆற்றும் போது நான் நீராடல் உரியதன்று" என விலக்கி, சுக்கிரீவன் முதலான வானரர்க்கு நீராட்டப் பணிக் கிறான் (VI 121. 2-5).

பரத்துவாச ஆசிரம மரபு இலங்கைக்கும் எட்டி இருந்தது.

வனவாசத்தின் துன்பங்களை விரிவாக எடுத்துரைத்த இராமன், சீதையை அயோத்தியில் தங்கிப் பரதனுக்குப் பணிசெய்யுமாறு பணிக்கிறான். சீதை, சினம் கொண்டவளாய் 'ஸைலூஷ' போல அவன் வாழ்வதாக அவனைப் பழித்து உரைக்கிறாள் (II 30 .8). (இப்பகுதியின் ஒழுக்க இயல் சர்ச்சைக்கு உரியது. அதை ஈண்டு எடுக்கவில்லை) 'ஸைலூஷ' என்னும் சொல் பொதுவாக 'நடிகன், பெண்டிரால் வாழ்பவன்' என்ற பொருள் கொண்டது. அயோத்தி சமூகத்தில் அத்தகையவர் இருந்ததால், சீதை அவர்களைப் பற்றிக் கூறினாள் என்பது கவனிக்கத் தக்கது.

வேறொரு வகைப் பெண்களைப்பற்றி வால்மீகத்தில் ஒரு குறிப்பு உள்ளது. உருவத்தால், அழகால் வாழும் பெண்கள் 'ரூப ஜீவா: (II 36. 3) எனப்பட்டனர். சோகம் நிறைந்த கட்டத்தில் உணர்வு தடுமாறி இருந்த நிலையிலும் தசரதன், இராமனுடன் வனத்துக்குச் செல்லும், சேனைவீரருடன் 'ரூபஜீ'விகளும் போக வேண்டும் என்று ஆணை இட்டான்.

இனி, 'கணிகையர்' பற்றிக் கூறுவனவற்றைக் காண்போம். கைகேயியுடன் 'கணிகைய'ரும் மிதிலைக்குச் செல்வதைக் கம்பனும் கூறுகிறார் (794). அவர் 'காமம் விற்கின்ற......மகளிர்' (9143) எனின், அத்தகையோர்க்கு ஈண்டு இடம் இல்லை. வால்மீகி கூறும் கணிகா: அலங்காரப் பொருள்களாக அயோத்தியின் ராஜவீதியில் நிறுத்தப்பட்டனர் (II 3.17; VI 127-3).

திரைமுக்காடு

'திரை இட்டு முகமலர் மறைக்கும்' பழக்கத்தைக் கம்பன் எந்தச் சமூகத்திலும் கூறவில்லை.

அக்கனையும், இந்திரசித்தையும் பறி கொடுத்து 'வயிறு அலைத்து அலறி மாழ்கும்' மண்டோதரி, இராவணன் அவையிலும் முகம் மறைத்ததாகக் கூறப்பட வில்லை. ஆனால் இராவணன் இறந்தபின் போர்க் களத்துக்கு வந்த மண்டோதரி, 'முக்காடு இன்றி நடந்து ஊர்ப்புறத்தே வந்தேனே' எனத் தன்னைத் தானே பழிக்கிறாள் (VI 111.61).

இராவண ஸந்யாஸியிடம் பேசும் சீதை தன் முகத்தை மூடவில்லை. அசோகவனத்தில் இராவணன் அவளை இரக்கவும் பயமுறுத்தவும் வந்தபோது, சீதைக் குத் திரை இல்லை. 'தன் தொடைகளால் வயிற்றையும், கைகளால் முலையையும், கண்ணீரால் திருக்கண்களின் அழகையும் மறைத்தாள்' (V 19.3) என்றே வால்மீகி கூறு கிறார்.

கம்பனில், 'ஆசைப்பாடும் அந்நாணும் அடர்த்திடக் கூசிக் கூசிக் கூறும்' இராவணனுக்குச் சீதை 'பரிந்திலள்— வெய்ய மாற்றங்கள் சொன்னாள்' (5183). ஆனால் தன்னை மறைக்க முற்படவில்லை.

மற்றொரு காட்சி; அவலச் சுவையின் சிகரம். போர் முடிந்தபின், வீடணன் அழைத்துவர, இராமனைக் காணப் பல்லக்கில் களத்துக்கு வந்த சீதையை, இராமன் தீவிழி விழித்து "பெண்ணுக்குக் காப்பு திரை அன்று; வீடு அன்று; சுவர் அன்று; சூழ்ந்திருக்கும் ஏவலாளரும் படைவீரரும் அன்று; அவளுடைய ஒழுக்கமே சிறந்த காப்பு" (VI 114.27)

என்கிறான். சீதை பல்லக்கிலிருந்து இறங்கி நடந்து வருகிறாள். இராமன் அவள்மேல் பழிசுமத்துகிறான். சீதை உடல் குன்றி, நடுநடுங்கி, நாணத்தால் சாம்பி, ஒதுங்க இடமின்றி, பற்றுக்கோடு வேறின்றித் தன் மேனியிலேயே நுழைபவள் போலத் தன் திருக்கைகளால் உடலை மூடிக் கொண்டாள் (116.3).

கம்பன், இந்த நிலையில் இருக்கும் சீதையை, "கண் இணை உதிரமும் புனலும் கான்று உக......உள் நினைப்பு ஓவி நின்று உயிர்ப்பு வீங்கினாள்... பேதுற்றாள்" (10021,2) எனக் காட்டுவான்.

இந்த நிலைகளில் முக்காட்டின் பயன் விளங்குகிறது.

பிறவிக் குணங்கள்

உயிரினங்களின் இயல்புகள், உருவம், அறிவு, பண்புகள், புறக்கூறுகள், அகக்கூறுகள், மன இயக்கம், சொல், செயல்கள் யாவும் அவரவர் பாரம்பரியத்தாலும் சூழ்நிலையாலும் வேறுபடுகின்றன. பாரம்பரியம் என்பது நெடுங்காலமாக, பல தலைமுறைகளில் தாய்வழியிலும் தந்தைவழியிலும் ஒருங்கு இணைந்த உயிர்க்கூறுகளின் தொகுதி ஆகும். சூழ்நிலை காலத்தால் மாறுவது; பரப்பால் அகன்றது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் இது பொது.

தனி ஒருவனுடைய இயல்புக்கு அவன் தாயையோ தந்தையையோ மட்டும் காரணமாகக் கருதி, ஒரு செயலை மட்டும் சான்றாகக் கொண்டு, ஒருபாலினருக்குப் பொதுவிதி புகலுவது அநீதி ஆகும். இவ் அநீதி பெண்ணுக்கு இழைக்கப்படுகிறது.

கைகேயியின் கொடுமைக்குக் காரணம் கூறுகிறான் சுமந்திரன்:

"நான் உன் தலைமுறைப் பண்பை அறிவேன். உன் தாயின் புத்தியை நீ பெற்றுள்ளாய். உன் தந்தை எல்லா உயிர்இனங்களின் பேச்சையும் அறிந்தவன்; ஒரு நாள் எறும்புகள் தமக்குள் பேசிக் கொண்டிருந் ததைக் கேட்டு நகைத்தான். அருகில் இருந்த உன் தாய் அப் பேச்சு என்ன என்று அறிய விரும்பினாள். உன் தந்தை, அதைச் சொன்னால் தான் அப்போதே இறந்துபட நேரும் என்றான். உன் தாய் அவன் சாவையும் பொருட்படுத்தாது சொல்லித் தீரவேண்டும் என வற்புறுத்தினாள். அவன் அன்றே, அப்பொழுதே அவளைத் துறந்தான்". (II 35.17-27) இந்த நிகழ்ச்சியில் கைகேயியின் மனக்கொடுமைக்குச் சுமந்திரன் மூலம் தேடுகிறான்!

'மகன் தந்தையையும் மகள் தாயையும் பின் பற்றும் இயல்புடையவர்" (II 35.28) என்பது அக் கருத்து.

இராமன் பரதனைப் புகழும்போது ஒன்றைச் சொல்வதும் இங்கு கருதத்தக்கது.

"இருகால் பிராணிகள் (மனிதர்) தந்தைவழி இயல்புகள் உடையவர் அன்று; தாய் வழி இயல்புகளை உடையவர் என்பது உலக வழக்கு; அதைப் பரதன் பொய்ப்பித்துள்ளான்"(III 16. 34).

வாலி இறந்த பின் தாரை, "அங்கதன் என்னோடு தொடர்பு உடையவன் அல்லன்; சுக்கிரீவனுக்கே உரியன்" என்றும், "மகனுக்கு உறவு தாய் அன்று; தந்தையும், தந்தை வழிச் சுற்றமுமே" (IV.21.15) என்றும் கூறுவதும் இங்கு எண்ணத்தக்கன.

சீதையைப் பழிக்கும் இராமன் 'நன்மை சால் குலத்தில் பிறந்திலை; கோள்இல் கீடம் போல்

நிலத்தினில் பிறந்தமை நிரப்பினாய் அரோ' (10016) என்று, அவளைப் புழுவுக்கு இணையாக்கி இகழ்கிறான்.

அன்றைய சமூக அமைப்பில், பெண் குழந்தை தாயையும், ஆண் குழந்தை தந்தையையும் பெரும் பாலும் சார்ந்து வாழ்ந்ததால், பெண்ணின் இயல்பு தாய்வழியைத் தழுவியது என்ற கருத்தை இராமன் கூற்று உறுதி செய்கிறது. ஆனால், தாய் அற்ற பெண்ணாகிய சீதையை, அவள் பிறந்த மண்ணைச் சுட்டி இராமன் பழிப்பது அக் கருத்தின் நீட்சி; தகாதது.

பெண்ணின் உடல் உறுப்புக்களைக் குறைத்தல்

குற்றம் செய்தவனுடைய கைகால் முதலிய உறுப்புக் களை வெட்டுதல் குற்றத்துக்குரிய தண்டனையாகக் கருதப்பட்ட காலம் இருந்தது. இன்னமும் சில நாடுகளில் அப்படி இருப்பதாகக் கேள்விப்படுகிறோம். பிறர் குற்றம் புரியாமல் தடுப்பதற்கு எச்சரிக்கை ஆகவும், குற்றவாளி மீண்டும் அக்குற்றம் புரியாமல் தடுக்கவும், இத் தண்டனை ஏற்றதே எனக் காரணம் கூறுவர். அத்தண்டனையால் குற்றவாளியின் பிற உறுப்புக்களுக்கும் உயிருக்கும் ஆபத்து நேரிடலாம் என்பதையும், அந்தத் தண்டனையை இடுபவனும், நிறைவேற்றுபவனும் தம் மனிதத்தன்மையை ஓரள வேனும் இழக்கின்றனர் என்பதையும் எண்ணிப் பார்ப்பதில்லை.

தாடகை இழைத்த கொடுமைகளை விசுவா மித்திரன் இராமனிடம் கூறி அவளைக் 'கொல்வாய்' என இராமனுக்கு ஆணை இடுகிறார் (I 25.22).

தாடகை எதிர்ப்படுகிறாள். பெண் என்பதால் அவளுடைய காதுகளையும் மூக்கு நுனியையும் வெட்டி

னால் போதும், ஓடிவருவதைத் தடுத்தால் போதும், என இராமன் இலக்குவனிடம் சொல்கிறான் (26.10,11). இராமன் அவளுடைய கைகளையும், இலக்குவன் அவளுடைய காது மூக்குகளையும் வெட்டினர் (17; 18). இதைக் கண்ட விசுவாமித்திரன் "அவை போதா, மாலைக் காலம் நெருங்குவதால் அவள் மாயப் போர் செய்வாள்" என எச்சரிக்க, தாடகையும் கல்மாரி பொழிய, நிலை உணர்ந்த இராமன் அவள் மார்பில் அம்பெய்து கொன்றான்.

கம்பனில் இந்நிகழ்ச்சி சிறு மாற்றம் பெறுகிறது. 'பெண் என மனத்திடை பெருந்தகை நினைந்தான்' (374). "அரக்கியைக் கோறி" என அந்தணன் கூற, இராமன் "அறன் அல்லவும் எய்தினால் 'அதுசெய்க' என்று ஏவினால், மெய்ய, நின் உரை வேதம் எனக் கொடு செய்கை அன்றோ அறம் செயும் ஆறு?" (383) என்று சுடுசரம் அவள் நெஞ்சில் விட்டான். அவளுடைய உறுப்புக்களைக் குறைக்கவில்லை.

சூர்ப்பணகை

இராமன்மேல் 'அன்பு இழைத்த வன்பிழை'யாள் (2846) சூர்ப்பணகை. "சீதையை உண்பேன்" எனச் சினத்துடன் அவள்மீது சூர்ப்பணகை பாய, இராமன் அவளை அதட்டி, இலக்குவனை அழைத்து அவளை அங்கஹீநம் செய்யுமாறு ஆணை இட்டான் (III 19.20). இலக்குவன் வாளை உருவி அவளுடைய காது, மூக்குகளை அறுத்தான் (21).

கம்பனில் இந்நிகழ்ச்சி கூறப்படும் வகை: 'தனி இருந்தனள்' சீதை; அவளைக் 'கடிதினின் ஓடினென் எடுத்து, ஒல்லைக், கரந்து, அவள் காதல் வடிவினானுடன் வாழ்வதே மதி' என எண்ணிச் சூர்ப்பணகை அவளைத்

தொடர்ந்தாள் (2821-23). சீதையைக் காத்திருந்த இலக்குவன் அவள் 'ஓதியைப் பற்றி ஈர்த்து, உதைத்து, வாள் உருவி, மூக்கும் காதும் முலைக் கண்களும் போக்கி, அவள் குழல் விட்டான்' (2825). இங்கு இராமனுடைய ஆணை இல்லை. வால்மீகத்தில் கூறப்பட்ட காது, மூக்குகளோடு இலக்குவன் முலையையும் அறுத்தான்.

அயோமுகி

காட்டில் நடந்து கொண்டிருந்த இராமலக்குவரை அயோமுகி கண்டாள். முன்னால் இருந்த இலக்குவனைக் கைகளால் பற்றித் தன்னோடு இன்புற்று இருக்க அழைத்தாள். இலக்குவன், வேறு பேச்சு இன்றி, சினந்து, வாள் உருவி, அவளுடைய காது, மூக்கு, முலைகளைக் குறைத்தான் (III 69. 17).

கம்பனில், நீர் கொணரச் சென்ற இலக்குவனுக்கு, "அன்பினளாயினும், நேசம் இல் நின்பால் ஆசையின் வந்த அயோமுகி" (3592) எனத் தன்னை அறிமுகம் செய்து கொண்டு, தன்னோடு கூடி, "என் இன் உயிரைக் கடிது ஈகுதி" என அழைக்கிறாள். இலக்குவன் "நின் இரு காதொடும் நாசி துமிப்பதன் முன்பு அகல்" (3597) என அதட்டினான். அவள் அகன்று, மாயையால் அவனைப் பற்றி ஏக, இலக்குவன் மூக்கொடு செவி இதழையும் அரிந்தான் (3631). இதைக் கேட்ட இராமன் இலக்குவனை "வல்லை நீ, மனுமுதல் மரபினோய்" எனப் பாராட்டினான் (3632).

இம் மூன்று நிகழ்ச்சிகளிலும் காது, மூக்கு அறுத்தல் கூறப்பட்டுள்ளது. கம்பனில் தாடகையைக் குறித்த நிகழ்ச்சி இலது; சூர்ப்பணகையின் முலைக்கண்களும், அயோமுகியின் இதழும் கூறப்படுகின்றன: அதற்கு,

மனு மரபும் மறைமுக ஆதாரமாக இராமன் வாக்கில் காணப்படுகிறது.

பெரியாழ்வார் சூர்ப்பணகையை 'செவியொடு மூக்கு அரிந்தான்' (3.9-8) எனவும், திருமங்கையாழ்வார் 'வாளால் கொடிமூக்கும் காது இரண்டும் ஈரா,' (சிறிய திருமடல் 7) எனவும், குலசேகரர் 'மூக்கை நீக்கி' (10.5) எனவுமே கூறுகின்றனர்.

தொகுப்புரை

1. வால்மீகி கூறும் பழக்கங்கள்—கம்பன் கூறாதவை:
    1. பெண்ணுக்கு மணம் செய்வித்தல் தந்தையின் கடன்.
    2. மிக்க இளவயதிலேயே ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமணம் செய்விப்பது.
    3. மணமகன் சார்பாக மணமகளை வேட்டல், மகட் கொடை, கந்யா தநம் உண்டு; சில சூழ் நிலைகளில் கந்யா சுல்கம் உண்டு.
    4. திருமணத்துக்குப் பின் மட்டுமே காதல் அரும்பும்.
    5. கணவன் அறத்தினின்று வழுவினால், மனைவி அவனைத் திருத்தும் உரிமை உடையவள்; ஆனால், துறக்கும் உரிமை இல்லாதவள். மனைவியைத் துறக்கும் உரிமை கணவனுக்கு உண்டு.
    6. பெண் ஆணுக்கு போகப் பொருள்; கணிகை ஊருக்கு அழகுப் பொருள்.
    7. ஆணும்பெண்ணும் ஒருங்கு பழகுவார் அல்லர்; பெரும்பாலும் முக்காடு அணியும் வழக்கம் இருந்தது.

8. மனைவி கணவனைப் பெயரிட்டு அழைத்தல் உண்டு.
9. ஆறு, மரங்களுக்குப் பூசை புரிவதால் நன்மை பெறலாம் என்ற நம்பிக்கை.
10. ஆண், பெண் அடிமைகள் இருந்தனர்.

2. வால்மீகிக்கும் கம்பனுக்கும் பொது:
   1. குலம் தொடர, பார் அளிக்க, மைந்தரை வேண்டுதல்.
   2. ஒருத்தி ஒருவனுடன் அறம் ஆற்றுவதே திருமணத்தின் நோக்கம் என்ற பொதுவிதிக்கு சீதை-இராமன் வாழ்க்கை எடுத்துக் காட்டு. ஒருவன் பல பெண்களை மணப்பதும் பொது விதியாக இருந்தது.
   3. மந்திரத்தில் பெண்களுக்குப் பங்கு இல்லை.
   4. பெண் தன் காமத்தை வெளியிடல் தவறு; வெளியிடின் பெண்ணின் உறுப்புக்களைக் குறைத்தல் உரிய தண்டனை.
   5. மகள் தாயின் குணங்களைப் பெற்றிருக்கிறாள் என்ற நம்பிக்கை.

3. வால்மீகியில் காணாமல் கம்பனில் காண்பவை:
   1. ஆணும் பெண்ணும் காதல் கொண்டு களவியலில் பழகியபின் திருமணம் செய்வித்தல்.
   2. திருமணத்தில் தந்தைக்குக் குறிப்பிடத்தக்க பங்கு இல்லை.
   3. தாலியை அணிதல், நீத்தல், தொடல்.
   4. கணவனுடன் மனைவி இறத்தல், எரி மூழ்கல்.
   5. கைம்மை நோன்பு நோற்றல்.

8. முடிவுரை

இந்நூல் ஒரு கண்ணோட்டமே; முற்றுப் பெற்றது அன்று.

சமூகங்களின் கூறுகள் பல. அவற்றில் மிகச் சிலவே இங்குக் கூறப்பட்டுள்ளன. மேலும் பலவற்றைச் சமூக வரலாற்று அறிஞர் ஆராய வேண்டும்.

நம் இலக்கியங்கள் காவியங்கள் பெரும் அளவுக்குக் காட்டுவன சமூகத் தலைவர், உயர் குடியினர், வாழ்க்கை யையே. அவற்றுடன் இடை இடையே பொதுமக்கள் வாழ்க்கையும் விரவி வரும். வருண-வர்க்க பேதங்கள் இச் சமூகங்களில் இருந்தன ஆதலின், இலக்கியங்களைக் கொண்டு சமூகங்களை அறிய முற்படுதல் தவறான முடிவுகளுக்குக் கொண்டு செல்லலாம்.

சமூகங்கள் தொடர்ந்து மாறிக் கொண்டே இருந்தன; இன்னும் மாறிக் கொண்டே இருக்கின்றன. சமூகம் மேற்கொள்ளும் பொருள் உற்பத்தி முறைகள், உடைமை-உரிமை வரையறைகள், ஆட்சி முறைகள், தொழில் உறவுகள், விஞ்ஞான வளர்ச்சி, பிற சமூகங் களுடன் தொடர்புகள். கல்வி-கலைப் பெருக்கங்கள் போன்றவற்றின் தாக்கங்கள் கால அடைவில் குவிந்து மையம் கொள்கின்றன. அவற்றிலிருந்து தோன்றும் அக, புற சக்திகள் சமூக மாற்றங்களை உந்துகின்றன. அவ் உந்தல் புது பொருள்உற்பத்தி முறைகள் போன்றவற்றை உண்டாக்குகின்றன. இச்சுழற்சி தொடர்கிறது. இதுவே சமூக வளர்ச்சி. வளர்ச்சிக்கு ஏற்ப வாழ்க்கை முறை களும், அவற்றின் மதிப்பீட்டு எண்ணங்களும் அமை கின்றன. பழையன கழிய, புதியன புகுகின்றன. இது இயற்கை நெறி.

பழைய சமூகங்களையும், அவற்றில் உண்டான முரண்பாடுகளையும், முரண்பாடுகளால் உண்டான மாறுதல்களையும் நாம் அறிய முற்படுவதன் நோக்கம் புதிய சமூகத்தை வகுக்க அவ் அறிவு பயன்படும் என்பதே.

வால்மீகி கண்ட சமூகங்களினின்று கம்பன் கண்ட சமூகங்கள் மாறுபட்டவை. அவை இரண்டினும் இருந்து நாம் வாழும் சமூகம் மேலும் மாறுபட்டது. எதிர்காலச் சமூகம் அடிப்படையில் மாறுபடும் வாய்ப்பு உளது.

மாறுதலில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது மாறுதலின் வேகம் அபரிமிதமாக, எண்ணவும் கூடாத அளவுக்கு, தடுப்பாற்றலை மீறிப் பெருகலாம் என்பது. அவ்வேகத்தை ஆக்க வழிகளில் செலுத்த மக்கள் பயிலவேண்டும்.


மாறுதலின் வேகம் நாளுக்கு நாள் அதிகரிப்பதை நாம் பலதுறைகளில் காண்கிறோம்.

இன்றைய உலகம் மிகச் சுருங்கி உள்ளது, இன்னம் சுருங்க ஏது உண்டு. ஓர் இடத்தில், ஒருவருக்கோ, ஒரு குழுவினருக்கோ ஏற்படும் தாக்கங்கள் பிற மக்களையும் பிறநாடுகளையும் பாதிக்க வல்லது. இன்றைய நிலையில், சமூகங்களைப் பிரித்துக் காண்பது இயலாது; தவறும் ஆகும். மனித சமூக முழுமையை நாம் மனத்தில் கொள்ள வேண்டும். மக்களின் பிணைப்பும், மாறுதலின் வேகமும், மனித குலத்தை இணைக்கின்றன. இவ் இணைப்பைப் புறக்கணித்து, பிரிவுகளைப் பேணுவதும், மாறுதல்களால் சிலரோ, சில குழுக்களோ, சில நாடுகளோ பயன் பெற முனைவதும், மனிதகுலத்துக்கே ஊறு விளைக்கும்.

ஓர் உலகை, ஒரு மனித சமுதாயத்தை உரு ஆக்க இத்தகைய ஆராய்ச்சிகள் பயன்படவேண்டும் என்பது என் அவா.

திரு நா. வரதராஜுலு நாயுடு

சட்டக் கல்வி பயின்ற இவர் சங்கீதத்திலும் பரமரசிகர். - ஆயுள் காப்புறுதிக் கழகத்தில் மேலாண்மை இயக்குநராக இருந்து ஓய்வு பெற்றவர். ஆயுள் பூராவும் கற்றாலும் முடியாத அளவுக்கு ஆராய்ச்சிக் கண்கொண்டு இலக்கியங்களை நுணுக்கமாகப் பயின்றவர் - தமிழ், தெலுங்கு, வடமொழி, ஆங்கிலம் என்பவற்றுடன் இன்னும் சில மேனாட்டு மொழிகளையும் கற்ற பன்மொழிப் புலமை கொண்ட அறிஞர் - புள்ளிக் கணக்கு ஆய்வுத் துறையில் ஆக்ச்சுவரி ஆக இருந்த இவர், அதில் தாம் பெற்ற அனுபவத்தை இலக்கியங்களையும் கூர்ந்து நோக்குவதில் இப்போது பயன்படுத்துகிறார் - அப்படி ஆய்ந்து வளம்பெருக்கித் தாம் பெற்ற அனுபவத்தால் பல நூல்களைப் பதிப்பித்திருக்கிறார் — அவற்றுள் 'இரணிய வதைப் பரணி' சிறப்பு மிக்கது - பதஞ்சலி யோகஸூத்ரம் பொருள்வாத நோக்கில்' (ஆங்கிலம்) இவர்தம் ஆழ்புலமை, அறிவு பூர்வமான நோக்கு இவற்றைத் தெற்றென விளக்கும் - "காளிதாசன் உவமைகள்" (Similes of Kalidasa) கற்றறிந்த எல்லோராலும் போற்றிப் புகழப்படும் இவர் தம் நூல்களுள் ஒன்று - கம்பனையும் வால்மீகியையும் எத்துணை முறை ஒப்பு நோக்கிப் படித்திருக்கிறார் என்று சொல்ல முடியாத அளவுக்கு இரண்டிலும் தோய்ந்தவர் — இந்த 75 வயதான இளைஞர் இன்னும் பல அரிய நூல்களைப் பதிப்பித்து வெளியிடும் தமிழ்ப்பணியில் ஈடு பட்டிருப்பவர் — குடத்திலிட்ட விளக்காய் இருக்கும் இவர், குணக்குன்று.



கம்பன் கழகம்
சென்னை